உ

சிவமயம்



காரைநகர் வடக்கு பொன்னம்பலம் வீதியில் வாழ்ந்து

13-12-2002 அன்று அமரத்துவம் அடைந்த,

# திருமதி.மணிமேகலை புண்ணியம்

அவர்களின்

## சிவபதப்பேறு குறித்த

# நினைவுமலர்

**12-01-2003**

921
புண்ணி
SLIPR

கொழும்பு தமிழ்

சிவமயம்

# எமது அன்புத் தெய்வத்திற்கு இந்நூல் சமர்ப்பணம்

மண்ணில் மனிதராய், மனிதருள் மாணிக்கமாய், சாஸ்திர-
தோத்திர-தர்ம காரியங்களில் சிறந்தவராய்-விரத
சீலராய்-சிதம்பரரேஸ்வர சிவகாமி பக்தையாய்-
அழுக்காறு, அவா, வெகுளி-இன்னாச் சொல்
இந்நான்கும் அற்றவராய், பண்பு நிறைந்த பேரொளியாய்-
சிவவழிபாட்டின் சிறப்புணர்ந்தவராய்-சிறுமையின்றி
எம்மையெல்லாம் பேணிப் பாதுகாத்து நல்வழிநடாத்தி,
மக்களின் மனங்களில் நிறைந்து, தக்கார் தகவிலார்
என்பது-அவர்தம் எச்சத்தார் காணப் பெறும் என்நின்ற
குறள் வாக்கியத்திற்கு அமைய, நற்காரியங்கள்
பலசெய்து, அமைதியுற வாழ்ந்து, அன்புகனியப் பேசி,
எமக்கெல்லாம் ஆதாரமாயிருந்து, இன்று வானுறையுந்
தெய்வமாகிவிட்ட, எங்கள் அன்புத் தெய்வமாகிய
மணிமேகலை அம்மாவின் பாதங்களில் இம்மலரைச்
சமர்ப்பிக்கின்றோம்.

12-01-2003

இங்ஙனம்
கணவர், மக்கள்,
மருமக்கள்

மலர் ஆக்கம்

சிவானந்தவாரி-காரையூர் பொன் கோபால்.

உ

சிவமயம்

# 31ம் நாள் நினைவஞ்சலி

மண்ணிறக்கம்
07
07
1943



விண்ணேற்றம்
13
12
2002

அமரர்

## திருமதி.புண்ணியம் மணிமேகலை

அவர்கள்

ஆண்டு ரண்டாயிரத்திரண்டு கார்த்திகை பூர்வபக்கம்
பூண்டநவமி திதி வெள்ளிநாள்–நல்லறிவாள்
மணிமேகலை சிவனார் சிவகாமிப தமடைந்தாள்
பணிசெய்த பாரதனை விட்டு.

# எண்ணம்

**ஒருமுளம் உள்ள குட்டம்**
**ஒன்பது துறை உடைத்தாய்,**
**அரைமுளம் அதனகலம்**
**அதனில்வாழ் முதலை ஐந்து,**
**பெருமழை வாழ்தல் பற்றிக்**
**கிடந்துநான் பிதற்றுகின்றேன்,**
**கருமுகில் தவழும் மாடக்**
**கச்சியேகம்ப னீரே!**

**- அப்பர் தேவாரம்.**

**பாடற் கருத்து:-** கரிய முகில்கள் தொட்டு நிற்கக் கூடியதான கோபுரங்களை உடைய திருக்காஞ்சிக் கோயிலின் கண்ணே எழுந்தருளி இருக்கும் ஏகாம்பரநாதரே! எனது (எமது) உடலோ ஒரு முள நீளத்தை உடையதும், ஒன்பது வாசல்களையும் உடைய ஒரு கேணியாகும். இக்கேணியின் அகலமோ அரைமுளமுடையது. இக்குட்டத்தினுள்ளே ஐந்து முதலைகள் (மெய்-வாய்-கண்-மூக்கு-செவி என்பன) இவை என்னை (எம்மை) நல்வழி நாட விடாது அலைகின்றன. இவற்றிலிருந்து விடுபட்டு, உனது கருணையாகிய பெருமழையில் நனைந்து நீந்தி வாழ விரும்புகின்றேன் (விரும்புகின்றோம்) உமது திருவருட் கடாட்சத்தை அருள்வீராக!

-பொன்-ஹோ.

# வாழ்க்கை வரலாறு

01. எழிலோங்கு இலங்கைநகர் வடபாரற் கண்ணே
எழில்துலங்கு ஆலயங்கள் அறவாணர்கள்
களிகொள்ளும் ஆடலொடு பாடல்வ ல்லார்
தெளிவான அறிவாளர் சிறப்பின் "சின்னோர்"

02 பலர் வாழும் பண்புறிறை பண்டை நாடாம்
பண்ணிசைத்துப் புகழ்பெற்ற யாழ்ப் பாணத்தின்
நல்வடக்காய் சிவகாமி சிதம்ப ரேசர்
நற்கோயில், பள்ளி, பலநி றுவனங்கள்,

03 சொல்லரிய நயங்கள் சூழ்கா ரையூரில்
முல்லைமுனகப் பல்லழி சிவகாமி,சி வனார்தாமும்
அல்லல்கழை முத்துமாரி அருளுங் கூட
எல்லையிலாப் பெருவாழ்வு வாழ்ந்து வந்த,

04 தண்மொழியார் பெரியபிள்ளை நங்கை யாரை
திண்மதியார் அரியகுட்டி கைப் பிடித்து
கண்ணெனவும் மணியெனவும் வாழும் நாளில்
திண்மையுடை சின்னத்துரை செல்(ல) அம்மா

05 நல்மதியார் செல்லத்து ரை,ஐயாத் துரை,
நல்வார்த்தை ப்புண்ணியனார், செல்ல முத்து
நல்லிணக்கச் சோதரர்கள் மக்க ளானார்- இவர்களிலே
பல்மொழியோ டுறுதியுடன் பேசும் ஆற்றல்

06 கொண்டவராய் அரசதொழில் புண்ணியனார் செய்யும்நாளில்
பண்டுபல பெரியார்கள் தர்மாவா ன்கள்
நண்டுமன மில்லார்கள் வாழ்ந்த காரை
பண்டத்தரி ப்பான்புலத்து சிவனார் காமி



07. கழலடியே தஞ்சமெனப் பணிந்து வாழ்ந்த
பிழையிலார் சின்னத்துரை பாய்கிய(ம்)மாள்
குழைகாதன் திருவருளால் பெற்றேடுத்த(தார்)
வழைக் கையாள் மணிமேகலை அவரின் பின்னால்.

08. அமைதியே உருவான சரோஜினி தேவி,
அவர்பின்னால் அரசதொழில் வனதே வாவும்,
அடக்கமுளாள் அன்புமொழி கலா நிதியும்
அடக்கமுடன் நால்வரும் வாழும் நாளில்.

09. கண்டியார் தொண்டியாம் மணிமே கலையை
கண்டனார் தொண்டனாம் புண்ணி யர்க்கு
அண்டர்களும், மண்ணவரும் சாட்சி யாக
பண்டு முறைப்படி வதுவை செய்வித்தாரே!-இந்நாளில்

10. மண்ணினிற் பிறந்தார் பெறும்பயன் இதுவென
மண்ணினில் மணியம்மா தானந்-தர்மம்
மண்ணினில் சாத்திரம் தோத்திரங் கண்டு
மண்ணினிற் புண்ணிய னாரொடு வாழ்நாள்;

11. தங்கநிகர் மகன் கிருஸ்ண தாசன்
பங்கம தில்லாள் பங்கயற் செல்வி,
நந்தவனத்து மலர்கள், போல் மக்களிற்கு,
சுந்தரவதனி பாமினி அம்மையார்

12. கந்தவேழ் பேரான் ஆறுமுக தாஸன்
சந்ததம் பிரியா மருமக்க ளாக்கி
இங்கிதமாக இருந் திடுநா ட்களில்,
வந்தனர் பேரர்கள் பிரியங்கா, அபிராமி,

13. கீர்த்தனா மயூரகீர்த்தன், பவப்பிரியா பேரர்களாய்-கண்டு
கீர்த்திகள் செய்தனர் சிறப்புற வாழ்ந்தனள்!
கார்த்திகைத் திங்கள் கண்டு மகிழ்ந்தனள்!
ஆர்த்தெழு வீரபத் திரன் ஆலயம்.

14. தோத்திரம் ஓதினன் தொழுதுவீ டடைந்தனள்!
பார்த்தமணாளன் பதறித் துடித்தனர்!
சார்த்தி அணைந்தனர் சடுதியில் ஆவீ
பார்த்த புண்ணியர் பதறிடப் பிரிந்ததே!

15. சாதலும் பிறத்தலும் தவிர்கோ ணாதது
சாதலும் பிறத்தலுந் தவிர்க்க வேண்டின்
சாதலும் பிறத்தலும் இலானடி பணிவீர்!
சாதலும் பிறத்தலும் சகலர்க்கும் உண்டே!

***"உதித்த உயிர்கள் மரிப்பது இயற்கை!
மரிப்பை எண்ணி மனச்சோர் வடையீர்!"***

## வேறு வரிகள்

| | | |
|---|---|---|
| வருவதும் போவதும் | - | இன்பம்-துன்பம் |
| வந்தால் போகாதது | - | புகழ்-பழி |
| போனால் வராதது | - | மானம்-உயிர் |
| தானாக வருவது | - | இளமை-மூப்பு |
| நம்முடன் வருவது | - | பாவம்-புண்ணியம் |
| அடக்க முடியாதது | - | ஆசை-துக்கம் |
| தவிர்க்க முடியாதது | - | பசி-தாகம் |
| பிரிக்க முடியாதது | - | பந்தம்-பாசம் |



# புலம்பல்கள்

## மணாளன் புலம்பல்

மங்காத என்செல்வம்! மணிமேகலை! அம்மா!
உங்காதல் வயப்பட்டு உறுதிகுலை கிறேன்யான்
மங்காத உன்முகத்தை மணாளனுக்குக் காட்டீரோ?
சங்கார சூரயமன் சடுதியிலுன் உயிர்ப்பிரித்தான்
எங்கேயான் ஆறுவது என்கண்ணே! வாரீரோ!
மங்கா மணிவிளக்கே! மணியம்மா! வாரீரோ!!

## மகள் பங்கயற்செல்வி புலம்பல்

நன்றாக வளர்த்தெடுத்தாய் நான்வளர்ந்தேன் உனதன்பால்
நன்றாகப் பேசியம்மா! நற்கல்வி புகட்டி வைத்தாய்
என்னம்மா! எங்குள்ளீர் என்னைவிட்டு? யான கலங்க
என்னம்மா! உன்னினைவால் எத்தனைநாள் நானழுவேன்?
நன்று! இது நல்லதல்ல நமனேனோ கொண்டு சென்றான்?
நின்றுகதை பேசவாரும் நின்மகளார் "பவா" வோடு
என்று வருவீரோ? ஏங்கிமகள் வாடுகின்றேன்.
கண்டு மனமாறக் கண்ணெதிரே வாருமம்மா!

## மகன் கிருஸ்ணதாஸன் (கனடா) புலம்பல்

நாடியெனை வளர்த்த நற்தாயே! எனைக் காத்தோய்!
நாடுவிட்டு நான்சென்று நாயேன் பிரிந்திருந்து
நாடிவந்து கண்டு நாட்கள்பல ஆகுமுன்னே
ஓடிவந்த அந்தநமன் உன்னாவி பிரித்தானோ?
ஆடிபாதம் அடைந்தாயோ? அம்மைபாதஞ் சேர்ந்தாயோ?
வந்துகண்டு போங்களம்மா! வயிறுஎ ரியுதம்மா!
சந்தனத் திருமேனித் தாயே! உன்மகனார்
சந்தமும் வாடுகின்றேன் சலிப்பாற்ற வாருமம்மா!

## மருமகன் (யாழ்ப்பாணம்) ஆறுமுகதாஸன்

(சுகாதார பரிசோதகர்)

## மருமகள்(கனடா) பாமினி புலம்பல்

மங்காத எங்கள் பேரன்பு மாமியரே!
எங்கள் மனம் நிறைந்த நல்லகுண மாமியரே!
எக்குற்றங் கண்டாலும் இன்புற்ற மாமியரே!
இங்கெம்மை இருத்திவிட்டு எங்குற்றீர் மாமியரே!
கங்கைச்சடையானைக் கைதொழுத மாமியரே!
உங்கள் சிவகாமி உவந்து அழைத்துநிற்க,
எங்கள் கணேசனார் ஏற்று அருள் சுரக்க,
பொங்கி அழுகின்றோம் யாம் தாஸனுடன் பாமினியும்
இங்கெம்மைக் காண்பதற்கு இடம்விட்டு ஓடிவாரும்!

## பேரப்பிள்ளைகள் புலம்பல்

## பிரியங்கா, அபிராமி(கனடா), கீர்த்தனா மயூ ரகீர்த்தன் பவப்பிரியா(யாழ்ப்பாணம்)

பேணி எடுக்கியெமைப் பேரின்பக் காதலுடன்
ஆணிமுத்தேயென்று அன்புசெய்த அம்மம்மா!
கோணிக் குறுகிமனங் குமுறுதம்மா உன்பிரிவால்.
ஆணிமுத்தே! ஓடிவாரும் அப்பம்மா! அப்பம்மா!!
பாசமொடு நேசமாகிப் பழகியெமை அணைத்து
ஆசையுடன் பேசி அன்புசெய்த அம்மம்மா!
நேசமுடன் பேசி முத்தமிட்ட அம்மம்மா!- (உனைப்)
பாசவலை கொண்டு பற்றவந்த அந்தகனார்-(ஆலயத்தில்)
பாடிவந்த உன்னுயிரைப் பிரித்தெடுத்துப் போனானோ?
ஆசையுள்ள அம்மம்மா! அலறுகின்றேன் கீர்த்தனா!
தேசமுள்ள அம்மம்மா! நீ, மயூரன் காணவா!
பேசிவிளையாட வாரும் பவப்பிரியா வாடுகின்றேன்
நேசம் விட்டு நாமிருந்தோம் தீப்பந்தம் பிடிக்கவில்லை
பாசமுள்ள அப்பமம்மா! உன்-பிரியங்கா, அபிராமி
ஆசையுடன் அழைக்கின்றோம் அணைத்தெடுக்க வாரீரோ!
பேச வருவீரோ? பேரர்கள் மனமாற.



## சகோதரன்: வனதேவா (ஒஸ்ரேலியா) சகோதரிகள்: சரோஜினிதேவி, கலாநிதி (கொழும்பு) புலம்பல்

சகஉதரராய்ப் பிறந்து தாயன்புபோல் வளர்ந்தோம்
முகமலர்ந்து பேசிவந்தோம் முறுகல்நிலை அற்றிருந்தோம்
பகலிரவாய்ப் பழகிவந்தோம் பட்டமரமா னோமக்கா!
இகத்திலெமை இருத்திவிட்டு எங்குற்றீர்? சோதரியே!
அகத்தில் எமையிருத்தி அன்புசெய்த அக்காளே!
இகத்திலெமைக் காண்பதற்கு பரத்தைவிட்டுவாரீ ரோ?
நன்றாக அன்புசெய்தாய் நான்தேவா நலிகின்றேன்.
நன்றாகப் பழகிவந்தாய் நான்கலா கலங்குகின்றேன்.
நன்றாக உபசரித்தாய் நான் சரோ வாடுகின்றேன்.
குன்றனையாய்! கோமளமே! கூவுகின்றோம் ஓடிவாரீர்!

## மைத்துன, மைத்தினிகள் அண்ணன்மார் புலம்பல்

அன்புகாட்டி அரவணைத்து ஆறுதல்வார்த்தை கூறி
துன்புற்ற போதெல்லாந் துணைசெய்த மைத்துனியே!
இன்னாத சொல்லாய் அண்ணுவென அழைப்பாய்!
இன்னாத பேசாய் அண்ணியென அழைப்பாய்!
பொன்போன்ற சொற்களால் பூரிக்க வைத்திடுவாய்!
நற்குணத்தோய்! நல்லம்மா, செல்லத்துரை, செல்லம்மா
பொற்புடையோய்! சண்முகம், லெட்சுமி, கனகேஸ்வரி-நாம்,
உற்றதுணை யின்றி ஊஞ்சல்போல் ஆடுகின்றோம்.
நற்றவத்தார் உலகுவிட்டு நமைக்காண வாரீரோ?
குற்றமற்ற வார்த்தை சொல்லிக் குளிரவைத்த மைத்துனியே
அற்றஎமக் காதரவாய் அமைந்திருந்த மைத்துனியே!
கத்துகிறேன் தர்மலிங்கம் கண்டாற வாரீரோ?
நற்றவத்தோய்! மணிமதனி! நடேசலிங்கம் வருந்துகிறேன்
உற்றவென் மனமாற உடனோடி வாமதனி!

## பேரமக்கள் புலம்பல்

பெரியம்மா! நீயென்னைப் பேணி அனுசரித்தாய்
பெரியம்மா! உனைநினைந்து பேயறைந்த போலானேன்
பெரியம்மா! உன்னுருவம் பேதையேன் காணுமுன்னே!
பெரியம்மா! சுடுகாட்டில் பெருஞ்சோதி ஆனாயணை
பெரியம்மா! சோதியென்று பேசிடநீ வாராயோ?
பெரியம்மா! நீவந்தால் பிஞ்சுமனம் ஆறுமணை!
அம்மன்யான் பெரியம்மா! அலறித்துடிக்கின்றேன்?
இம்மண்ணில் உதயா ஓய்வின்றிக் கதறுகின்றேன்,
இம்மண்ணில் பெரியம்மா! எனக்குத் துணைதேடி
இம்மண்ணை விட்டு எனையனுப்பி வைத்தவளே!
எந்தனிடகாதுகளில் எட்டியதும் உன்செய்தி
நொந்து மெலிந்துநான் பட்டமரமா னேனம்மா!
அந்தநமண் உன்னாவி அள்ளினனோ? கொள்ளிக்கண்ணன்
அந்தயமன் கட்டுவிட்டு வாணியா னாறவாரும்.
பெரியம்மா! கலாநிதியின் பிள்ளைகள் நாம் கதறுகின்றோம்.
பெரியம்மா! போனவிடம் போகுமுன் சொல்லலையே!
பெரியம்மா! நீவந்தால் பேதைமனம் ஆறுமம்மா!

## உற்றார், உறவினர் உழைசல்

பாசமொடு நேசமாகிப் பழகநல்ல இனியவளாய்
ஆசைகொண்டு எங்களுடன் அன்புசெய்த மணியாரே!
பூசையொடு விழாக்கள் புண்ணியர்க்குச் செய்தவளே!
மாசிலான் ஆலயத்தில் பலபணிகள் முடித்தவளே!
நேசமுடன் சிவகாமி திருக்கோயில் சூழ்ந்தவளே!
பாசவலை கொண்டு பற்றினனோ? அந்த யமன்
பாசமுடன் பலசெய்தி பக்குவமாய் தெரிதருவாய்!
நேசமுடன்காரை சிவசக்தி வீரபத்ரர்
பாசப்பிடியான் உயிர் பற்றாது ஏற்றனரோ?
ஓசை அடங்கிநாம் உன்னினைவால் வாடுகின்றோம்.
ஆசைகொண்டோம் வாருமம்மா! அன்புள்ள மணியாரே!
ஆசையுடன் பேசி அறிந்திடநாம் பலவிடயம்.



## தேற்றம்

ஆதிசிவனாரின் ஆணைப்படி, பிரம்மதேவரானவர், அப்பு~தேயு~வாயு~ஆகாயம்~பூமி என்கின்ற பஞ்சபூதசேர்க்கையால் இவ்வுடம்பெனும் (மானுடம்) தோணியை ஆக்கி, உயிரெனம் உந்து கருவியைப் பொருத்தி, நல்வினை~தீவினை என்கின்ற சரக்கு மூடைகளை ஏற்றி, நான்~எனது என்கின்ற, அகங்கார, மமகாரங்களாகிய இருமாலுமிகளைச் (சுக்கானிகளாக) அமைத்து, மெய்~வாய்~கண்~மூக்கு~செவி என்கின்ற கொள்கலன்களை வெறுமனே வைத்து, "விதி" என்கின்ற சாரதியைக் கூட்டி இப்பூமியாகிய கடலின் கண்ணே அனுப்பி உள்ளான். "பூமியாகிய சமுத்திரத்திலே, ஓடமானது ஏற்றிவந்த சரக்குகள் விலைபோனபின்" (ஓடமாகிய உடம்பானது (மெய்) நீங்கலாக) நான்கு வெற்றுக் கொள்கலன்களிலும், நால்வகைச் சரக்குகளை நிரப்பி, "உயிர்" என்கின்ற சக்தியை (எஞ்சின்) ஓடத்திரிருந்து பிரித்தெடுத்து "விதி" என்கின்ற சாரதியார் செல்வார்! செல்ல, அப்போது ஓடமாகிய உடம்பானவர் ஓரிடத்தில் தரித்திட ஊரார்கள் நன்று, தீது பேசி, சுடுகாடு சுமந்து சென்று எரியூட்டி அழித்துவிடுவர். "உயிரார் மண்ணில் தான் செய்து கொண்ட வினைப் போகங்களிற்கு ஒப்ப மறுஜன்மம் எடுப்பர்" (உடம்பார் அழிவர்~உயிரார் அழியார்!) காயமானது பொய்! அது காற்றடைத்தபை! இதற்கேதும் மகிழ வேண்டாம்!!

இவ்வாறே, புண்ணியம் மணிமேகலை அவர்கள் தன் வாழ்நாட்களிலே, ஆலயத் திருப்பணிகள், சுற்றார் சுமைதீர்த்தல், அன்பர் பணி செய்தல் முதலிய பல நல்லறங்களைச் செய்து, நல்லாள் எனப் படியில் வாழ்ந்து, தனது 59வயது 05மாதம் 06வது நாட்களில் நிறைவில் தான் பூமிக்கு வந்த காரியத்தை (வினைவழி) முடித்துக் கொண்டார்!. 60வது வயதில் அன்புமணி அகன்றிடினும் அனார் அதிகம் வயது வாழவேண்டிய தேவை அவ்வழியில் செல்பவர்க்கு ஊன்றுகோலாகும்!

**அன்னாரது ஆத்மா சாந்தி அடையட்டும்!**
**பிரார்த்திப்போம் ஆறுதலடைவோம்.**

## பன்னிரு திருமுறைத் தொகுப்புகள்



### கணபதி வணக்கம்

தண்டாயுதமுஞ் சூலாயுதமுஞ் தாங்கி யென்னைக்
கண்டாவி கொள நமன் வரும்போது காத்திடுவாய்!
வண்டார வாரஞ்செய் மலர்ச்சோலை வளப்பம் மிக்க
விண்டாவிய கடவூர் வாழுங் கள்ள விநாயகனே!

~திருக்கடவூர் வெண்பா

### கந்தநாதன் வணக்கம்

சூலம்பிடித்து யமபாஞ்சுழற்றித் தொடர்ந்து வரு
காலன்றனக்கு ஒருகாலுமஞ்சேன்! கடல்மீ தெழுந்த
ஆலாம்குடித்த பெருமான் குமாரன் ஆறுமுகவன்
தாழுஞ்சிலம்பும், சதங்கையுஞ், சண்முகமுந், தோளுங் கடம்பும்-
-என்முன்னே வந்து தோன்றிடினே!

~கந்தலங்காரம் அருணகிரிநாதர்.

### அம்பாள் வணக்கம்

பாரிடத்தும், மண்ணிடத்தும், பாவியேற்க் குற்றகுறை
யாரிடத்தே யான்சொல்வேன்? அனுசரிப்பார் யாருமிலை
சேரிடத்தே நின்றாயிந்தச் சிறியேன்தன் வினைதீர்க்கச்
சீரிடத்தே மல்கினுவைச் சிவகாமி சுந்தரியே!

~சின்னத்தம்பிப்புலவர்



## பன்னிருதிருமுறைகள்

### 1ம் திருமுறை-திருஞானசம்பந்தர் சுவாமிகள்

அச்சமிலர் பாவமிலர் கேடுமிலர் அடியார்
நிச்சமுறு நோயுமிலர் தாமும் நின்றியூரில்
நச்சமிட றுடையார் நறுங் கொன்றை நயந்தாளும்
பச்சமுடை அடிகள்திருப் பாதம்பணிவாரே!-

-திருநின்றியூர் தேவாரம்

### 2ம் திருமுறை-திருஞானசம்பந்தர் சுவாமிகள்

எயிலறு அட்டதுநீறு இருமைக்கும் உள்ளதுநீறு
பயிலப் படுவதுநீறு பாக்கிய மாவது நீறு
துயிலைத் தடுப்பது நீறு சுத்தம தாவது நீறு
அயிலைப் பொலிதரு சூலத் தாலவாயான் திருநீறே!.

-திருஆலவாய்ப்பதிகம்

### 3ம் திருமுறை-பாலறாவாயர்

வாழ்வினுஞ் சாவினும் வருந்தினும் போய்
வீழினும் உனகழல் விடுவே னல்லேன்
தாழிளந் தடம்புனல் தயங்கு சென்னி(ப்)
போழிள மதிவைத்த புண்ணியனே!
இதுவோ எமை ஆளுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோ உனதின்னருள் ஆவடுதுறை அரனே!

-திருவாடுதுறை

### 4ம் திருமுறை-திருஞானசம்பந்த சுவாமிகள்

மனைவி தாய் தந்தை மக்கள் மற்றுள சுற்ற மென்னும்
வினையுளே விழுந்தழுந்தி வேதனைக் கிடமாகாதே
கனையுமா கடல்சூழ் நாகைமன்னு காரோணத்தானை
!நினையுமா வல்லீராகில் உய்யலாம் நெஞ்சினீரே!

-திருநாகைக்காரோணம்

**5ம் திருமுறை-திருநாவுக்கரசு சுவாமிகள்**

வைத்த மாடும் மனைவியும் மக்கள்
செத்த போது செறியார், பிரிவாரே!
நித்தம் நீலக் குடியரனை நந்நினை
சித்தம் ஆகில் சிவகதி சேர்திரே!-

-திருநீலக்குடி பதிகம்

**6ம் திருமுறை-அப்பர் சுவாமிகள்**

ஐயினான் மிடறலைப்புண் டாக்கை விட்டு
ஆவியார் போவதுமே அகத்தார் கூடி
மையினால் கண்ணெழுதி மாலை சூட்டி
மயானத்தில் இடுவதன்முன் மிதியஞ் சூடும்
மையனார்க் காளாகி அன்பு மிக்கு
அகங்குழைந்து மெய்யரும்பி அடிகள் பாதங்
கையினால் தொழுமடியார் நெஞ்சின் உள்ளே
கான்றாப்பூர் நடுதறியைக் காண லாமே!

-பொதுத்திருத்தாண்டகம்

**7-ம் திருமுறை-சுந்தரமூர்த்தி சுவாமிகள்**

பாரூரும் அரவல்குல் உமைநங்கை அவள்பங்கன்
பைங்கண் ஏற்றான்
ஊரூரன் தருமனார் செக்கிலி டும்போது
தடுத்தாட் கொள்வான்
ஆரூரன் தம்பிரான் ஆரூரன் மீகொங்கில்
அணிகாஞ் சிவாய்ப்
பேரூரர் பெருமானைப் புரியூர்ச்சிற் றம்பலத்தே
பெற்றா மன்றோ!

-கோயில்-சிதம்பரம்



**8ம் திருமுறை-மாணிக்கவாசக சுவாமிகள் திருவாசகம்**

தவமே புரிந்திலன் தண்மலர் இட்டுமுட் டாதிறைஞ்சேன்
அவமே பிறந்த அருவினையே னுனக்க ன்பருள்ளாஞ்
சிவமே பெறுந்திரு எய்திற்றி லேன்நின் திருவடிக்காம்
பவமே அருளுகண் டாயடியேற்கெம் பரம்பரனே!

-திருச்சதகம் 5ம் பாடல்

**9ம் திருமுறை-திருஇசைப்பா, திருப்பல்லாண்டு**

நையாத மனத்தினனை நைவிப்பான் இத்தெருவே
ஐயா! நீ உலாப்போந்த அன்றுமுதல் இன்றுவரை
கையாரத் தொழுதருவி கண்ணாரச் சொரிந்தாலுஞ்
செய்யாயோ அருள்? கோடைத் திரைலோக்ய சுந்தரனே!

-திருஆலவாய்ப்பதிகம்

**திருப்பல்லாண்டு**

சீருந்திருவும் பொலியச் சிவலோக நாயகன் நாயகன் திருவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவு பெற்றேன்! பெற்றதார் பெறுவார்? உலகில்
ஊரும் உலகுங்கழற உமைமண வாளனுக் காட்
பாரும் விசும்பும் அறியும் பரிசுநாம் பல்லாண்டு கூறுதுமே!.

-சேந்தனார்

**10ம் திருமுறை திருமந்திரம் திருமூலர்**

பொல்லாப் புலாலை உண்ணும் புலையாரை
எல்லாருங் காண இயமன்றான் தூதுவர்
செல்லாக்காப் பற்றித் தீவாய் நரகினில்
மல்லாக்காத் தள்ளி மறித்து வைப்பாரே!

-திருமந்திரம்

**11ம் திருமுறை தொகை அடியார்கள் (01)**

பிறந்து மொழிபயின்ற பின்னெல்லாங் காதல்
சிறந்துநின் சேவடியே சேர்ந்தேன் -நிறந்திகழும்
மைஞ்ஞான்ற கண்டத்து வானோர் பெருமானே!
எஞ்ஞான்று தீர்பதிடர்?

-காரைக்கால் அம்மையார்

(02)

முடிசார்ந்த மன்னரும் மற்றுமு ள்ளோரும் முடிவிலொரு
பிடிசாம்பராய் வெந்து மண்ணாவதுங் .கண்டு பின்னுமிந்தப்
படிசார்ந்த வாழ்வை நினைப்பதல்லால் பொன்னி னம்பலவன்
அடிசார்ந்து நாமுய்ய வேண்டுமென் றேயறிவா ரில்லையே!

-பட்டினத்தார்

### 3.திருமுருகாற்றுப்படை (வெண்பா)

ஐந்துமுகந் தோன்றின் ஆறுமுகம் தோன்றும்
வெஞ்சமரில் அஞ்சலெனில் வேல்தோன்றும்-நெஞ்சின்
ஒருகால் நினைக்கில் இருகாலுந் தோன்றும்
முருகா!வென் றேதுவார் முன்.

-நற்கீரமுனிவர்

### 12ம்- திருமுறை-பெரியபுராணம்-சேக்கிழார் சுவாமிகள்

மண்ணினிற் பிறந்தார் பெறும்பயன் மதிசூடும்
அண்ணலார் அடியார்தமை அமுதுசெய்வித்தல்
கண்ணினால் அவர்நல்விழாப் பொலிவுகண்டார் தல்
உண்மையா மெனில் உலகர்முன் வருகென உரைப்பார்.

-திருஞானக்குழந்தை என்பைப்பூம்பாவை
ஆக்கிய புராணம்

### திருப்புகழ் அருணகிரிநாத சுவாமிகள்

இருமல் லுரோகம் முயலகன் வாதம்
எரிகுண நாசி விடமே தீர்
இழிவு விடாத தலைவலி சோகை
எழுகழ மாலை இவை யோடே
பெருவயி றிளை எரிகுலை சூலை
பெருவலி வேறும் உளநோய்கள்
பிறவிகள் தோறும் எனை நலியாத
படியுன தாழ்கள் அருள் வாயே!
வருமொரு கோடி அசுரர் பதாதி
மடிய அனேக இசை பாடி
வருமொரு கால பைரவர் ஆட
வடிசுடர் வேலை விடு வோனே!
தருநிழல் மீதில் உனறமு கிலூர்தி
தருதிரு மாதின் மணவாளா!
சலமிடை பூவின் நடுவினி வீறு
தணிமலை மேவும் பெரு மானே!

-தணிகைத் திருப்புகழ்

### "பிறவி தீர்ப்பீர்"

ஒருமானைக் கரத்தில் வைத்தார் ஒருமானைச் சிரத்தில் வைத்தார் உலகமேழுங் தொழுமானை இடத்தில் வைத்தருள் வானைப் பவளநிறச் சைலம் போலும் வருமானை முகத்தானைப் படைத்தானை, அருணகிரிப் பெருமானை "அடிபரவிப் பிறவி தீர்ப்பாம்"-

~அருணாசலபுராணம்

### சிந்திக்கச் சிலவரிகள்

01. வீரனானவன் மரணத்திற்கு அஞ்சமாட்டான்.
02. நீரில் எழுதிய கோலம் போன்றது (மனிதவாழ்வு
03. பிராரத்வத்தை விலக்குவார் யார்?
04. நீதியற்றவனிடந் தர்மம் நிலைத்து நிற்காது.
05. தர்மம் தலைகாக்கும்!
06. தம்பியுள்ளான் சண்டைக்கஞ்சான்
07. கோடரிக் காம்பு குலத்துக்கு ஈனம்.
09. மரணமென்பது யாவருக்கும் இயற்கையாய் அமைந்ததே!
10. சூடுகண்ட பூனை அடுப்படியை நாடாது.
11. உள்ளியர் தெள்ளியர் ஆயினும்- ஊழ்வினை பைய நுழைந்து விடும்.
12. மரமேறுபவனை எத்தனை தூரம் தாங்கலாம்.
13. கட்டுச்சோறும், சொல்லிக் கொடுத்த வார்த்தையும் நிலைநிற்காது.
14. கீரைக்குள் புல்லுருவி முளைத்தது போல்...
15. பொறுமை மனிதனின் உயர்ச்சி.
16. மேலோர் எப்பொழுதுங் கீழ்படிவர்.
17. ஆழமறியாது காலை விடக்கூடாது.

உ

சிவமயம்



தேவராய சுவாமிகள் அருளிய

# கந்தர்சஷ்டி கவசம்

காப்பு

*அமரர் இடர் தீர புரிந்த*
*குமரன் அடி நெஞ்சே குறி*

துதிப்போர்க்கு வல்வினைபோம். துன்பம் போம் நெஞ்சில்
பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் கதித்(து) ஓங்கும்
நிஷ்டையும் கைகூடும் நிமலன் அருள் கந்தர்
சஸ்டி கவசந்தனை.

**நூல்**

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவும் செங்கதிர் வேலோன்
பாதம் இரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணி யாட
மையல் நடஞ்செயும் மயில்வா கனனார்
கையில்வே லால்எனைக் காக்கவென்று வந்து
வரவர வேலா யுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா எண்டிசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக
வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக
சரவண பவனார் சீக்கிரம் வருக
ரவண பவச ரரரர ரரர



ரிவண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரவண வீரா நமோநம
நிபவ சரவண நிறநிற நிறனெ
வசுர வணப வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை யாளும் இளையோன் கையில்
பன்னிரண்டாயுதம் பாசாங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க
விரைந்தெனைக் காக்க வேலோன் வருக
ஐயும் கிலியும் அடைவுடன் செவ்வும்
உய்யொளி சௌவும் உயிரையும் கிலியும்
கிலியின் சௌவும் கிளரொளி ஐயும்
நிலைபெற் றென்முன் நித்தமும் ஒளிரும்
சண்முகன் றீயும் தனியொளி ஒவ்வும்
குண்டலி யாம்சிவ குகன்தினம் வருக
ஆறு முகமும் அணிமுடி யாறும்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச் செவ்வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகு குண்டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல்பூஷ ணமும் பதக்கமும் தரித்து
நன்மணி பூண்ட நவரத்ன மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழ குடைய திருவயி றுந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்னம் பதித்த நற்சீ ராவும்
இருதொடை யழகும் இணைமுழந் தாளும்
திருவடி யதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகென
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடுடு டுடுடுடு டுடுடுடு டுடுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு

விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
எந்தனை யாளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந்துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோதனென்(று)
உன்திரு வடியை உறுதியென் றெண்ணும்
என்தலை வைத்துன் இணையடி காக்க
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வேல் இரண்டும் கண்ணினைக் காக்க
விதிசெவி இரண்டும் வேலவர் காக்க
நாசிகள் இரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்னம் இரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்ன வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவேல் இருதோள் வளம்பெற காக்க
பிடறிகள் இரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதி னாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை அழகுறச் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண் பெண் குறிகளை அயில்வேல் காக்க
பிட்டம் இரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வல்வேல் காக்க
பணைத்தொடை இரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிரல் அடியினை அருள்வேல் காக்க
கைகள் இரண்டும் கருணைவேல் காக்க
முன்கை இரண்டும் முரண்வேல் காக்க



பின்கை இரண்டும் பின்னவள் இருக்க
நாவில் சரஸ்வதி நற்றுணையாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பால் நாடியை முனைவேல் காக்க
எப்பொழு தும்எனை எதிர்வேல் காக்க
அடியேன் வதனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க
அரையிருள் தன்னில் அனையவேல் காக்க
ஏமத்தில் யாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீங்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியினில் நோக்க
தாக்க தாக்க தடையறத் தாக்க
பார்க்கப் பார்க்கப் பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை அகல
வல்ல பூதம் வலாஷ்டிகப் பேய்கள்
அல்லற் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரம ராக்ஷதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசி காட்டேறி இத்துன்ப சேனையும்
எல்லிலும் இருட்டிலும் எதிர்படும் மண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோ டனைவரும்
விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தட்டியக் காரரும் சண்டாளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந்(து) ஓடிட
ஆனை அடியினில் அரும்பா வைகளும்
பூனை மயிரும் பிள்ளைகள் என்பும்
நகமும் மயிரும் நீண்முடி மண்டையும்
பாவைகளுடனே பலகல சத்துடன்
தரையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டிய பாவையும் ஒட்டிய செருக்கும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதுமஞ்சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட

மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
கால தூதாள்எனைக் கண்டால் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட் டலறி மதிகெட் டோடப்
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டு னங்கம் கதறிடக் கட்டு
கட்டு உருட்டு கால்கை முறியக்
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு விழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதில்செதி லாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணலது வாக
விடுவிடு வேலை வெருண்டது ஓட
புலியும் நரியும் ~~யோசத்தொடு~~ நாயும் புன்னரி
எலியும் கரடியும் இனித்தொடா தோடத்
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்துய ரங்கம்
ஏறிய விஷங்கள் எளிதினில் இறங்க
ஒளிப்பும் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதம் சயித்தியம் வலிப்பு பித்தம்
சூலைசயம் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் புருதி
பக்கப் பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத் தரணை பருவரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லா தோட நீயெனக் கருள்வாய்
ஈரே ழுலகமும் எனக்குற வாக
ஆணும் பெண்ணும் அனைவரும் எனக்கா
மண்ணாள் அரசரும் மகிழ்ந்துற வாகவும்
உன்னைத் துதிக்க உன்திரு நாமம்
சரவண பவனே சையொளி பவனே
திரிபுர பவனே திகழொளி பவனே
பரிபுர பவனே பவம்ஒழி பவனே
அரிதிரு மருகா அமரா பதியைக்



காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர்வே லவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை அழித்த இனியவேல் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர்கா மத்துறை கதிர்வேல் முருகா
பழனிப் பதிவேல் பாலகுமரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தின்மா மலையுறும் செங்கல்வ ராயா
சமரா புரிவாழ் சண்முகத் தரசே
காரார் குழலாள் கலைமகள் என்தாய்
என்னா விருக்க யானுனைப் பாட
எனைத்தொடர்ந் திருக்கும் எந்தை முருகளைப்
பாடினேன் ஆடினேன் ஆவினன் பூதியை
நேச முடையான் நெற்றியில் அணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னரு ளாக
அன்புடன் இரக்ஷி அன்னமும் சொர்ன்னமும்
மெத்தமெத் தாக வேலா யுதனார்
சித்திபெற் றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைகுரு வாழ்க
வாழ்க வாழ்க வாரணத் துவசன்
வாழ்க வாழ்கஎன் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை அடியேன் எத்தனை செயினும்
பெற்றவன் நீகுரு பொறுப்ப(து) உன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்ற வளாமே
பிள்ளையென்(று) அன்பாய்ப் பிரியம் அளித்து
மைந்தன் மீதுன் மனமகிழ்ந் தருளித்
தஞ்சமென்(று) அடியார் தழைத்திட அருள்செய்
கந்தர் கஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துடன் நாளும்
ஆசா ரத்துடன் அங்கம் துலக்கி
நேச முடனொரு நினைவது வாகிக்
கந்தர் சஷ்டி கவசம் இதனைச்

சிந்தை கலங்காது தியானிப்பவர்கள்
ஒருநாள் முப்பத் தாறுருக் கொண்டு
ஓதியோ ஜபித்து உகந்துநீ றணிய
அஷ்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்னர் எண்மர் சேர்ந்தங் கருளுவர்
மாற்றலர் எல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை அளித்திடும்
நவமதன் எனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளும் ஈரெட்டா வாழ்வர்
கந்தர்கை வேலாம் கவசத் தடியை
வழியாய்க் காண மெய்யர் விளங்கும்
விழியாற் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லா தவரைப் பொடிபொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்கா ரத்தடி
அறிந்தென துள்ளம் அஷ்டலட்சு மிகளில்
வீரலட்சு மிக்கு விருந்துண வாகச்
சூரபத் மாவைத் துணித்தகை யதனால்
இருபத் தேழ்வர்க்(கு) உவந்(து) அமுதளித்த
குருபரன் பழனிக் குன்றினில் இருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி
எனைத்தடுத் தாட்கொள என்றன துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவா போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேளே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோ ரரசே
மயில்நட மிடுவோய் மலரடி சரணம்
சரணம் சரணம் சரவண பவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்.

திருச்சிற்றம்பலம்.



உ
சிவமயம்

# நடராசப் பத்து

1. மண்ணாதி பூதமோடு விண்ணாதி யண்டம் நீ
மறை நான்கி னடிமுடியும் நீ
மதியம் நீ ரவியும் நீ புனலும் நீ யனலும் நீ
பெண்ணும் நீ யாணும் நீ பல்லுயிர்க்கும் நீ
பிறவும்நீ யொருவனீயே
பேதாதி பேதம்நீ பதாதி கேசம் நீ
பெற்றதாய் தந்தை நீயே
நண்ணுநற் பொருளும் நீ யிருளும் நீ யொளியும் நீ
நாதனாய் வந்தவனும் நீ
நவில்கின்ற கிரகங்க ளொன்பதும் நீ யிந்த
நானிலந் தந்தவனு நீ
எண்ணரிய சீவகோடிக ளீன்ற என்ன ப்பனே
என் குறைக ளார்க்குரைப்பேன்
ஈசனே சிவகாமி நேசனே எனையீன்ற
தில்லைவாழ் நடராஜனே

2 மானாட மழுவாட மதியாட புனலாட
மங்கை சிகாமிட
மாலாட நூலாட மறையாடத் திரையாட
வசைமுறை பிரமனாடக்
கோனாட வானுலகு கூட்டமெல்லாமாடக்
குஞ்சர முகத்தனாடக்
குண்டல மிரண்டாத் தண்டைபுலி யுடை யாடக்
குழந்தை முருகேசனாடத்
தானாட வாடுசம் பந்தரிந் திரர்முனிவர்
தனியட்ட பாலராடத்

தகுதும்பை யறுகாட நந்திவா னமாடத்
தாளநெறி மாதராட
யானாட வினையோட வெனைநாடி யிதுவேளை
யிசை விருதொ டாடி வருவாய்
ஈசனே சிவகாமி நேசனே எனையீன்ற
தில்லைவாழ் நடராஜனே

3. கடலென்ற புவிமீதி லலை யென்ற யுருக்கொண்டு
கனவென்ற வாழ்வை நம்பிக்
காற்றென்ற மூவாசை யாற்றொணாச் சூழலிலே
கட்டுண்டு நித்த நித்தம்
உடலென்ற கும்பிக்கு உண வென்ற விரை தேடி
யோயாமல லிரவுபகலும்
உண்டுண்டுறங்குவதைக் கண்டதே யல்லாம
லொரு பயனடைந்திலேனைத்
தடமென்ற விடிகரையிற் பந்தபாசங்க ளெனும்
தாபரம் பின்னலிட்டுத்
தாயேன்று சேயென்று நீயென்று நானென்று
தமியேனை யிவ்வண்ணமாய்
இடைநின்று தடை செய்ய வேனென்னு கேளா
திருப்பதுவு மழகாகுமோ?
ஈசனே சிவகாமி நேசனே எனையீன்ற
தில்லைவாழ் நடராஜனே

4. வம்பு சூனியமல்ல வைப்பல்ல மாரணம்
பதர்வசிய தம்பலப்
பாதாள வஞ்சனம் பரகாயப் பிரவேச
பண்பல்ல ஜாலமல்ல
அம்புகுண்டுகள் அலக மொழியு மந்திரமல்ல
வாகாய குளிகையல்ல
அன்போடு செய்கின்ற வாதமோடிகளல்ல
வரியமோ கனமுமல்லக்
கும்பமுனி மச்சமுனி சட்டமுனி பிரமரிஷி
கொங்கணர் புலிப்பாணியுங்
கோரர்கர் தனவந்தரிபோ கமுனி யிவரெக் லாங்



கூறும் வைத்தியல்ல
எம்பரம வுன்னடியை நீங்காது நிலைநிற்கு
மிச்சையை யெனக் கருளுவாய்
ஈசனே சிவகாமி நேசனே எனையீன்ற
தில்லைவாழ் நடராஜனே

5. நொந்துவந் தேனென்றுப லதர முரைக்கவும்
நுழையாத தென்னசெவியோ?
நுட்பநெறியதாத பிள்ளையை பெற்று மதை
நோக்காத தந்தையுண்டோ?
சந்தமும் தஞ்சமென் றடியைப் பிடிக்கவு
தளராத நெஞ்சுமுண்டோ?
சந்ததியிலாத நீயோ?
விந்தைதரு சாலங்க ளுன்னிட மிருக்கதே
வினையொன்று மறிகிலேன்யான்
வேதமுஞ் சாஸ்திரமு முன்னயே புகழுதே
வேடிக்கையி துவல்வோ
இந்தவுல கீரேழு மேனளித் தாய்சொல்லு
இனியுன்னை விடுவதில்லை
ஈசடீன சிவகாமி நேசனே எனையீன்ற
தில்லைவாழ் நடராஜனே.

6. வழிகண்டு நின்னடிகள் துதியாத போதிலும்
வாஞ்சையில்லா போதும்
வாலாய மாய்க்கோயி கற்றாத போதிலும்
வஞ்சமே செய்த போதும்
மொழியெதுகை மோனையில் லாமலே பாடினும்
மூர்கனேன் மூடனேனும்
மோசமே செய்யினுந் தேசமேகவரினும்
முழுக்காமியே யாயினுந்
பழியெனக் கல்லவே தாய் தந்தை யர்க்கலோ
பார்த்தவர்கள் சொல்லார்க்ளோ
பாரறிய மனைகொளப் பாதியுட லீந்த நீ
பாலனை காக்கொணாதோ
எழில் பெருகு மண்டலங்களிகைவா யமைத்த நீ

பாலனை காக்கொணாதோ
ஈசனேசிவகாமி நேசனே எனையின்ற
தில்லைவாழ் நடராஜனே

7. அன்னை தந்தையர்களெனையீன்றதற் கழுவேனோ?
வறிவற்றதற் கழுவெனோ?
அல்லாமல் நான் முகன் தன்னைநொந் தழுவேனோ?
வாசை மூன்றுக் கழுவெனோ?
முற்பிறப்பென்னவழனை செய்தனென் றழுவெனோ?
மூடருநவுக் கழுவெனோ?
முன்னலென் வினைவந்து மூவுமென் நழுவெனோ?
மூத்தியை நினைந் தழுவேனோ?
முத்தியை நினைந் தழுவேனோ?
தனைநொந் தழுவெனோ வுன்னை நொந்தழுவெனோ?
தரித்திர திசைக்கழுவெனோ?
தாரணியி லுன்றருள் பெற்ற பெரியோர்களைத்
தழுவாததற் கழுவெனோ?
இன்னுமெப் பிறவி வருமென்றழுவெ னோஅவைக
ளெல்லா முரைக்கவருவாய்
ஈசனே சிவகாமி நேசனே
எனை யீன்ற தில்லைவாழ் நடராஜனே

8. காயாமரங் ளிற்பூபிஞ் சறுத் தேனோ?
கனியர்கள் பழிகொண்டனோ?
கடனென்று பொருள் பறித் தேவயிறெரித்தெனோ?
தந்தபொருளிலையென்று நான்
தானென்ற கோபமொடு கொலை களவு செய்தேனோ?
தபசிகளை யேசினேனோ?
வாயார நின்று பலபொய் சொன்னேனோ?
வந்தவரை மரியாதை செய்யா தடித் தேனோ?
வழக்கிலோரஞ் சொன்னேனோ?
ஈயாதலோபி யேயாலுமென் பிழைகள்
எல்லாம் பொறுத்தருளுவாய்
ஈசடின சிவகாமி நேசனே எனையீன்ற
தில்லைவாழ் நடராஜனே



9. தாயாரிருந்தென்ன தந்தையு மிருந்தென்ன
தன்பிறவி யுறவு கோடி
தனமலை குவித்தென்ன கனபெய ரெடுத்தென்ன
தாரணியை யாண்டு மென்ன
சேயர்களிருந் தென்ன குருவாய்த் திரிந் தென்ன
சீடர்களிருந்துமென்ன
சித்துபல கற்றென்ன நித்தமும் விரதங்கள்
செய்தென்ன நதிகளெல்லாம்
ஓயாது முழ்கினும் பயனென்ன எமனோலை
ஒன்றினைத் தான் தடுக்க
வுதவுமொ விவையெலாஞ் சந்தையுற வென்றுநா
னுன்னிருபாதம் பிடித்தேன்
ஈயா திருக்கத் தியாகராஜாப் பெயரு
மிசையுமோ வேன்புனைந்தாய்
ஈசனே சிவகாநேசனே எனை
யீன்ற தில்லைவாழ் நடராஜனே

10. இன்னமுஞ் சொல்வவோ வுன்மனங்கல்லோ
விரும்போ பெம்பாறையோ
இரு செவியுமந்த மோ கருமபல வந்தமோ
ஏழைபங்கின னல்லவோ
என்னன்னை மோக மோ யாரிட்ட சாபமோ
ஈதுனக் கழகுதானோ
இருபிள்ளை தாபமோ யார் மீதுகோபமோ
இனியுமுன்ற னை விடுவேனோ
உன்னையடுத்துங் கெஜவேனோ
ஓயாவி தென்குற்ற முன்குற்ற மொன்று மிலை
உற்றுப்பார் பெற்றவையா
ஈசனே சிவகாமி நேசனே எனை
யீன்ற தில்லைவாழ் நடராஜனே

11. சனிராகு கேது புதன் சுக்கிரன் செவ்வாய்
குருச்சந்திரன் சூரியனிவரை
சற்றெனக் குள்ளாக்கி ராசிபன்னி ரெண்டையும்
சமமாய் நிறுத்தியுடனே

பனியொத்த நஷத்தி ரங்களிரு பத் தேழும்
பக்குவப் படுத்திப்பின்னால்
பகர்கின்ற கரணங்கள் பதினொன்றையும் வெட்டி
பலரையும் அதட்டி என்முன்
கனிபோலவேபேசி கெடுநினைவு நினைக்கின்ற
கசடர்களை யுங்கசக்கி
கர்த்தனின் தொண்டர்க்கு தொண்டரின்
தொண்டர்கள் தொழும்பணாக்கி இனியவள மருவுசிறு
மணைவைமுனி சாமியெனை
யாள்வதினி யுன்கடன்காண்
ஈசனே சிவகாமி நேசனே எனையீன்ற
தில்லைவாழ் நடராஜனே.

### தனிஷ்டா பஞ்சகம் (பஞ்சமி வீபரம்)

அவிட்டம், சதயம், பூரட்டாதி, உத்தரட்டாதி, ரேவதி ஆகிய ஐந்து நட்சத்திரங்களிலும் மரணம் சம்பவித்தால் தனிஷ்டா பஞ்சக தோஷம் உண்டாம்.

| | |
|---|---|
| அவிட்டத்துக்கு | 6 மாதமும் |
| சதயத்துக்கு | 3 மாதமும் |
| பூரட்டாதிக்கு | 1.5 மதமும் |
| உத்தரட்டாதிக்கு | 1 மாதமும் |
| ரேவதிக்கு | 15 நாட்களும் |

தனிஷ்டாபஞ்சகக் குற்றமாகும். இந்த நட்சத்திரங்களில் ஒருவர் இறந்தால் பூதவுடலுடன் தென்னம்பிள்ளை, கமுகம்பிள்ளை, வாழைக்குட்டி ஏதாவது ஒன்றை சேர்த்து மயானத்துக்குக் கொண்டு சென்று தகனம் செய்ய வேண்டும். பின்னர் வீட்டில் பஞ்சன தோஷ சாந்தி செய்யத் தோஷம் நீங்கும். இதனையே பலர் பஞ்சமி தோஷம் என்பார்கள். ஆனால் பஞ்சமி திதியில் எதுவித தோஷமுமில்லை.

## மரண நட்சத்திர தோக்ஷம்

கார்த்திகை, உத்தரம், உத்தராடம், புனர்பூசம், விசாகம், பூரட்டாதி நட்சத்திரங்களும், துவிதீயை, ஸப்தமி, துவாதசி திதிகளும், செவ்வாய், வியாழன், வெள்ளி வாரங்களும் சேர்ந்த நாள் திரிபுஷ்கரயோகமாம். நட்சத்திரம் திதி, வாரம் மூன்றும் சேர்ந்த திரிபுஷ்கரயோக தினத்தில் மரணம் சம்பவித்தாலும் தகனஞ் செய்தாலும் அந்த வம்சத்துக்கு ஆகாது.



உ
சிவமயம்

# திருவெம்பாவை

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெரும்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாள்தடங்கண்
மாதே! வளருதியோ வன்செவியோ நின்செவிதான்?
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே, விம்மிவிம்மி மெய்மறந்து
போதுஆர் அமளியின்மேல் நின்றும் புரண்டும் இங்ஙன்
ஏதேனும் ஆகாள், கிடந்தாள்; என்னே! என்னே!
ஈதே எம்தோழி பரிசேலோர் எம்பாவாய்! 01

பாசம் பரஞ்சோதிக்(கு) என்பாய் இராப்பகல்நாம்
பேசும்போது எப்போதுஇப் போதுஆர் அமளிக்கே
நேசமும் வைத்தனையோ? நேரிழையாய் நேரிழையீர்
சீசி! இவையும் சிலவோ விளையாடி
ஏசும் இடம் இதோ?விண்ணோர்கள் ஏத்துதற்கு
கூசும் மலர்ப்பாதம் தந்தருள வந்தருளும்
தேசன் சிவலோகன் தில்லைச்சிற்றம்பலத்துள்
ஈசனார்க்கு (கு)அன்பார்யாம்ஆடேலோர் எம்பாவாய். 02

முத்தன்ன வெண்கையாய்! முன்வந்(து) எதிரெழுந்தென்
அத்தன், ஆனந்தன், அமுதனென்(று) அள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய், வந்துன் கடைதிறவாய்
பத்துடையீர், ஈசன் பழ அடியீர்! பாங்குடையீர்!
பத்தடியோம் புன்மைதீர்த்து ஆட்கொண்டாற்பொல்லாதோ?
எத்தோநின்அன்புடைமை எல்லோம் அறியோமோ?
சித்தம் அழகியார் பாடாரோநம் சிவனை?
இத்தனையும் வேண்டும் எமக்கேலோர் எம்பாவாய். 03

ஒண்ணித் திலநகையாய் இன்னம் புலர்ந்தின்றோ?
வண்ணக் கிளிமொழியார்எல்லோரும் வந்தாரோ?
எண்ணிக்கொ(டு) உள்ளவா சொல்லுகோம் அவ்வளவும்
கண்ணைத்துயின்றவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக்(கு) ஒரு மருந்தை, வேத விழுப்பொருளைக்
கண்ணுக்(கு)இனியானைப் பாடிக் கசிந்துள்ளம்.
உள்நெக்கு நின்றுருக யாமாட்டோம், நீயே வந்(து)
எண்ணிக் குறையில் துயிலேலோர் எம்பாவாய். 04

மாலறியா நான்முகனும் காணா மலையினை நாம்
போலறிவோம்என்றுள்ள பொக்கங்களே பேசும்
பாலூறு தேன்வாய்ப் படிறீ கடைதிறவாய்!
ஞாலமே விண்ணே பிறவே அறிவரியான்
கோலமும் நம்மை ஆட் கொண்டருளிக் கோதாட்டும்
சீலமும் பாடிச் சிவனே சிவனேயென்(று)
ஓலமிடினும் உணராய் உணராய்காண்!
ஏலக் குழலி பரிசேலோர் எம்பாவாய். 05

மானே! நீ நென்னலை நாளை வந்(து) உங்களை
நானே எழுப்புவன் என்றலும் நாணாமே
போனதிசைபகராய் இன்னம் புலர்ந்தின்றோ
வானே நிலனே பிறவே அறிவரியான்,
தானே வந்(து) எம்மைத்தலையளித்தாட்கொண்டருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்குன்வாய்திறவாய்
ஊனே உருகாய் உனக்கே உறுமெமக்கும்
ஏனோர்க்கும் தங்கோனைப்பாடேலோர்எம்பாவாய். 06

அன்னே! இவையுஞ் சிலவோ? பலஅமரர்
உன்னற்(கு) அறியான் ஒருவன் இருஞ் சீரான்
சின்னங்கள் கேட்பச் சிவனென்றே வாய்திறப்பாய்
தென்னாஎன் னாமுன்னம் தீசேர்மெழு(கு) ஒப்பாய்
என்னானை என்னரையன் இன்னமுதென்(று) எல்லோமும்
சொன்னேங்கேள்வெவ்வேறாய், இன்னம் துயிலுதியோ,
வன்னெஞ்சப பேதையர்போல் வாளா கிடந்தியால்
என்னே துயிலின் பரிசேலோர் எம்பாவாய். 07



கோழி சிலம்பச் சிலம்புங் குருகெங்கும்,
ஏழல் இயம்ப இயம்புவெண் சங்கெங்கும்,
கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை
கேழில் விழுப்பொருள்கள் பாடினோம் கொட்டிலையோ?
வாழியீ(து) என்ன உறக்கமோ? வாய்திறவாய்!
ஆழியான் அன்புடைமை ஆமாறும் இவ்வாறோ?
ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை
ஏழைபங் காளனையே பாடேலோர் எம்பாவாய். 08

முன்னைப் பழம்பொருட்கு முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே
உன்னைப் பிரானாகப் பெற்றஉன் சீரடியோம்
உன்னடியார் தாள் பணிவோம் ஆங்கவர்க்கே பாங்காவோம்
அன்னவரே எங்கணவர் ஆவார் அவருகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்
இன்ன வகையே எமக்கெங்கோன் நல்குதியேல்
என்ன குறையும் இலோமேலோர் எம்பாவாய். 09

பாதாளம் ஏழினுங்கீழ் சொற்கழிவு பாதமலர்;
போதார் புனைமுடியும் எல்லாப் பொருள்முடிவே
பேதை ஒருபால்; திருமேனி ஒன்றல்ல;
வேதமுதல்; விண்ணோரும் மண்ணும் துதித்தாலும்,
ஓத உலவா ஒருதோழன் தொண்டருளன்
கோதில் குலத்தரன்தன் கோயிற் பிணாப்பிள்ளைகாள்
ஏதவனூர்? ஏதவன்பேர்? ஆருற்றார்? ஆரயலார்?
ஏதவனைப் பாடும் பரிசேலோர் எம்பாவாய். 10

மொய்யார் தடம் பொய்கை புக்கு முகேரென்னக்
கையாற் குடைந்து குடைந்துன் கழல்பாடி
ஐயா! வழியடியோம் வாழ்ந்தோங்காண்! ஆரழல்போற்
செய்யா! வெண்ணீறாடி! செல்வா! சிறுமருங்குல்
மையார் தடங்கண் மடந்தை மணவாளா!
ஐயா! நீ ஆட்கொண்டு அருளும் விளையாட்டின்
உய்வார்கள் உய்யும் வகையெல்லாம் உய்ந்தொழிந்தோம்
எய்யாமற் காப்பாய் எமையேலோர் எம்பாவாய். 11

ஆர்த்த பிறவித் துயர்கெடநாம் ஆர்த்தாடும்
தீர்த்தன்நல் தில்லைச்சிற் றம்பலத்தே தீயாடும்
கூத்தன்இங் வானுங் குவலயமும் எல்லோமும்
காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடி
வார்த்தையும் பேசி வளைசிலம்ப வார்கலைகள்
ஆர்ப்பரவஞ் செய்ய அணிகுழல்மேல் வண்டார்ப்பப்
பூத்திகழும் பொய்கை குடைந்துடையான் பொற்பாதம்
ஏத்தி இருஞ்சுனைநீ ராடேலோர் எம்பாவாய். 12

பைங்குவளைக் கார்மலரால் செங்கமலப் பைம்போதால்
அங்கம் குறுகினதால் பின்னும் அரவத்தால்
தங்கள் மலங்கழுவு வார்வந்து சார்தலினால்
எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த
பொங்கு மடுவில் புகப்பாய்ந்து பாய்ந்துநம்
சங்கம் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்பொங்கப்
பங்கயப் பூம்புனல்பாய்ந்(து) ஆடேலோர் எம்பாவாய். 13

காதார் குழையாடப் பைம்பூண் கலனாடக்
கோதை குழலாட வண்டின் குழாமாடச்
சீதப் புனலாடிச் சிற்றம் பலம்பாடி
வேதப் பொருள்பாடி அப்பொருளாமா பாடிச்
சோதி திறம்பாடிச் சூழ்கொன்றைத் தார்பாடி
ஆதி திறம்பாடி அந்தம்ஆ மாபாடிப்
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி ஆடேலோர் எம்பாவாய். 14

ஓரொருகால் எம்பெருமான் என்றென்றே நம்பெருமான்
சீரொருகால் வாயோவாள் சித்தங் களிகூர
நீரொருகால் ஓவா நெடுந்தாரை கண்பனிப்பப்
பாரொருகால் வந்தனையாள் விண்ணோரைத் தான்பணியாள்
பேரையற் கிங்கனே பித்தொருவர் ஆமாறும்
ஆரொருவர் இவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர்தாள்
வாருருவப் பூண்முலையீர் வாயார நாம்பாடி
ஏருருவப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய். 15



முன்னிக் கடலைச் சுருக்கி யெழுந்துடையாள்
என்னத் திகழ்ந்தெம்மை ஆளுடையாள் இட்டிடையின்
மின்னிப் பொழிந்தெம் பிராட்டி திருவடிமேற்
பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலைகுலவி நந்தம்மை ஆளுடையாள்
தன்னிற் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு
முன்னி அவள்நமக்கு முன்சுரக்கும் இன்னருளே
என்னைப் பொழிவாய் மழையேலோர் எம்பாவாய். 16

செங்க ணவன்பால் திசைமுகன் பால் தேவர்கள்பால்
எங்கும் இலாதோர் இன்பம்நம் பாலதாக்
கொங்குண் கருங்குழலி நந்தம்மைக் கோதாட்டி
இங்குநம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதம் தந்தருளுஞ் சேவகனை
அங்கண் அரசை அடியோங்கட் காரமுதை
நங்கள் பெருமானைப் பாடி நலந்திகழப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய். 17

அண்ணா மலையான் அடிக்கமலஞ் சென்னிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகைவீ றற்றாற்போல்
கண்ணார் இரவி கதிர்வந்து கார்கரப்பத்
தண்ணார் ஒளிமழுங்கித் தாரகைகள் தாம்அகலப்
பெண்ணாகி ஆணாய் அலியாய்ப் பிறங்கொழிசேர்
விண்ணாகி மண்ணாகி இத்தனையும் வேறாகிக்
கண்ணார் அமுதமுமாய் நின்றான் கழல்பாடிப்
பெண்ணே இம்பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய். 18

உங்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலம்என்று
அங்கப் பழஞ்சொல் புதுக்கும்எம் அச்சத்தால்
எங்கள் பெருமான் உனக்கொன் றுரைப்போங்கேள்
எங்கொங்கை நின்னன்பர் அல்லார்தோள் சேரற்க
எங்கை உனக்கல்லா தெப்பணியுஞ் செய்யற்க
கங்குல் பகல்எங்கண் மற்றொன்றுங் காணற்க
இங்கிப் பரிசே எமக்கெங்கோன் நல்குதியேல்
எங்கெழிலென் ஞாயி றெமக்கேலோர் எம்பாவாய்.

போற்றி அருளுகநின் ஆதியாம் பாதமலர்
போற்றி அருளுகநின் அந்தமாஞ் செந்தளிர்கள்
போற்றிஎல் லாவுயிர்க்கும் தோற்றமாம் பொற்பாதம்
போற்றிஎல் லாவுயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றிஎல் லாவுயிர்க்கும் ஈறாம் இணையடிகள்
போற்றிமால் நான்முகனும் காணாத புண்டரிகம்
போற்றியாம் உய்யஆட் கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றியாம் மார்கழிநீ ராடேலோர் எம்பாவாய். 20

## திருமுறை ஓதுதல்

திருக்கோயில்களில் திருமுறைகள் ஓதுப்பெறும் போது வரிசை முறையாக பன்னிரு திருமுறைகளையும் ஓத முடியாவிடத்து பஞ்சபுராணம் ஓதினாற் போதுமானது அதாவது மூவர் தமிழில் ஒன்றும் திருவாசகம் திருவிசைப்பா திருப்பல்லாண்டு திருப்புராணம் ஆகியவற்றில் ஒவ்வொன்றும் ஆகும்

நிறையுருட் பாடலாகி நிரம்பு தேவாரம் பாடும்
அறைதிரு வாசகம் சீர் அமை இசைப்பா பல்லாண்டு
குறைதவிர் புராணம் இன்ன கொண்டுறந் துதித்தல் செய்து
மறைபுகழ் வீபூதிமேனி வளைந்திருக்கையால் ஏற்க

என்பது சிவாலய தரிசன விதி பற்றிய மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்களின்ட பாடல் ஒன்று இதிலிருந்து பஞ்சபுராணம் ஓதும் பழமையை உணரலாம் திருவாசகப் பாடல்கள் அனைத்தும் மோகன இராகத்திலும் திருவிசைப்பாவும் திருப்பல்லாண்டுதம் ஆனந்த பைரவி இராகத்திலும் பெரிய புராணம் அனைத்தும் மத்தியமாவதி இராகத்திலும் பாடப்படுவதே முறையாகும்

சைவப்புலர் பண்ணிசைமணி ஞான பண்டிதர்
ஆய்வரசர் கதிர் தணிகாசலம்



உ
சிவமயம்

# திருபொற்சுண்ணம்

**ஆனந்த மனோலயம் (தில்லையில் அருளியது)**

முத்துநல் தாமம்பூ மாலைதூக்கி
முளைக்குடந் தூபம்நல் தீபம்வைம்மின்
சக்தியுஞ் சோமியும் பார்மகளும்
நாமக ளோடுபல் லாண்டிசைமின்
சித்தியுங் கௌரியும் பார்பதியும்
கங்கையும் வந்து கவரிகொண்மின்
அத்தன்ஐ யாறன்அம் மானைப்பாடி
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே 01

பூவியில் வார்சடை எம்பிராற்குப்
பொற்றிருச் சுண்ணம் இடிக்கவேண்டும்
மாவின் வடுவகி ரன்னகண்ணீர்
வம்மின்கள் வந்துடன் பாடுமின்கள்
கூவுமின் தொண்டர் புறம்நீலாமே
குனிமின் தொழுமின்எங் கோன்எங்கூத்தன்
தேவியுந் தானும்வந் தெம்மையாளச்
செம்பொன்செய் சுண்ணம் இடித்துநாமே. 02

சுந்தர நீறணிந் தும்மெழுகித்
தூயபொன் சிந்தி நிதிபரப்பி
இந்திரன் கற்பகம் நாட்டியயெங்கும்
எழிற்சுடர் வைத்துக் கொடியெடுமின்
அந்தர் கோன்அயன் தன்பெருமான்

ஆழியான் நாதன்நல் வேலன்தாதை
எந்தரம் ஆளுமை யாள்கொழுநற்கு
ஏய்ந்தபொற் சுண்ணம் இடித்துநாமே. 03

காசணி மின்கள் உலக்கையெல்லாம்
காம்பணி மின்கள் கறையுரலை
நேச முடைய அடியவர்கள்
நின்று நிலாவுக என்றுவாழ்த்தித்
தேசமெல் லாம்புகழ்ந் தாடுங்கச்சித்
திருவேகம் பன்செம்பொற் கோயில்பாடிப்
பாச வினையைப் பறித்துநின்று
பாடிப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 04

அறுகெடுப் பார்அய னும்மரியும்
அன்றிமற் றிந்திர னோடமர
நறுமுறு தேவர்க ணங்களெல்லாம்
நம்மிற்பின் பல்லதெ டுக்கவொட்டோம்
செறிவுடை மும்மதில் எய்தவில்லி
திருவேகம் பன்செம்பொற் கோயில்பாடி
முறுவற்செவ் வாயினீர் முக்கண்அப்பற்கு
ஆடற்பொற் சுண்ணம் இடித்துநாமே. 05

உலக்கை பலஓச்சு வார்பெரியர்
உககமெ லாம்உரல் போதாதென்றே
கலக்க அடியவர் வந்துநின்றார்
காண உலகங்கள் போதாதென்றே
நலக்க அடியோமை ஆண்டுகொண்டு
நாண்மலர்ப் பாதங்கள் சூடத்தந்த
மலைக்கு மருகனைப் பாடிப்பாடி
மகிழ்ந்துபொற் சுண்ணம் இடித்துநாமே 06



சூடகந் தோள்வளை ஆரப்பஆர்ப்பத்
தொண்டர் குழாமெழுந் தார்ப்பஆர்ப்ப
நாடவர் நந்தம்மை ஆர்ப்பஆர்ப்ப
நாமும் அவர்தம்மை ஆர்ப்பஆர்ப்ப
பாடக மெல்லடி யார்க்குமங்கை
பங்கினன் எங்கள் பராபரனுக்கு
ஆடக மாமலை அன்னகோவுக்கு
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 07

வாட்டங் கண்மட மங்கைநல்லீர்
வரிவளை ஆர்பவண் கொங்கை பொங்கத்
தோட்டிரு முண்டந் துதைந்திலங்கச்
சோத்தெம்பி ரான்என்று சொல்லிச்சொல்லி
நாட்கொண்ட நாண்மலர்ப் பாதங்காட்டி
நாயிற்க டைப்பட்ட நம்மையிம்மை
ஆட்கொண்ட வண்ணங்கள் பாடிப்பாடி
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே 08

வையகம் எல்லாம் உரலதாக
மாமேரு என்னும் உலக்கைநாட்டி
மெய்யெனும் மஞ்சள் நிறையஅட்டி
மேதகு தென்னன் பெருந்துறையான்
செய்ய திருவடி பாடிப்பாடிச்
செம்பொண் உலக்கை வலக்கைபற்றி
ஐயன் அணிதில்லை வாணனுக்கே
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே 09

முத்தணி கொங்கைகள் ஆடஆட
மொய்குழல் வண்டினம் ஆடஆடச்
சித்தஞ் சிவனொடும் ஆடஆடச்
செங்கயற் கண்பனி ஆடஆடப்
பித்தெம் பிரானொடும் ஆடஆடப்

பிறவி பிறரொடும் ஆடஆட
அத்தன் கருணையொ டாடஆட
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே 10

மாடு நகைவாள் நிலாவெறிப்ப
வாய்திறந் தம்பவ ளந்துடிப்பப்
பாடுமின் நந்தம்மை ஆண்டவாறும்
பணிகொண்ட வண்ணமும் பாடிப்பாடித்
தேடுமின் எம்பெரு மானைத்தேடிச்
சித்தங் களிப்பத் திகைத்துத் தேறி
ஆடுமின் அம்பலத் தாடினானுக்கு
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே 11

மையமர் கண்டனை வானநாடர்
மருந்தினை மாணிக்கக் கூத்தன் தன்னை
ஐயனை ஐயர்பிரானை நம்மை
அகப்படுத் தாட்கொண்டருமைகாட்டும்
பொய்யர்தம் பொய்யனை மெய்யர்மெய்யைப்
போதரிக் கண்ணிணைப் பொற்றொடித்தோள்
பையர வல்குல் மடந்தைநல்லீர்
பாடிப்பொற் சுண்ணம் இடித்துநாமே 12

மின்னிடைச் செந்துவர் வாய்க்கருங்கண்
வெண்ணகைப் பண்ணமர் மென்மொழியீர்
என்னுடை ஆரமுது எங்கள் அப்பன்
எம்பெரு மான்இம வான்மகட்குத்
தன்னுடைக் கேள்வன் மகன்தகப்பன்
தமையன்எம் ஐயன் தாள்கள்பாடிப்
பொன்னுடைப் பூண்முலை மங்கைநல்லீர்
பொற்றிருச் சுண்ணம் இடித்துநாமே. 13



சங்கம் அரற்றச் சிலம்பொலிப்ப
தாழ்குழல் சூழ்தரு மாலையாடச்
செங்கனி வாய்இத ழுந்துடிப்பச்
சேயிழை யீர்சிவ லோகம்பாடிக்
கங்கை இரைப்ப அராஇரைக்கும்
கற்றைச் சடைமுடி யான்கழற்கே
பொங்கிய காதலிற் கொங்கைபொங்கப்
பொற்றிருச் சுண்ணம் இடித்துநாமே. 14

ஞானக் கரும்பின் தெளியைப்பாகை
நாடற் கரிய நலத்தைநந்தாத்
தேனைப் பழச்சுவை ஆயினானைச்
சித்தம் புகுந்து தித்திக்கவல்ல
கோனைப் பிறப்பறுத் தாண்டுகொண்ட
கூத்தனை நாத்தழும் பேறவாழ்த்திப்
பானல் தடங்கண் மடந்தைநல்லீர்
பாடிப்பொற் சுண்ணம் இடித்துநாமே 15

ஆவகை நாமும்வந் தன்பர்தாமோடு
ஆட்செயும் வண்ணங்கள் பாடிவிண்மேல்
தேவர்கனாவிலுங் கண்டறியாச்
செம்மலர்ப் பாதங்கள் காட்டுஞ்செல்வச்
சேவகம் ஏந்திய வெலகொடியான்
சிவப்பெரு மான்புரஞ் செற்றகொற்றச்
சேவகம் நாமங்கள் பாடிப்பாடிச்
செம்பொன்செய் சுண்ணம் இடித்துமுநாமே. 16

தேனகம் மாமலர்க் கொன்றைபாடிச்
சிவபுரம் பாடித் திருச்சடைமேல்
வானக மாமதிப் பிள்ளைபாடி
மால்விடை பாடி வலக்கையேந்தும்
ஊனக மாமழுச் சூலம்பாடி

உம்பரும் இம்பரும் உய்யஅன்று
போனக மாகநஞ் சுண்டல்பாடிப்
பொற்றிருச் சுண்ணம் இடித்துநாமே 17

அயன்தலை கொண்டுசெண் டாடல்பாடி
அருக்கன் உயிறு பறித்தல்பாடிக்
கயந்தனைக் கொன்றுரி போர்த்தல்பாடிக்
காலனைக் காலால் உதைத்தல்பாடி
இயைந்தன முப்புரம் எய்தல்பாடி
ஏழை அடியோமை ஆண்டுகொண்ட
நயந்தனைப் பாடிநின் நாடி யாடி
நாதற்குச் சுண்ணம் இடித்துநாமே. 18

வட்ட மலர்க்கொன்றை மாலைபாடி
மத்தமும் பாடி மதியும்பாடி
சிட்டர்கள் வாழுந்தென் தில்லைபாடிச்
சிற்றம்ப லத்தெங்கள் செல்வம்பாடிக்
கட்டிய மாசுணக் கச்சைபாடிக்
கங்கணம் பாடிக் கவித்தகைம்மேல்
இட்டுநின் றாடும் அரவம்பாடி
ஈசற்குச் சுண்ணம் இடித்துநாமே. 19

வேதமும் வேள்வியும் ஆயினார்க்கு
மெய்ம்மையும் பொய்ம்மையும் ஆயினார்க்குச்
சோதியு மாய்இரு ளாயினார்க்குத்
துன்பமு மாய்இன்பம் ஆயினார்க்குப்
பாதியு மாய்முற்றும் ஆயினார்க்குப்
பந்தமு மாய்வீடும் ஆயினார்க்குப்
ஆதியும் அந்தமும் ஆயினாருக்கு
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 20

திருச்சிற்றம்பலம்



# சிலசெய்திகள்

**இறந்தவருக்கு அந்திமக் கடன்களை முடித்தவருக்கு, ஒருவருடம் வரை (நற்கருமம்) ஆலயத்துட் செல்லல் ஆகாதா?**

*01.* இறந்த உற்றவரின் கவலை காரணமாக சன்னிதானத்தில் இறைவனை வேண்டிக் கண்ணீர் விட வேண்டிய நிலை ஏற்படும். அந்நிலை ஏற்பட்டால் "ஜீவன் முத்தி அடையாது". இதன் காரணமாகவே சன்னிதானத்திற்கு போகாதிருப்பதை முன்னையோர் நடைமுறையில் கொண்டு வந்தனர்-பரசாமி ஓதுவார்

*02.* ஜீவன் இறந்த 31வது நாள் சகல மாத பிண்டங்களும் செய்வது 16 பிதிர்க்கடன் செய்த ஒருவர், தற்சமயம் மறுமுறை கடைமைகள் செய்யமுடியாதிருப்பின், அல்லது ஆசௌஷம், அல்லது அவர் இறந்து விட்டாலோ, "மறு உரித்துடைய ஒருவர்" பிதிர்கடன் செய்யலாம் என்பதற்காகவே. 12மாத மாசிக பூசனையும் 31ல் அன்று செய்வதன் காரணம்? உரத்துடையவர் ஒருவருடத்திற்குரிய கடமைகள் யாவற்றையும் நிறைவு செய்துவிட்டார். என்பதாகும். அக்காரணத்தால் அவர் ஒருவருடம் வரை ஆசௌசம் இல்லாதவராகிறார். ஆயினும் ஆலயஞ்செல்ல கவலை தோன்றும்! கவலைதோன்றக் கண்ணீர் உதிரும். கண்ணீர் உதிர்ந்தால் ஜீவன் பக்குவமடையமாட்டாது. பூசை மாதமாசிகம் செய்திடின். ஒருவருட பூர்த்தி வரை செய்தவர் ஆலயஞ்செல்வது குற்றமாகும்-ஞானியார் பாலா

03. கடமை செய்தவன் சன்னிதானஞ் செல்லக் கூடாதென்று எந்தவிதியுலுமில்லை (அப்படியாயின்? அந்தணர், இசைவேளாளர், சைவர்கள், பூக்கட்டுபவர்கள்) எல்லோரும் 31,21,11 நாட்களில் கிரியைகள் நடாத்திய பின் ஆலயத்துள் சென்று தங்கள் கடமைகளைச் செய்கிறார்களல்லவா?-வெற்றிலைச் சுவாமிகள்

04. எழுவகைப் பிறப்புகளாவன? தாவரம்-ஊர்வன-நீர் வாழ்வன-பறவை-விலங்கு-மக்கள்-தேவர்.

*05. கோயிலிற் பூசை செய்யலாமா? ஒரு கிராமத்தில் கோயிலின் கிட்டுமானமாக 12 கோல் அளவு தூரத்தில் சடலங்கள் கிடந்தால் (கிராம ஆசௌஷமாம்) அகற்றப்படும் வரை பூசை செய்யாதீர்.*

*06. மரண ஆசௌஷம் நீங்குதல், நீங்காமை? பின்வந்த துடக்கு, முன்வந்த துடக்குடன் கழிந்து விடும். ஆனால், மரணத்துடக்கு பின்வருமானால், முன்வந்த துடக்குகள் நீங்கா.*

*07. மரண வீட்டிற்குச் சென்றவர்களுக்கு ஆசௌஷம்? சவத்தைத் தொட்டாலும் பின்சென்றாலும் ஒன்றரை நாள் (வீடு சென்ற நேரம் முதல் 18 மணித்தியாலயங்கள்) சுமந்தால் 3 நாட்கள் துடக்கு உண்டு.*

*08. தகனம்:- முன்கிரியை-அஸ்த்தி எடுத்தல்- கொள்ளி நீட்டல் போன்ற அந்திமச் சேவைக்கு உரியவர்கள் யார்? இறந்தவரின் புத்திரன் மனைவி-மகள், மகளின், மகனின் புதல்வன் இறந்தவரின் சகோதரன்-சகோதரன் புதல்வன்-பிதா-மாதா-மருமக்கள்-பிதிர் வழிச் சபின்டன்-சமானோதகன்-தாய்வழிச் சமானோதகன்-தாய்வழிச் சபிண்டன்-சீடன்-குரு-பெண் கொண்ட மருமகன்-தோழன்-அரசன்-மாணாக்கன் என்பவர்களாம்.*

*09. அஸ்தி எடுத்தல் 7ம், 9ம் நாள் செய்யலாம். ஞாயிறு-செவ்வாய்-வெள்ளி-சனி ஆகிய நாட்களில் செய்யலாகாது.*

## பித்ரு காரியங்களின் முக்கியத்துவம்

(ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதீச்வர சந்திரசேகரேந்திர ஸரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகளின் அருள்வாக்கிலிருந்து)

பித்ரு அதாவது இறந்தவர்களுக்குச் செய்யும் காரியங்களுக்கு "ச்ராத்தம்"- என்று பேர் ச்சராத்தம் அதாவது திவஸம் தர்பணம் செய்வது. இதை சிரத்தையுடன் செய்வது முக்கியம். ரொம்பவும் சிரத்தை எடுத்துச் செய்தால் அது சுருக்கியும் குறுக்கியும் சிராத்த காலம் (திதி) தப்பியும் செய்வது போலில்லாது முறையாக, விஸ்தாரமாக புஸ்களமாக நடக்கும். அதன் பலனும் பிரத்தியஷ்டமாகத் தெரியும். மடத்தனமான போக்கு என நினைத்து இப்போது பெரும்கபாலோர் ஏதோ ஒப்புக்குத்தான் பித்ரு காரியங்கள்



பண்ணுகிறார்கள். அதன் விபரீத பலன் எதுவெனில் அநேக வீடுகளில் சித்தப்பிரமம், அபஸ்மாரம் (காக்காய் வலிப்பு) ரத்த வியாதிகள, நரம்பு வியாதிகள், தோல் வியாதிகளுடன் அநேகர் அவஸ்தைப்பட்டுக் கொண்டு ஜோஸ்யர். மாந்திரிகர் முதலானோரிடம் அலைகின்றனர். இக் கஷ்டங்களின் முக்கிய காரணம் பித்ரு காரியம் விட்டு விட்டது தான்.

மாதா பிதாக்கள் உயிருடன் இருக்கும்போது செய்வது மக்களைக் காக்குமென்றால், இன்னொரு பக்கம் மாதா பிதாக்கள் உயிர்போனபின் அவர்களுக்காக மக்கள் செய்யாதது மக்களைத் தாக்குமென்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

அப்பாவும் அம்மாவும் மற்ற வம்ச முதல்வர்களும் எங்கேயாவது கோபித்துக்கொண்டு சபிப்பார்களா என்று கேட்கக்கூடாது. பித்ருக்கள் சபிக்காமல் இருக்கலாம். ஆனால் பித்ரு தேவதைகள் இருக்கிறார்களே அவர்கள் இந்தப் பின் தலைமுறையினர் தங்கள் மூலமாக முன்னோர்களுக்கு எள்ளோ, தண்ணியோ. அன்னமோ அளிக்கவில்லையே என்பதைப் பார்த்துச் சபித்துவிடுவார்கள். ஆனபடியால் நாமும் நம் பின் சந்ததிகள் நன்றாயிருக்கவே முன் தலைமுறையினருக்கு திவஸ தர்கனாதிகள் பண்ணத்தான் வேண்டும். அதாவது, இங்கே பரோபகாரத்தோடு ஸ்வய உபகாரமும் சேருகின்றது.

திவஸம் தர்பணமும் செய்கிறபோது பூலோகத்திலோ வேறு எங்கோ எந்த ஸபத்திலோ பிறந்திருக்கிற நம் மூதாதைகளுக்கு அது க்ஷேமத்தைக் கொடுக்கிறது. இங்கே நாம் கொடுக்கிற எள், தண்ணீர் பிண்டம் முதலானவைகளை பித்ரு தேவதைகள் நம் மூதாதைகள் எந்த ரூபத்தில் எங்கே பிறந்திருந்தாலும் அதற்கேற்ற ஆகாரமாக மாற்றி அங்கே கிடைக்கச் செய்து விடுவார்கள். நம் நாட்டு ரூபாய் வெளித்தேச கரன்ஸியாக்க எக்சேஞ்ச் பாங்க் இருக்கிற மாதிரி, பித்ரு தேவதைகள் இப்படி ஆகாரத்தை மாற்றிக் கொடுக்கிறார்கள்.

செத்துப்போன உடனேயே எல்லோரும் மறுபடியும் அந்தப் பூலோகத்திலேயே பிறந்து விடுவதில்லை. நன்றாக வேலை செய்தால் இன்கிரிமென்ட் மட்டுமல்லாமல் போனசும் தருகிறார்கள் அல்லவா

ரொம்ப நன்றாகச் செய்தாலோ ப்ரமோஷனே கொடுத்து மேலே தூக்கிவிடுகிறார்களள் வேலையில் தப்புப்பண்ணினால் இன்கிறிமென்டை நிறுத்திவிடுகிறார்கள் அபராதம் விதிக்கிறார்கள் ரொம்ப மோசமாகப் பண்ணினால் கீழ் வேலைக்கே தள்ளிவிடுகிறார்கள் இதேபோல் புண்ணியம் பண்ணினவர்களுக்கு இன்கிரிமென்ட் மாதிரி இந்தப் பூலோகத்திலே செளக்கியமான இன்னொரு ஜன்மா கிடைப்பதற்கு முன்னாடி ஒரு போனஸ்கிடைக்கிறது சுவர்க்கவாசம் தான் இந்த போனஸ் ரொனஸ் புண்ணணியம் செய்திருந்தால் சுவர்க்கலோனகத்துக்கே நிரந்திரமான ப்ரமோஷன் இப்படியே பாவம் பண்ணினவர்கள் முதலில் அபராதமாகநரலோகத்தில் வசிக்க வேண்டும் அப்புறம் இன்ட்கிரிமெண்ட் இல்லாத மாதிரி பூலேகத்தில் கஷ்டத்திலே பிறக்கவேண்டும் ரொம்பப் பாவம் பண்ணினால் கீழ்வேலைக்கே போக வேண்டியது. அதாவது நிரந்தர நரகவாசம்.

தர்ப்பணம் திவஸம் இவற்றின் பலன் நரலோகம் தவிர மற்ற லோகங்களில் உள்ளவர்களையே சேரும். ஸ்வர்கத்திலே பல தினுசுகள். பல லோகங்கள், தேவலோகம், கந்தர்வலோகம், வித்தியாதரலேராகம், பிரம்மலோகம், விஷ்ணுலோகம், சிவலோகம், சத்தியலோகம் என்று இப்படி நரகத்திலும் தாமிஸ்ரம், அந்த தாமிஸ்ரம் புத், ரௌரவம் என்று பலவுண்டு. நாம் இறைக்கிற எள்ளும் தண்ணீரும் கொடுக்கிற பிண்டமும் இப்படிப்பட்ட லோகங்களிலுள்ள நரக வாசிகளுக்குப் போய்ச் சேராது.

ஒரு தேசத்திற்கும் இன்னொரு தேசத்திற்கும் சண்டை ஏற்பட்டுவிட்டால் அப்போது பணம் எக்ஸ்சேஞ்ச் பண்ணி எதிரி தேசத்திற்கு அனுப்பவே முடிவதில்லை அல்லவா? இப்படி நகரவாசிகளுக்கும் பித்ரு தேவதைகள் ஆகார எக்ஸ்சேஞ்ச பண்ணுவதில்லை.

இப்படிப்பட்ட நரவாசிகளான மஹா பாவிகளிடமும் நம்முடைய ரிஷிகளுக்கு மனசுருகி அவர்களுக்கும் ஷேமம் உண்டாவதற்காக மந்திரபூர்வமாக சில வஸ்துக்களைக் கொடுக்கச்சொல்லி ஏற்பாடு பண்ணியிருக்கிறார்கள். சுத்தமான வஸ்துக்களை அவர்களுக்கு நாம் சேர்க்க முடியாது. ஆனால் சில அசுத்தவஸ்துக்களே அவர்களுடைய மகா கஷ்ட நிலையில் ஆகாரமாக அவர்களுக்குக் கிடைக்கலாமென்று பகவான் வைத்திருக்கிறான்.




1. நாம் வேஷ்டியைப் பிழிகிற அழுக்கு ஜலம்.
2. குளிக்கிறபோது நம் சிகை வழியாக வருகிற ஜலம்.
3. சாப்பாடு முடிந்தபின் எச்சில் கைஜலத்தை இலைக்கு வலது பக்கத்தில் மாத்திரம் சொல்லிவிட்டால் அது நகரங்களிலேயே ரொம்பக் கொடூரமாக செளரவத்தில் எத்தனையோ கோடி வருஷங்களாக இருப்பவர்களின் தாகத்தைத் தீர்க்க உதவுகிறது.

ஆந்திரர்கள் உத்ரத போசனத்துக்குப்பின் இதைத் தவறாமல் பண்ணுகிறார்கள். இப்படி எச்சிலையும் அழுக்கு ஜலத்தையும் ஒருவருக்கு தருவதா என்று நினைக்கவேண்டாம். நரகவாசத்தில் அவர்கள் இருக்கிற ஸ்திரியில் இதுவேதான் அவர்களுக்கு பிடித்தமானதாக இருக்கும்.

நம் லோகத்திலேயே வராஹத்தை (பன்றி0 பார்க்கவில்லையா? நாம் அன்பான பாவனையுடன் இந்த நரக வாசிகளை உத்தேசித்து நம் வேஷ்டியை பிழியும் போதும் சிகை ஜலத்தைப் பிழிந்துவிடும் போதும் (அதற்கான மந்திரமும் சொல்லி இந்தக்காரியங்கள் செய்ய அதிகாரம் பெற்றவர்கள் அப்படியே செய்யவேணும்) அப்படி அன்போடு கருணையோடு செய்தால் அவை நரஹத்தினுள்ளவர்களுக்கு ஆஹாரமாக மாறி கொஞ்சம் கொஞ்சம் சுகம் தருகின்றபடிக்கு பகவான் வைத்திருக்கிறார்.

இப்படிப்பட்ட மகபாபிகளுக்குக் கூட அனுக்கிரகம் பண்ணுகிறது நம் தர்ம சாஸ்திரம்.



# ஆலய அமைப்புக்கள்

திரு.பெ. திருஞானசம்மந்தன்

ஆலயம்தானும் அரன் எனத் தொழுமே என்று சிவஞான போதம் செப்புகிறது. உயிர் சார்ந்த தன் வண்ணமாகும் தன்மையைப் பெற்றிருப்பதால் உலகியல் உழலும் உயிர் அதில் சிக்குண்டு வினைகளைப் புரிந்து மயக்குற்றுக் குறிக்கோளை மறந்து மீனண்டும் மீண்டும் பிறவித்ததளையில் கட்டுண்டு கிடக்காமல் இருக்கவே கோவில் கட்டுவித்து இறைவனின் திருமேனிகளை அங்கே பிரதிட்டைம செய்து பூசை திருவிழா முதலியவற்றை ஏற்படுத்தி நம் உள்ளம் இறைவழிபாட்டில் ஈடுபடுவதன் மூலம் அவனைச் சார்ந்து அவன் வண்ணமே ஆகும் இற்நிலையை ஏற்படுத்தித் தந்திருக்கின்றனர் நம் முன்னோர்கள்.

மக்கள் உய்வதில் நாட்டம் கொண்ட மன்னர்கள் அன்று கோவிஜல்களைக் கட்டியும் புதுப்பித்தும் பராமரித்தும் வந்தனர் இன்று மக்களாட்சியில் மக்களையும் ஈடுபடுத்தித் தருமை ஆதீனத்தார் திருவையாறு புள்ளிருக்கு வேளுர் போன்ற புனிதத்தலங்களில் அமைந்துள்ள திருக்கோயில்களைப் புதுப்பிக்கும் புனித பணியில் ஈடுபட்டிருப்பது நம் தவப்பயனேயாம்

வெளியெல்லாம் பரந்து கிடக்கும் மின் சக்தியை இயந்திரங்களின் வாயிலாக வாங்கி மின் பெட்டிகளில் சேமித்து கம்பிகளின் மூலம் வேண்டிய இடத்திற்குக் கொண்டு போய் ஓளியைப் பெறுகின்றோம் அதுபோலக் கும்பாபிஷேகத்தில் நடைப்பெறுகின்ற மந்திரம் ஓதுதல் முதலாயன கிரியைகளால் அங்கிங்கெனாதபடி எங்கும் பரந்து கிடக்கும் இறை சக்தியை லயிக்கச் செய்து வைக்கின்ற காரணத்தால் அப்படி லயிக்கும் இடம் "ஆலயம்" எனப்படுகிறது. முறையாக வழிபாடாற்றும் மக்கள் அங்குள்ள செம்பொற் சோதியின் ஒரு பொறியை அவரவர் பக்குவ நிலைக்கேற்ப தம் உள்ளத்தில் ஏற்றிக்கொள்கிறார்கள். ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கிய அடியார்கள் வரலாறு கோவிலில் சென்று



வழிபடுவதானால் பெறும்பயனை நமக்கு உணர்த்துகிறது.

திருக்கோயில்களால் சிறப்புற்றது தெய்வத் தமிழ்நாடு திருக்கோயிலை கலைவிளக்கமாகவும் தத்துவ விளக்கமாகவும் அருள் விளக்கமாகவும் காணலாம் சமய வாழ்வில் கோயிலும் இறைவன் திருவுருவங்களும் எத்தகைய நடுநாயகமான இடத்தைப் பெற்றிருக்கின்றனர் என்பதை அகத்திய முனிவரின் கீழ்க் கண்ட வெண்பாவில் பார்க்கின்றோம்.

குருவருளும் வெண்ணீ
றெழுத்தஞ்சும் கோயில்
அரவுருவு மென்றலைமே
லாக்கும்~திருவடியும்
சிட்டான அர்ச்சனையும்
தொண்டும் சிவாலயர்கென்
றிட்டார் அகத்தியனார்
எட்டு.

தேவகிருகம் தேவாகாரம் தேவாதனம் தேவாலயம் தேவகுலம் மந்திரம் பவனம் பிராசாதம் ஸ்தானம் முதலான சோற்கள் திருக்கோயில்களை குறிப்பனவே இவை அனைத்தும் இறைவன் உறைவிடம் என்னும் பொருளைக் குறிப்பன கோயில் என்ற சொல்லும் கோ- இறைவன் இல்- உறைவிடம் என்ற அதே பொருளை உணர்த்துகிறது.

இறைவன் நாதாதி தத்துவங்களாலாய உலகைப் படைத்தான் எண்ணிலடங்கா உயிர்களையும் உணர்வற்ற பொருள்களையும் படைத்தும் காத்தும் கரந்தும் வருகின்றான் அவற்றுள் இயங்கியும் அவற்றிக்கப்பாற் பட்டும் விளங்கி வருகின்றான் இறைவன் பேரறிவும் சிறு ஆற்றலும் கொண்ட மனிதன் அவ்விறைவனை அவன் படைப்புக்களிடையே காணமுயல்கின்றார்கள் அமம்முயற்சியின் விளைவாகவே கோயில் எழும்புகிறது.

அங்கே கோபுரங்களில் விமானங்களில் சுவர்களில் தூண்களில்மண்டபங்களில் தேவர்களையும் மனிதர்களையும் யஷர்களையும் கின்னர்களையும் விலங்குளையும் புட்களையும் மரங்களையும் கொடிகளையும் அனைத்தையுமே செதுக்கப்பட்ட உருவங்களாக வார்க்கப்பட்ட பிரதிமைகளாக தீட்டப்பட்ட

சித்திரங்களாகக் காண் கின்றோம் அவற்றினூடே கலை அழகையும் தெய்வீகத் தன்மையும் காண்கின்றோம் அனைத்தையும் இயக்கும் இறைவனை அருவுருவாயத் திருக்கோயிலின் கருவறையிலுள்ள சிவலிங்கத் திருமெனியாகக் காண்கின்றோம் ஈசான சிவகுருதேவ பத்தி என்ற நூல் "திருக்கோயயிலானது சிவன் சக்தி நாதம் எனப்பிரிந்து கலாதித்துவங்களின் புறத்தோற்றமாதலின் அதைச்சிவத்தோடு தொடர்புடைய மூரத்தியாகப் பாவித்து வழிபட வேண்டும் என்று கூறுகிறது.

கோயிலின் முக்கியப் பகுதி கருவறையின் மேலுள்ள விமானம் அது சதுரமாக இருந்தால் நாகரம் என்றும் வட்டமமாக இருந்தால் வேசரம் என்றும் ஆறு அல்லது எட்டு பட்டைகளாக இருந்தால் திராவிடம் என்றும் சில்பரத்தனம் மானசாரம் போன்ற சிற்ப நூல்கள் வகைப்படுத்தியுள்ளன. நாகரம் நாட்டின் வடபகுயிலும் திராவிடம் தென்பகுதியுயலும் வேசரம் இடைபடபகுயிலும் காணப்படுவனவாக சா[illegible]த்திரங்கள் கூறியபோதிலும் தென்கத்லேயே மூன்று வகைகளையும் காணலாம் நெல்லைப் டிபகுதியிலுள்ள ஒரு கோயிலில் நாகர அமைப்பையும் தஞ்சை பெரியகோயிலில் திராவிட அமைப்பையும் பார்கிறோம்.

விசுவகர்மப் பிரகாசம் முதலான நூல்களில் இருபது வகைக் கோவில்கள்(பிரசாதங்கள்) ஒன்று முதல் பதினாறு உப்பரிகை கொண்டவை குறிப்பிடப்படுகின்றன. அவை மேரு மந்திரம் கைலாசம் விமாச்சந்தம் குஞ்சரம் நந்தனம் சமுத்ரம் பத்மம் காருடம் நந்திவர்த்தனம் குஞ்சரம் கிருகராஜம் வர்துலம் சதுரச்ரம் ஷோடசாச்ரம் அஷ்டாச்ரம் ஆகியவை.

திருக்கோயிலின் கருவறையில் உலகுக்கே உயிரான இறைவனை ஒருருவில் இருக்கச் செய்து திருக்கோயில் முழுவதுமே நமது உடலோடு ஒத்த முறையில் அமைக்கப்பட்டுள்ளது கோயிலின் பல்வேறு உறுப்புக்களுக்கு உடலுறுப்புக்களின் சில பெயர்களே அமைக்கப்பட்டுள்ளன. உடலுக்கு கால் எப்படியோ அப்படி கோவிற்றூண்கள் பாதம் என்று குறிப்பிடப்படுகின்றன. பாதத்திற்கு பாதுகை தேவைப்படுவதைப் போலத் தூணுக்கு மேல் சிகரத்துக்குக் கீழுள்ள பகுதி களம் (கீத்து) என்று வழங்கப்படுகிறது. அதற்கும் சற்று மேல் வளைந்த ஒரு பகுதிக்கு நாசிகா(மூக்கு என்றும் பெயர்



மனித உடலுக்குத் தலை எப்படிச் சிறந்ததோ அப்படிக் கருவறைக்கு மேலுள்ள் சிகரம் (சகையை உடைய தலை) சிறப்புடைத்து ஒருவரின் முகத்தைக் கொண்டே அன்னாரென்று தெரிந்து கொள்வது போல சிகரத்தின் அமைப்பைக் கொண்டு தான் நாகர திராவிட வேசர வகைகளைப் பிரித்தறிய இயலும் கருவறையைச் சுற்றியுள்ள ஐந்து பிரகாரங்களும் மனிதனுக்குள் ஐந்து கோசங்களை ஒத்தன அவை அன்னமய கோசம், பிராணமய கோசம், மனோமய கோசம், விஞ்ஞானமயகோசம், ஆனந்தமய கோசம் ஆகிவை இக்கோவிலின் ஐந்து பிரகாரங்களையும் முறையே சுற்றி இறுதியில் கருவறைக்குச் செல்கிற ஒருவன் படிப்படியாக பரம்பொருளான புறப் பொருட்களை விட்டுக் கருப்பொருளான சுக்கும நிலையில் காணப்படும் இறைவனை நெருங்குகின்றான் என்று பொருள். யாத்திரிகர்கள் தங்குவதற்கெனப் பிரகாரமண்டபங்களும் இசை நாட்டியம் புராணம் படித்தல் சமயவாதம் செய்தல் ஆகியவற்றிற்கான தனி டண்டபங்களும் சல கோவிலில் உள்ள நான்கு வாயில்களும் நிவிருத்திகலை பிரதிஷ்டாகலை வித்யாகலை சாந்திகலை ஆகியவற்றிற்கு ஒப்பிடப்பட்டுள்ளன கோவிலின் அகன்று விரிந்த அடித்தளம் மேலே செல்லச் செல்ல குவிந்து தூபியில் முடிவது பருப்பொருள் சூக்கும நிலையைக் அடைவதைக் குறிக்கும் சிகரத்தின் மீதுள்ள அமிருத கலசம் பிறப்பற்ற பெருநெறியை உணர்த்துகிறது.

கருவறையிலுள்ள சிவலிங்கத்தை அருவமாயும் உருவமாயும் இருந்து அருட்டொழில் புரியும் இறைவனின் குறி என்று சேக்கிழார் காட்டுவதை நாம் காணலாம். "காணாத அருவினுக்கும் உருவினுக்கும் காரணமாம் நீள்நாகம் அணிந்தார்க்கு நிழல் குறியாம் சிவலிங்கம்" என்பது சேக்கிழார் வாக்கு.

திருக்கோயில் அமைப்பு முப்பொருள் உண்மையை உணர்த்துவதாகும் கருவறையில் வீற்றிருக்கும் இறைவன் பதி, அவனை நோக்கி கிடக்கும் நந்தி பசு, நந்தியின் பின்புறம் அமைந்துள்ள பலிபீடம் பாச நீக்கத்தை உணர்த்தும் இதை திருமூலர் கூறுகிறார்.

"ஆய பதிதான் அருட்சிவ லிங்கமாம்
ஆயபசுவும் அடலேறென நிற்கும்
ஆய பலிபீட மாகுநற் பாசமாம்
ஆய அரனிலை ஆய்ந்துகொள்வார் கட்கே."

திருக்கோயிலுள்ள உருவங்கள் அவற்றில் காணப்படும் அங்க முத்திரைகள் அணிகள் அயுதங்கள் வாகனங்கள் ஒவ்வொன்றும் ஒரு தத்துவத்தைப் பின்னனியாகக் கொண்டவை. விரிவஞ்சி அவற்றை விளக்கப்புகவில்லை எடுத்துக்காட்டாக சோமாஸ்கந்தர் போன்ற யோக மூர்திகளும் கால சம்மாரமூர்த்திகளும் முறையே காத்தல் தோற்றம் அழித்தல் ஆகிய முத்தொழில்களைக் குறிப்பன நடராச திருமேனி இறைவனின் பஞ்சகிருத் தியங்களைக் குறிப்பன என்பதை யாவரும் அறிவர்.

ஐயாற்றில் கயிலைக்காட்சி பெற்ற அப்பரடிகள் கோயில் வழிபாடு செய்ய வேண்டிய முறையை ஆரூரன் முன்னிலையில் தெளிவாக குறிப்பிட்டுளளார் அவர் காலத்தில் ஐயாற்று மக்களுக்கு அத்தகைய முறையீடு தேவைப்படவில்லை போலும் அதனால் இன்று ஐயாறதனில் சைவனாகி நிற்கும் பெருமானை வழிபட வேண்டுமென நாம் நெஞ்சத்திற்கு அறிவுறுத்த வேண்டிய நிலையில் தான் இருக்கின்றோம் அவர் இன்று நம்மிடையே இருந்தால் இப்படித்தான் பாடியிருப்பாரோ!

நிலைபெறுமா றெண்ணுதியேல்
நெஞ்சே நீ வா
நித்தலு மெம்பிரானுடைய
கோயில் புக்குப்
புலர்வ தன் முன் அலகிட்டு
மெழுக்கு மிட்டுப்
பூமாலை புனைந்தேத்திப்
புகழ்ந்து பாடித்
தலையாரக் கும்பிட்டுக்
கூத்து மாடிச்
சங்கரா சயபோற்றி
போற்றி யெயன்றும்
அலைப்புனல் சேர் செஞ்சடையெம்
ஆதீ என்றும்
ஆரூராண் என்றென்றே
அலறா நில்லே.

~ நன்றி: விஸ்வநாதம் மலரிலிருந்து



# தென்திசைத் தெய்வம்

## சொல்லாமல் சொல்லும் நல்லாசிரியயர்

பல்வேறு சமயங்கள் பல்வேறு வகைகளில் கடவுளை வழிபடுகின்றன தாய் என்றும் தந்தை என்றும் அரசன் என்றும் தலைவன் என்றும் பிணி தீர்க்கும் மருத்துவன் என்றும் அறியாமை போக்கும் ஆசிரியயன் என்றும் பலவகை நிலைகளில் கடவுள் வழிபாடு உலகில் நிகழ்ந்து வருகிறது அவற்றுள் கடவுளை ஆசிரியர் நிலையில் வைத்து வழிபடும் முறையே தஷிணாமூர்த்தம்.

தன் வாய்மொழிகளால் கற்பிக்கும் ஆசிரியனைவிட ஒப்புயவற்ற தன் துாய இனிய வாழ்வின் சிறப்பியல்பால் மாணவர்களுக்கு உள்ளொளி பெருகச்செய்யும் திறம் உடையவனே மிகவும் சிறந்த நல்ல பேராசியன் ஆவான். அதனாலேயே அருணகிரிநாதர் தம் திருச்செந்தூர் திருப்புகல் இவரை ஊமைத்தேவர் எனக் குறிப்பிடுகிறார்.

தஷிணாமூர்த்திவேதாகமப் பொருள்களையெல்லாம் சொல்லாமற் சொல்லி விளக்கிறார். என்கிறார் பரஞ்சோதி முனிவர் அங்ஙனம் மாணாக்கர்களைச் சிந்திக்கச் செய்து உய்த்துணர வைக்கிற ஒப்புயவர்வற்ற சிறந்த தெய்வீக அருட்பேராசியர் தஷிணாமூர்த்தி எனலாம்.

மனித குலத்தின் விழுமிய பெருஞ்செல்வமாக விளங்கும் சிந்தனைத் திறன் சிந்தித்து உணரவல்ல உரிமைச்சிறப்பு சிந்தித்து உணர்வதானால் விளையும் தெளிவுநலம் ஆகியவற்றை விளக்கிக்கொண்டு தஷிணா மூர்த்தி சிறப்புடன் திகழ்கிறது.

தஷிணாமூர்தத்தி சின் முத்திரையிலுள்ள கட்டைவிரல் பதியாகி இறைவனைக் குறிப்பிடுகிறது. ஆள்காட்டி விரலை பசுவாகிய உயிரைக் குறிப்பிடுகிறது ஆள்காட்டி விரலை அடுத்துள்ள் மூன்று விரல்களும் மும்மலங்கள் என்று சொல்லப்படும் ஆணவம் கன்மம்

மாயை ஆகியவற்றை உணர்த்துகின்றன பசுவாகிய உயிர் பதியாகிய இறைவனைச் சென்றடையவேண்டும்.

ஆணவம், கன்மம், மாயைய என்ற மும்மலங்களும் பதியைப் பசு நெருங்கவிடாமல் வைத்திருக்கின்றன அதாவது இறைவனை அடையவொட்டாமல் உயிரை மும்மலங்கள் மறைத்திருக்கின்றன மனிதன் பொதுவாக நல்லவற்றிலிருந்து விலகித் தீயவற்றின் பக்கம்தான் இருப்பான் இதுதான் பசுவாகிய ஆள்காட்டி விரல் பதியைய விட்டு விலகி இருப்பதோடு மும்மலங்களின் பக்கத்திலும் இருக்கிறது பசு மலங்களின் பக்கத்திலும் மலங்கள் பசுவின் பக்கத்திலும் இருக்கின்றன பசு எனப்படும் ஜீவர்களாகியய நாம் பதியயாகிய இறைவனைச் சென்றடைவதையே நோக்கமாக் கொண்டு வாழ்க்கையை அமைத்துக்கொள்ள வேண்டும்.

தஷிணாமூர்தி முஹுர்த்தங்கள் ஆகம விதியில் 35 வரை சொல்லப்பட்டிருக்கிறன. அவற்றில் மிகவும் சில முஹுர்த்தங்களே ஆலயங்களில் பூஜையில் உள்ளன. பெரிய ராஜ கோபுரங்களில் தென்திசையில் சில தஷிணாமூர்த்தி விமானங்கள் சுதை வேலையில் காணலாம் உற்சவமூர்தியயாக மிகச் சில கோயில்களில் தான் உள்ளது அதில் மயிலாடுதுறை ஓமாம்புலியூர் ஆலங்குடி மங்கைமடம் ஆகிய ஊர்கள் குறிப்பிடத்தக்கவை நவக்கிரகங்களில் குருவுக்குப் பதிலாக தஷிணாமூர்தியை வழிபடலாம்.

நவக்கிரங்களில் குருவுக்கு ஷேத்திரம் திருச்செந்தூர் ஸ்ரீபாலசுப்பிரமணிய ஸ்வாமியைய பெரியவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள்

## குருவுக்கு ப்ரீதி

இவர் தேவகுரு ஆவார் இவருடைய பார்வைால் தோஷங்கள் அனைத்தும் நீங்கும் பூர்ண சுபர் தனுசு மீன ராசிகளுக்கு அதிபதி குருவின் பார்வை கோடி தோஷத்தை நீக்கும்.

5, 7, 9 ஆம் பார்வை உடையவர்
திக்கு - வடக்கு
அதிதேவதை - பிரமன்
ஸ்ரீதடசிணாமூர்தி- வழிபாடு



## ஸ்ரீ தட்சிணாமூர்த்தி வழிபாடு

தன்னை நாடி வந்து தொழும் அடியயவர்கட்குப் பரமசாந்தியைய அளிக்கும் பாங்கிலே ஆலமரத்தின் அடியிலே தெற்கு நோக்கசிய திருக்கோலத்தில் காட்சியளித்துக் கொண்டிருக்கிறார் தட்ஷிணாமூரத்தி சிவஆலயங்களனைத்திலும் முதற் பிராகரத்தில் சந்நிதி கொண்டு திகழ்கிறார்.

ஆலிலை மேல் பள்ளி கொண்டார் கிருஷ்ணபகவான் ஆலமரத்தின் கீழ் வீற்றிருந்தார் சிவபெருமான் என்பது புராண வரலாறு உண்ணுவதற்குப் பயன்படாத பழத்துடன் இருந்தாலும் ஆலமரம் எப்படி பலறூறு விழுதுளை விட்டு பல்கிப் படர்ந்து அழியயயாமல் நிலை பெற்று நிற்கிறதோ, அப்படி வளர்ந்து பெருகும் நிலையையக் குறிக்கவே ஆலமரத்தின் கீழ் அமர்ந்தார் பகவான் என்பதாகக் கூறுவர்.

மனித மனம் ஆசையின் பாற்பட்டு சம்சாரம் என்னும் பந்தமாகி மரத்தின் மீதேறி அல்லற்பட்டுத் தவறிக் கீழே விழ நேரும்போழுது அங்கே தடுத்தாட்கொள்ளும் பரமதயும்நிதியாய் பரமன் மரத்தினடியில் வீற்றிருந்து. பரமதயாநந்தியாய்

பாதுகாத்தருள்கிறார் என்பதே இதன் தத்துவம் மேலும் மூலக்கனலான குண்டலினி சக்தியை சிவராஜ யோகத்தால் புருவங்களின் மையத்துக்கு ஏற்றினால் என்றும் இளமைத் தோற்றத்துடன் தட்சிணாமூர்தியின் தோற்றம் அமைந்துள்ளது.

நவக்கிரக சஞ்சாரத்தில் குருபகவான் வீற்றிருக்கும் சில இடங்களினால் கெடுபலன்களுக்கு உள்ளாகிறவர்கள் வியாழக்கிழமை தோறும் தட்சிணாமூர்தியை வணங்கி வழிபடலாம்.

அவ்வாறு தட்சிணாமூர்திக்கு சந்திதி இல்லாத ஆலயங்களில் நவக்கிரங்களில் ஒருவராக உள்ள வியாழ(குரு) பகவானை வணங்கி வழிபட்டு தீமைகளிலிருந்து விடுபட்டு நல்வாழ்வைப் பெற்று மகிழலாம்.

## குருபகவான் பலனளிக்கும் பரிகாரங்கள்

**அ) கொண்டைக்கடலை தானம்**

குரு பகவானின் பரிகாரத்துக்கு கொண்டைக்கடலை தானம் ஏற்றது. இத்தகு தானம் வியாழக்கிழமையில் தருவது சிறப்பு. குரு பகவானின் தெசை என்றைய தினம் ஆரம்பித்ததோ. அன்றே (அ) அதே கிழமையிலே தானம் அளிக்கலாம். இதனை பச்சையாகத் தராமல் வேகவைத்து சுண்டல் செய்து வழங்குவதும் உண்டு. குரு பகவானால் ஏற்படும் சிறுசிறு தொல்லைகள் அகலும். அற்புதமான பரிகாரம். ஏழை பணக்காரன் என்ற பாகுபாடுகளின்றி செய்ய முடியும்.

**ஆ) ததியோதனம் (அ) தயிர்ச்சாதம் தானம்**

வெண்மை நிற (அ) மஞ்சள் நிற பசுவின் பாலினால் தயாரிக்கப்பட்ட தயிர் கொண்டு பச்சரிசி சாதம் கலந்த ததியோதனம் (அ) தயிர் சாதம் சிறந்த தானம். ஆறாமல் சுடச்சுட கொடுத்தல் சிறப்பு. இயன்றவர்கள் சுவாமிக்கு நைவேத்தியம் படைத்த பின்பு ஏழை பிராமணர் முதலான ஏழைகட்கு இலைபோட்டுப் பரிமாறலாம். இயலாதவர் பொட்டலமாகக் கட்டி விநியோகிக்கலாம்.

**இ) வறுமை நீங்கி வளம் சேர்க்க தானம்**

வறுமையில் வாடித் தவிப்போர் அதிலிருந்து நீங்கி வளம் பெற சிறப்பான வழி ஒன்று உண்டு. 14 வியாழக்கிழமை தொடர்ந்து முறையாக விரதமிருந்து (முறையான விரதம் என்பது என்ன? வியாழக்கிழமை சூரிய உதயத்துக்கு முன்பு நித்திரை கலைந்து எழுந்திருக்க வேண்டும். எழுந்திருந்தது முதல் ஒரு மணிநேரம் மௌனம் இருக்க வேண்டும். பின்பு அதிகாலையில் குளித்து விட்டு நவக்கிரக வழிபாட்டைச் செய்ய வேண்டும். குலதெய்வ வழிபாடு, இஷ்டதெய்வ வழிபாடு இவையெல்லாம் செய்து பூஜை வழிபாடுகளை நிறைவு செய்து பகலில் ஒரு நேரம் மட்டும் வெள்ளைப் பசுவின் பாலிலிருந்து தயாரான தயிர் மற்றும் பச்சரிசி சாதம் மூலம் தயாரான தயிர்ச்சாதம் மட்டும் சாப்பிட வேண்டும். நோன்பு இருக்க வேண்டும்.



14-வது வாரம் தன் சக்திக்கும் வருமானத்துக்கும் ஏற்றபடி படாடோபம் இல்லாமல் தன்னால் இயன்றதை வேதம் அறிந்த பிராமணருக்கு தானமாக வழங்கி, அவரை வலம் வந்து வணங்கி ஸ்தோத்தரித்து நமஸ்கரித்து நமஸ்காரம் (வீழ்ந்து வணங்குதல்» செய்துகொள்ள வேண்டும். "நான் குருபகவானைக் கண்ணால் பார்த்து அறியேன். தாங்கள் நினைத்தால் என்னால் அடைய முடியாத எல்லா சுகங்களையும் நான் அடையும்படிச் செய்யமுடியும். உங்களுடைய கருணைமிக்க பார்வையினால் நான் எக்காலத்திலும் தரித்திரத்தனம் இல்லாமலிருக்க வேண்டுமென்று என்னை ஆசீர்வதியுங்கள். தாங்கள் செய்யும் இந்த ஆசீர்வாதம் மிகமிக உயர்ந்தது". என வாய்விட்டு ஸ்தோத்தரித்து இருதய சுத்தியுடன் கூற வேண்டும். பின்பு இயன்ற அளவு தானம் வழங்கி ஆசிகளைப் பெற வேண்டும். இவ்வாறு ஆசி பெற்றுக்கொள்ள நுனி உடையாத, மஞ்சள் தடவிய பச்சரியை அதாவது மங்கள அக்ஷதையாக அவரிடம் கொடுத்து, பெற்றுக்கொள்ள வேண்டும். இத்தகைய அக்ஷதையை தானும் தன்னை சார்ந்தவர்களும் தலையில் வைத்துக்கொண்டு குருபகவானின் குன்றாத பேரருள் தன்னை முற்றிலும் சார்ந்துள்ளது என முழுமனதுடன் நம்பி மனத்திலுறுதியுடனிருக்க வேண்டும். இந்தப் பரிகாரம் ஏழைகட்கு ஒரு மாபெரும் வரப்பிரசாதம் ஆகும். இதனால் நீடித்து பீடித்து வந்த தரித்திரத்தன்மை அகலும். இதை ஒரு தடவையுடன் நிறுத்திக் கொள்ளலாம். சிலர் இந்த தானம் வாழ்வில் சுகம் கண்டவுடன் மீண்டும் செய்யத் தூண்டும். மேலும் சந்தோஷமடைய திரும்பத் திரும்பவும் செய்யலாம்.

**ஈ) வஸ்திர தானம்**

மஞ்சள் நிறக் கரையுடைய வேட்டி துண்டு அல்லது மஞ்சள் நிறத் துணிகள் ஆகியவற்றில் ஏதாவது ஒன்றினை தனது ஜென்ம நட்சத்திரத்தன்று சூரியன் உதித்து ஒரு நாழிகைக்குள் தானம் கொடுக்க வேண்டும். தனது வீட்டுக்குத் தானம் வாங்குபவரை அழைத்து வந்து கால்களைக் கழுவி அவர்களை சந்தோஷப்படுத்தி தானம் கொடுக்க வேண்டும். தானம் கொடுப்பதை ஏனோ தானோ என்று அலட்சியம் செய்யக் கூடாது.

### பூர்வாக்ஷ்ட பரிகாரம்

தனுர் மாதம் என்னும் மார்கழி மாதத்தில் வரும் பூராட நக்ஷத்திரத்திலும், பங்குனி மாதத்தில் வரும் பூராட நக்ஷத்திரத்திலும்,

பூராட நட்சத்திரக்காரர்கள் குருபகவானுக்கு பரிகாரம் செய்து கொள்வது நலம் பயக்கும்.

பூராட நட்சத்திரத்தில் பிறந்தவர் மங்கள ஸ்நானம் செய்து கொண்டு மஞ்சள் வஸ்திரம் தரித்து பிரம்ம முகூர்த்தத்தில் முதலில் கணபதியையும் பிறகு நவக்கிரகங்கள், குலதெய்வ பிரார்த்தனை செய்து கொண்டு பஞ்சாட்சரம், அஷ்டாட்சரம் இவற்றில் ஒன்றை சூரிய உதயம் வரை ஜபதபங்களில் மூழ்கி தர்ப்பணம் செய்து சூரிய உதயத்துக்குப் பின்பு ஹோமமும் செய்து நுனி வாழை இலையில் வடகிழக்கு முகமாக குருபகவானுக்கு ஸ்தானம் அமைத்து அவரவர் வயது எத்தனையோ அத்தனை கைப்பிடி அளவு கொண்டைக் கடலையை இலையில் வைக்க வேண்டும். அதன்மேல் குருபனவானுக்குரிய யந்திரம் அல்லது பிரதிமையை வைக்க வேண்டும். அதனருகில் கட (கலசம்) ஸ்தாபிதம் செய்தல் வேண்டும். குரு பகவானை காயத்ரி மந்திரத்தால் ஆவாகனம் பூஜை செய்யலாம். நவக்கிரக ஆவாகன மந்திரங்களைப் பயன்படுத்தலாம், தயிர்ச்சாதம், கற்கண்டு சாதம், கொண்டைக்கடலை சுண்டல், தாம்பூலம், பழம் இவற்றைக் நைவேத்தியமாக நிவேதனம் செய்யலாம். பூஜையில் வைத்திருந்த கட (கலசம்) தீர்த்தத்தை வீட்டில் உள்ள பெரியவர்கள் குலகுரு வேத விற்பன்னர்களாக இருந்து சாஸ்திரரோக்தமான காரியங்களை நடத்தி வைக்கும் ஆசான் மூலம் பூராடம் நட்சத்திரக்காரர்கள் அபிஷேகம் செய்து கொள்ளலாம். அபிஷேத்தின் மீது கட்டியிருக்கும் வேட்டியை யாராவது ஒருவருக்கு தானமாக வழங்கலாம். ஞாயிறு, திங்கள், செவ்வாய், சனி ஆகிய கிழமைகளில் பிறந்தவர்கள் துளசியால் அர்ச்சனை செய்க.

### புதன், வியாழன் பிறந்தவர்களுக்கு பரிகாரம்

மேற்கண்ட பிரிவில் கூறிய பூராட நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் புதன் வியாழக்கிழமைகளில் பிறந்திருந்தால் பூராட நட்சத்திர பூஜையை புதன், வியாழன் ஆகிய கிழமையிலேயே செய்ய வேண்டும். அது மட்டுமல்ல. "ஓம் நமோ நாராயணப"- என்ற அஷ்டாக்ஷர மந்திரத்தை ஜெபம் செய்ய வேண்டும். பின்பு பூஜை முடிந்து வசதியும் வாய்ப்பும் உள்ளவர்கள் இயன்ற அளவு அன்னதானம் அளிக்கலாம். அது இயலாதவர்கள் தயிர்ச்சாதம் அளிக்கலாம். அதற்கும் வாய்ப்பு



இல்லாதவர்கள் காகத்துக்கும், வெண்ணிறப் பசுவுக்கும் இயன்ற அளவு கிடைத்ததை தாராளமாக வழங்கலாம். பூஜையை இனிதே முடித்து விடலாம்.

இ... நட்சத்திர பூஜை செய்ய நலம். (அ) தாங்கள் பிறந்த மாதத்தில் பூராட நட்சத்திரத்தில் செய்யலாம். மிகவும் விசேஷம் ஆனது ஆகும்.

## மணியார் சொல்லும் செய்தி

### மாமாங்கம் என்பது என்ன?

குருபகவான் நவக்கிரக பீடத்தில் வருஷக்கோள் ஆவார். அவர் பன்னிரண்டு வருஷத்திற்கு ஒருமுறை சிம்மராசியில் அங்கு அவர் சஞ்சரிக்கும் அந்த ஆண்டில் சூரியன் மாசி மாதத்தில் சஞ்சரிக்கும் போது சந்திரன் மகம் நட்சத்திரத்தில் வரும் தினம் "மகாமகம்" என்னும் மாமாங்கம் மாதாமாதம் சிவராத்திரி வந்து போகும் ஆனாலும் மாசி மாதம் வரும் சிவராத்திரியை "மகா சிவராத்திரி" என்று அழைப்பது போல் மாசி மாதம் வரும் மகத்தை "மகாமகம்" என்று அழைப்பர்.

மாமாங்க வருஷத்தில் திருமணம், சாந்திமுகூர்த்தம் போன்ற சடங்குகளில் ஈடுபடக்கூடாது என்றும் முழுக்க முழுக்க பக்தி வெள்ளத்தில் முழுகவேண்டும் பகவத் நாமம் சொல்லி அந்தப் பரவசத்தில் திளைக்க வேண்டும் என்று முன்னோர் மொழிந்தனர்.

கும்பகோணம் என வழங்கும் திருக்குடந்தையில் மாமாங்க தினத்தன்று (திருக்குளத்தில்) 1.சரயு 2.கங்கை 3. யமுனை 4. சரஸ்வதி 5.நர்மதை 6. கோதாவரி 7. கிருஷ்ணா 8. காவேரி 9.குமரி என்ற நவ நதிகளும் வந்து கலக்கின்றன. அப்புனித நன்னாளில் பக்த பெருமக்கள் சென்று அம் மகாமக் குளத்தில் நீராடி புனிதம் பெறுகின்றனர். இது காலந்தோறும் நடைபெற்றுவருவதொன்றாகும்.

## குங்குமம்

பெண்கள் நெற்றியில் கட்டாயம் வைத்துக் கொள்ள வேண்டியது குங்குமம். அது நடுவகிட்டில் சுமங்கலிகளால் அணியப்படுவதும் உண்டு. வடபாரத மகளிர் இதை ஸிந்தூர் எனச் சிறப்பித்துக் கூறுவார்.

குங்குமம் என்கிற செந்நிறத் தூள் (மஞ்சரள மூலதனமாகக் கொண்டு தயாரிக்கப்படுவது.) மஹாலக்ஷ்மியை நினைவூட்டுகிறது. மஹாலக்ஷ்மி வாசம் செய்யும் ஐந்து முக்கிய இடங்களில் ஒன்றாக தலைமுடியின் நடுவகிட்டுப் பகுதி கருதப்படுகிறது. அதனால் மணமான பெண்கள் நெற்றியின் நடுவகிட்டுப் பகுதியில் குங்குமம் அணிகின்றனர்.

பெண்கள் தினந்தோறும் நடுவகிட்டில் குங்மம் இட்டுக் கொள்வது அவசியம். நெற்றியில் தினசரி ஸ்டிக்கர் பொட்டு இடும் பெண்கள் குறைந்த பட்சம் செவ்வாய், வெள்ளிக் கிழமைகளில், பண்டிகை நாட்களில் நெற்றியிலும் மஞ்சளாலான குங்குமத்தையே இட்டுக் கொள்ள வேண்டும். இது அவசியம்.

ஆண்கள் குங்குமப் பொட்டு இட்டுக் கொள்ளக் கூடாது என்று கூறுகிறவர்கள் அறிவிலிகள். அவர்கள் நமது பண்பாட்டுப் பகைவர்களும் கூட என்பதை உணர வேண்டும். அது போலவே பெண்கள் திருநீறு அணிந்து கொள்வதும் தவறு என்று எண்ணுபவர்கள் மூடர்கள்.

நெற்றியில் விபூதியும், குங்குமமும் அணிவதால் இறைவனிடத்தில் பக்தி உண்டாகும். அன்றாட வாழ்வில் நல்லன நடக்கும். நீண்ட ஆயுள் கிடைக்கும் என்பது சாஸ்திரம் ஆகும்.

***நிறைவாக ஒன்று***
***நீறில்லா நெற்றி பாழ்.***
***கோயில் இல்லா கிராமம் அடவி.***

காடே என்பதை உணர்ந்து, நாம் எந்த சம்பிரதாயத்திற்கு உரிய புண்ட்ரதாரணம் செய்து கொள்ள கூச்சப்படாமல் துணிச்சலான தன்மானமுள்ள இந்துவாக வாழ்வோமாக.

***நன்றி***
***இந்துவே உன்னை அறிந்துகொள்.***



## தீர்க்க சுமங்கலி

பெண்கள் பெரியோர்களை நமஸ்கரிக்கும் போது "நீ தீர்க்க சுமங்கலியாக இருப்பாய்!" என்று பெரியோர்கள் ஆசீர்வதிக்கிறார். இதில், உன் கணவன் வெகுகாலம் ஜீவித்திருக்க வேண்டும் என்ற கருத்தும் உள்ளடங்கி இருக்கின்றது. ஆகவே, பெண்ணினுடைய வாழ்க்கை முழுவதும் கணவனுடைய க்ஷேமத்தைப் பொறுத்தே அமைகிறது. ஒரு பெண்கள் செய்யக்கூடிய நல்லது கெட்டதனுடைய பலனெல்லாம் கூட பூரணமாகப் பெண்ணுக்கே உரித்தாகி விடுகிறதில்லை. அது அவர்களது கணவனைத் தான் சேருகிறது. எனவே, பெண்கள் நல்லதை நிறையச் செய்தால். நல்ல ஆசீர்வாதத்தை நிறையப் பெற்றால், கணவன், குடும்பம் எல்லோரும் க்ஷேமமாக இருக்க முடியும்.

சில பெண்கள் பெரியோர்களை நமஸ்கரித்துக் கொண்டு கீழ்கண்டவாறு பிரார்த்தனை செய்து கொள்கிறார்கள், "நான் மஞ்சள் குங்குமத்துடன் சாக வேண்டும்."- இதனால் பெண்கள் மஞ்சள்-குங்குமம் தான் இட்டுக் கொள்ள வேண்டும் என்று தெரிகிறது. மஞ்சள்-குங்குமம் என்பது அம்பாளின் நினைவுச் சின்னம். ஆதலால் தற்காலத்தில் உடைக்கு ஏற்றவாறு நெற்றிக்கு இட்டுக்கொள்வது-அல்லது கலர் சாந்தை இட்டுக் கொள்வது அல்லது நெற்றிக்கே இட்டுக்கொள்ளாமல் இருப்பது போன்றவை வருந்தத்தக்கதாய் இருக்கின்றது. மேலும் நெற்றிக்கு இட்டுக் கொள்வதென்பது-சினிமாவில் எப்படி எல்லாம் இட்டுக்கொள்கிறார்களோ, அப்படியெல்லாம் விபூதி-குங்குமம் ஆகியவற்றை மேலும் கீழுமாக இட்டுக்கெள்வது என்பது சரியானதல்ல. சினிமாவில் வரும் ஒவ்வொரு நிகழ்ச்சியும் பொழுதுபோக்காக எடுத்துக்கொள்ள வேண்டுமே தவிர, வாழ்க்கைக்கு ஏற்றதாக எண்ணி அமைத்துக் கொள்ள கூடாது.

**(ஜெயேந்திர சுவாமிகள்)**

## பெண்ணின் பெருமை

உலகத்தில் எந்த நாட்டிலுமில்லாத பெரும் மதிப்பு இந்த நாட்டிலே பெண்களுக்குண்டு. குழந்தைப் பருவத்திலே- ஒரு வயது முதல் -பெண்களை அம்பாளாகப் பாவித்து, நவராத்திரி சயமத்தில் பூஜை செய்யும் படியாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

மணமான பிறகு தம்பதிகளையே வைத்து, உமா மஹேஸ்வரராகப் பாவித்து, தம்பதி பூஜை செய்யச் சொல்லப்பட்டிருக்கிறது. சுமங்கலிகளைத் திரிபுர சுந்தரி வடிவமாகப் பாவித்து பூஜை செய்யச் சொல்லப்பட்டிருக்கிறது. எல்லாவற்றிற்கும் மேலாகத் தாயையே தெய்வமாகவும் நினைக்கும்படி சொல்லியிருக்கிறது.

இவ்வளவு புனிதத்துவம் பெண்களுக்கு எந்த நாட்டிலும், எந்த மதத்திலும் கொடுக்கப்படவில்லை.

ஒவ்வொரு நாளும் காலையில் எழுந்தவுடன் இரண்ட உள்ளங்கைகளையும் உரசிப் பார்த்துவிட்டு, உள்ளங்கை நுனிப்பாகத்தில் பொருளாதாரத்திற்கு அதிதேவதையான லக்ஷ்மிதேவியான சக்தியையும், உள்ளங்கை அடிப்பாகத்தில் துன்பங்களையெல்லாம் அகற்றி, இன்பத்தை- மோக்ஷத்தை-அளிக்கக் கூடிய பார்வதி தேவியான சக்தியையும், நினைத்துப் பார்ப்பதென்பது பழங்காலத்திலிருந்து வரக்கூடிய ஒருமுறை. பிறகு நித்திய கன்னிகைகளான-புனிதமானவர்களான- புண்ய ஸ்திரீகளாக-அகல்யா, திரௌபதி, சீதா, தாரா, மண்டோதரி போன்றவர்களை மனதிலே நினைத்துக் கொள்ள வேண்டும்.

இப்படி நினைத்துக் கொள்வதனால், நம்முடைய வாழ்க்கையிலே சம்பவிக்கக்கூடிய மாபெரும் பாபங்கள் கூட அழிந்து விடுகிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது.

நம்நாட்டில் கல்யாணம் முடிந்தவுடன் மங்களப்பாட்டுப் பாடும் போது, "கௌரி கல்யாணம் வைபோகமே" என்று வைபோகம்



பாடுவார்கள். இதனால் பெண்கள் தன் வாழ்க்கையில் கௌரியைப்போல தன்னையே தன் கணவனுக்காக அர்ப்பணம் செய்து கொள்ள வேண்டுமென்பதையும், சீதையைப் போல் தர்மத்தின் அடிப்பமையின் கீழ் நிழல்போல் கணவனுடன் தொடர்ந்து இருக்க வேண்டுமென்பதையும், ராதையைப்போல் பக்தியையும் அன்பையும் தம்முடைய கணவரிடமும் குடும்பத்திலும் வைக்க வேண்டுமென்பதையும் "வைபோகமே" பாட்டு நமக்கு நினைவூட்டுகிறது.

*(ஜெயேந்திர சுவாமிகள்)*

## மனையடி சாஸ்திரம்

**வாஸ்து புருஷன் கிடைக்கை**

*திங்களிலிராசிநிற்குந் திசை தனில் காலை நாட்டி*
*இங்கெதிர் தலையை வைத்தே யிடது கை கீழதாகப்*
*பொங்கிய வலக்கைமேலாம் பூதலம்விளங்கவென்று*
*மங்கையே சொல்லக்கேளாய் வாஸ்துவின்கிடைக்கைதானே.*

*(இ-ள்) வாஸ்து புருஷன் அந்தந்த மாதத்து ராசியில் காலை நீட்டி அதற்கெதிராய் ஏழாமிராசியில் தலையை வைத்து இடக்கை கீழும் வலக்கை மேலுமாய்க் கிடப்பான். எ-று.*

**மேற்கோள்**

*எத்திசையயனுமாலு மிரவிதாரனிற்கும்போது*
*மத்திசைகாலைநீட்டி யதற்கேழல்தலையைவைத்து*
*மெத்தெனவிடக்கைக்கீழாய் வலக்கை தான்மேலதாக*
*வைத்ததிடுங்கண்ணினளே வாஸ்துவுங்கிடப்பன்றனே.*

**வாசல்**

காலதோவாசலாகித் தனக்குழல்சாவசொல்லுஞ்
காலவே தலையதாகிற் றனவன்சாவுசொல்லுங்
கோலியமுதுகேயாகிற் கோலினாலச்சமுண்டாம்
வாலியவயிற்றில்விட்டால் வான்பொருள்சேருமென்றே.

(இ-ள்) வாஸ்துபுருஷன் திகைக்கையில் காலில் வாசல்லிட்டால் மனையாளுக்குப் பொல்லாங்கு, தலையில் வாசல்வீட்டால் கணவனுக்காகாது, முதுகில் வாசல்விட்டால் இராஜபய முண்டாம். வயிற்றில் வாசல்விட்டால் வாழ்வுண்டாம். எ-று.

வாஸ்து எழுந்திருக்கு நாளறிய மனைகோல குடிபுக வேறு
ஏற்றுஞ்சித்திரையோர்பத்தி விருபத்தொன்றில்வைகாசி
பார்த்தவைப்பசியோராடி பதினொருவாவணியோராறில்
கார்த்திகையெட்டுதை யீறாறில்மாசியிருபதனில்
வாஸ்துவுந்தானெழுந்திருப்பான் மனைதான் வாசல்கொள்ளலாம்.

(இ-ள்) சித்திரை மாதம் 10 தேதி வைகாசிமாதம் 21-தேதி ஐப்பசிமாதம் 10தேதி ஆவணிமாதம் 6தேதி, கார்த்திகை மாதம் 8-தேதி, தைமாதம்-12-தேதி, மாசி 20-தேதி, இந்த தேதிகளில் வாஸ்து புருஷன் எழுந்திருப்பதால், இந்த நாளில் மனைகோலில் அவரவருக்குப் பொருந்திய திக்கில் வாசலில் இடமாகும். எ-று.

**மேற்கோள் உள்ளமுடையான்**

கிடந்தான்மேடமொருபத்துங் கிளரும் விடையின் மூவேழும்
அடங்கோர் கடம்ப தினொன்றி யோராயிற்றேனெட்டிற்
குடந்தருபத்தாமகனற் கூறுமக்காம்பனிரண்டிற்
இடந்தானெடுக்காலமென்றா யெல்லாத்திசைநல்லோரே.

**வாஸ்து புருக்ஷன் எழுந்திருக்குஞ் சாமம்**
**தேதி நாழிகை போசனம்**

குண்டமான்கடங்களெட்டாங் கொடியதேள்பத்தாகும்
கண்டுகோல்ரண்டாகு நன்மேடவைந்தாகுந்
திண்டிறற்சிங்கந்தானே சிறந்தமூவேழதாகும்
கண்டிலன்மறையோர்சொன்னால் வாஸ்துவுமுதிக்கும் பாரே.

(இ-ள்) சித்திரை 12 நாழிகை-5, வைகாசி 21-நாழிகை ஆடி ஐப்பசி 11-நாழிகை-2, ஆவணி- 6 நாழிகை-21, கார்த்திகை 8 நாழிகை-10, தை 12 தேதி நாழிகை 8 மாசிமாதம் 20 நாழிகை இந்நாழிகைக்கு மேல் வாஸ்து புருஷன் எழுந்திருந்து மூணேமுக்கால் நாழிகையிருப்பான் அதுமுதல் முக்கால்நாழிகை ஸ்நானம். 2ல்-முக்கால் நாழிகைபூசை, 3வது முக்கால் நாழிகை போசனம், 4ல் முக்கால் நாழிகை தாம்பூலம் 5வது முக்கால் நாழிகை-இராசியபாரம், இந்தப்படி சென்றபின் படுத்துக்கொள்வான், எ-று

கூர்த்தநான் முகூர்த்தந்தன்னைக் குறைவறப்பார்த்துக் கொள்ளவான்
வாஸ்துவின்கிடையறிந்து மனை தனைக் கோலானாகில்
சீர்த்தனபெர்ருஞுங்கேடாம் செய்தவனைத்தும்பாழாம்



மூர்த்தமாய்நாசஞ்செய்து முனியையுந்தொடருமன்றே.
(இ-ள்) நாள் முகூர்த்தம் வாஸ்துவின் கிடைக்கையு மனை கோலானாகில், பொருளுஞ் சேதமாம் செய்தவையும் பாழ், மனைகோலின் சிற்பனையும் நோய் தொடரும். எ-று

**மேற்கோள்**

வாஸ்துவின்கிடக்கைமாதம் தம் வாழ்மனைகோலிற்பாழாமாற்றுநீர்
படுக்கை தன்னில் மதியிலார் மனையொடுக்கில்
நேற்றியான தலைவன் செய்து நிலைகோடாங்குலைந்து போவா
தூற்றியாங்கெழுந்தபோதே துதித்துநீ மனைகோல்மன்னா
நல்லநாளும் முகூர்த்தமுங்கொண்டு மணைநடுவில்.

## சில தத்துவங்கள்

### (கும்பம் +தேங்காய்+கற்பூரம் +தூபதீபம்)

**அ. கும்பம்**

குடம்-தசை
அதனுள் உள்ள நீர்-குருதி
அதனுள் உள்ள இரத்தினங்கள்-எலும்புகள்
குடத்தைச் சுற்றியுள்ள நூல்-நாடிகள்
செபிக்கப்படும் மந்திரம்-உயிர்
கூர்ச்சம்-தலைமயிர்
மாவிலை -சடை
தேங்காய்-தலை
வஸ்திரம்-தோல்

**ஆ. தேங்காய்**

புற ஓடு-உலகமாயை
உள்ளீடு-பரம் பொருள்
இளநீர்-திருவருள்

எனவே தேங்காய் உடைக்கும் செயல் மாயையை அகற்றி பரஞான ஒளியைக் காட்டி அதனருளால் பரமானந்த அமிர்தத்தை நுகரச் செய்தலைக் குறிக்கின்றது.


### இ. கற்பூரம்

வெண்மையான கற்பூரமானது அக்கினி பற்றியதும் தன் வடிவை நீத்து அக்கினியுடன் கலந்து வானில் அத்துவிதமாய் விளங்குகிறது. அதுபோல ஆன்மாக்களும் ஞானக்கினிப் பற்றிய இடத்தே மாயத் தன்மை நீங்கி தூல, சூட்சும, காரண உடல்கள் அழியாப் பெற்று பரம் பொருளுடன் கலந்து பேரின்பப் பெருவாழ்வை அடையும் என்பதை உணர்த்துகின்றது.

கற்பூர ஆரத்தியைத் தொட்டு இரு கண்களிலும்ளள ஒற்றிக் கொள்ளுதல் நேத்திர சுகத்தையும் ஞானக் சுண்ணையும் தரும் என்பதை உணர்த்தும்.

### ஈ. தூப தீபம்

தூபம் கிரியா சக்தியின் சொருபம், தூபம் ஆணவ மல நீக்கத்தையும் தீபம் பாப நீக்கத்தையும் உணர்த்துகின்றன.





**வாஸ்த்து (பூமி துவக்க, வாங்க அனுகூல நாள் நேரம்) அறியும் அட்டவணை**

| ஆங்கில தேதி | தமிழ் வருஷம் | தேதி | கிழமை | ஆரம்பம் மணி.நிமி (போஜனம் தாம்பூலம் தரிக்கும் நேரம்) | முடிவு மணி.நிமி |
|---|---|---|---|---|---|
| 26-01-2003 | சித்திரபானு தை | 12 | ஞாயிறு | காலை 10.46 | காலை 11.22 |
| 06-03-2003 | சித்திரபானு மாசி | 22 | வியாழன் | காலை 10.32 | காலை 11.08 |
| 05-04-2003 | சித்திரபானு பங்குனி | 22 | திங்கள் | காலை 10.13 | காலை 10.49 |
| 23-04-2003 | சுபானு சித்திரை | 10 | புதன் | காலை 8.50 | காலை 9.26 |
| 04-06-2003 | சுபானு வைகாசி | 21 | புதன் | காலை 9.51 | காலை 10.27 |
| 27-04-2003 | சுபானு ஆடி | 11 | ஞாயிறு | காலை 7.58 | பகல் 8.14 |
| 23-08-2003 | சுபானு ஆவணி | 6 | சனி | பகல் 3.19 | பகல் 3.55 |
| 28-10-2003 | சுபானு ஐப்பசி | 11 | செவ்வாய் | காலை 7.47 | காலை 8.23 |
| 24-11-2003 | சுபானு கார்த்திகை | 8 | திங்கள் | காலை 11.00 | காலை 11.45 |

**பூமி வசிய பூ[illegible] (2003) பூமி, பொன், பொருள் அம்சம் அமைந்து விருத்திக்கும் நாள் அட்டவணை**

| ஆங்கில தேதி | தமிழ் வருஷம் | தேதி | கிழமை | ஆரம்பம் மணி.நிமி | முடிவு மணி.நிமி |
|---|---|---|---|---|---|
| 13-05-2003 | சுபானு சித்திரை | 30 | செவ்வாய் | நள்ளிரவு 12.30 | நள்ளிரவு 12.50 |
| 10-06-2003 | சுபானு வைகாசி | 27 | செவ்வாய் | பகல் 11.30 | பகல் 12.00 |
| 12-08-2003 | சுபானு ஆஅஅடி | 27 | செவ்வாய் | காலை 6.30 | காலை 6.25 |

# அனுதாபச் செய்திகள்

## என்னென்று எடுத்துரைப்பேன் ?

**தந்தை க.சின்னத்துரையின் கண்ணீர் அஞ்சலி**
பிரபலசோதிடர் மணி

இந்திரனுக்கு கருஞ் சாபம் தீர்த்த லிங்கம்
ஏளேழு சங்கத்தில் அமர்ந்த லிங்கம்
கந்தரத்தே கடுவிடத்தை வைத்த லிங்கம்
கருக் குருவிக் குபதேசம் செய்த லிங்கம்
தந்திரத்தால் வணிகப் பெண் மாமனாகி
சபைக் கேறி வடிக்குரைத்த சாட்சி லிங்கம்
கந்தன் னாய் தூதாகி சென்ற லிங்கம்
சொக்க லிங்கம் தனை நிக்கில் சொர்க்கம் தானே!

காலன் எனையழைக்க
காற்றாய் வருவான் என
காத்துக் கிடக்கையிலே
பாதி வழி சென்றிருந்த என்
பாச மகளை -நீ
பாசக் கயிறிறுத்து எமைப்
பரிதவிக்க ஏன் விட்டாய்-அம்மா
ஆண் மகனாய் நீ எனக்கு
அவதரிக்க வேண்டியவள்
அப்படி என் வாயால்
அடிக்கடி நான் சொல்வதுண்டு!
பொன்னான மகளாக
பூமியிலே பிறந்து வந்தாய்
பூப்போன்ற மணவாளன்
புனிதனாய் வந்தமைந்தான்
பெரியக்கா என்று



பெருமையாய் அழைப்பார்கள்
அக்காவாய் நீ இருந்து
ஆற்றிய கடமைகள்
அத்தனையு மெத்தனையோ!
அந்தியிலும் சந்தியிலும்
சிவனை நினைந் தெல்லோ
சீர் விரதம் நீ இருந்தாய்
பரனை நினைத்தல்லோ
பதி விரதம் நீ இருந்தாய்
அரனை நினைத்தல்லோ
அம்மா நீ நோன்பிருந்தாய்
சங்கரியை எண்ணியெல்லோ
சங்கரி நீ நோன்பிருந்தாய்
முன்னவளே! மூத்தவளே!
எண்ணற்கரிய எத்தனையோ
காரியங்கள் எந்தன் பின்னாலே
வழி வழியாய் செய்வாய் என
வகை வகை யாய் நம்பி
எண்ணி எண்ணி நான்
இறுமாந்திருந்தேனே!
அத்தனையும் பொய்யாக்கி
அரை நொடியில் நீ தீயிட்ட
கற்பூரமாய்
காற்றில் கரைந்தாயே!
மரணம் என்பது
மறுமுறையும் வருவதல்ல
உந்தன் கடமைகளை
ஒழுங்காக நிறைவேற்றி
மக்களை ஒழுங்காக்கி
வசதியாக வாழவிட்டாய்!
ஆனாலும் உன்றனுக்கு
ஆசை ஒன்றுண்டு
பரகதி யடைவேன் என்று!
பூதவுடலும் வேண்டாம் உன்-
புகலுடலும் வேண்டாமெனறோ
உன் புனித ஆத்மாவுடன்

திருவெம்பாவை நன்னாளில்
சிவசோதி ஆகிவிட்டாய்!
சாவில் கூட நீ
சரித்திரம் படைத்து விட்டாய்!
சரித்திரம் படைத்துவிட்டாய்!
ஓம் சாந்தி ஓம்சாந்தி ஓம் சாந்தி.

## மாண்புள்ள மங்கை

**ச.மகாலட்சுமி**

அன்பான பவா குடும்பம் மற்றும் சுற்றத்தார் அனைவருக்கும் மணிஅக்காவின் இறந்த செய்தி கேட்டு மிகவும் வேதனை அடைந்தோம். பக்கதிமார்கத்தால் நின்று பற்றினார் பரமன் திருவடி (உங்கள் அன்னை).

திருவெம்பாவையும் உத்தரட்டாதி நட்ஸத்திரமும் வெள்ளிக்கிழமையும் மார்கழி நீர் ஆடு என்பதற்கிணங்க அழகான பெண்ணே! ஆதியும் அந்தமும் இல்லாத அரும்பெரும் சோதி கேட்டுக்கொடி விரையாகிய சிவபெருமானைப் பாட நீ அதனைக் கேட்டுக்கொண்டே மலர்படுக்கைக்கு ஆயித்தம் ஆனிரோ! முக்கண்முதல்வனும் தெய்வீக வாசனை நிரம்பியவனும் வலிமைகள வளர்ப்பவனும் ஆகிய சிவனை அம்னை வணங்கி ஓடி, ஓடிதரிசணம் செய்வதும் அர்ச்சனைத்தட்டுடன் யாரும் வாங்க முடியாத பெரும் பழம் வெற்றிலை பாக்கு குங்குமம் பட்டுவைத்து கையில் ஏந்திப் பக்தியுடன் கோயில் வரும் காட்சி என் மனக்கண் முன் நீங்காமல் காரைநகர் பதியில் நல்ல பெற்றோருக்கு மணிமேகலை என்னும் நாமத்துடன் அமர்ந்து அன்பின் பண்பின் பிறப்பிடமாய் பாசத்தின் புகலிடமாய் வாழ்கைத்துணைவருடன் மக்களுடன் இல்லறவாழ்வில் இனிதாய் அமர்ந்து மங்கிநீரோ.

நோயிற் தளராமல் நொந்து மனம் வாடாமல் பாயிற் கிடக்காமல் பூவோடும் பொட்டோடும் "ஆக்கையாற் பயனென் அரன்கோயில் வலம் வந்து பூக்கையால் ஆடிப்போற்றி" வழிபட்டு பக்திமார்க்கமாய் பரன் திருவடியை அடைந்து விட்டீர்களே! அக்கா இன்று காரைநகர் கழைஇளந்து நிற்பதுபோல் எனக்கு கவலை அக்கா, உமது கணவன்



மக்கள் மருமக்கள் பேரப்பிள்ளைகள் உற்றார் உறவினர் எல்லோரோடும் மணி அம்மாவினது ஆத்மா சாந்தியடையப் பிராத்திக்கிறேன்.

என்றும் அன்பான
தங்கை திருமதி ச.மகாலஷ்மி
அவுஸ்டரேலியா

## புத்திகள் புகட்டிய உத்தமியே போயினையோ சிவகாமிபதம்

**கனடா கிருஷ்ணதாஷன்**

**ஆசை மகனின் கண்ணீர் அஞ்சலி**

ஐயிரண்டு திங்களாய் அங்கமெல்லாம் நொறத்து பெற்று என்ற பட்டணத்தார் பாலுக்கு அமைய இந்த பூவுலக்கு என்னையும் என் அருமைத்தங்கையும் அறிமுகம் செய்த என் தெய்வத் தாய் இன்று இந்த பூவுலகை விட்டு தான் வணங்கும் அன்னை சிவகாமியின் பாதர விந்தங்களில் முத்தியடைந்து விட்டா அம்மா. என் அப்பா அருமைத்தங்கை என்னை விட்டு பிரிந்தாலும் எங்கள் இதயத்தை விட்டு நீங்காத சுவடுகள்

ஒரு மகனை எப்படி வளர்க்க் வேணுமோ அப்படி எனக்கு நல்லறிவு, தெய்வபக்தி நற்சிந்தனைகள் எல்லாம் சொல்லி நான் நாட்டை விட்டு தனிமையில் வாழ்ந்தாலும் அவசொன்ன வார்ததைகளும் என் அம்மாவின் நன் நடத்தையும் என்னை ~~திசை~~ திசை ~~விரும்பி~~ திரும்பாமல் வாழவைத்து விட்டது! இனியும் எங்களை தெய்வ பதம் அடைந்த என் அன்பு தாய் காத்து அருள வேண்டும்.

## என் அன்புத் தாய்க்கு கண்ணீர் என் சமர்ப்பணம்

என் அம்மா நீர் எங்கு சென்று விட்டாய்?
என் அம்மா நீர் எங்கு சென்று விட்டாய்?
பத்து மாதம் சுமந்து பெற்ற என் அம்மா

நீர் இன்று பாரினில் இல்லையே என் அம்மா
நீர் பெற்ற முத்துகள் இரண்டு அம்மா
உன்னைப் பிரிந்து தவிக்கும் எங்கள் இதயங்கள் அம்மா
உன் நினைவுகள் என் நெஞ்சை வரைக்குதம்மா
உன் திருமுகம் என் நெஞ்சில் வாழுதம்மா
உற்றாரை மறவாமல் திரிந்தாயம்மா!
உன் குறைகள் யார் தீர்த்தார் அம்மா
ஆசை என்று கேட்டது ஒன்று அம்மா
உன் ஆசை முடிவதற்கு நீர் எங்கு சென்று விட்டாய் அம்மா
உன் சகோதர்களுக்கு நீர் மூத்தவளாய் பிறந்தாய் அம்மா
இன்று அவர்களின் இதயங்களில் தெய்வமாய் வாழுகின்றாய் அம்மா
உன் கதையில் ஓர் சிரிப்பு இருக்கும் அம்மா
உன் சிரிப்பை இனி எங்கு காண்போம் அம்மா
உன் பார்வையில் ஓர் உறுதி இருக்கும் அம்மா!
வந்த கணவனுக்கு கற்பு கரசியாய் வாழ்ந்தாய் அம்மா
கணவனின் மார்பினில் தலைவைத்து சென்று விட்டாய் அம்மா!
கட்டிய கணவனுக்கு பணிவிடைய் செய்வார் யார் அம்மா
காலத்தின் கட்டளையில் நானும் உன்னைப் பிரிந்து வாழ்ந்தேன் அம்மா
காலன் உன்னுயிரைப் பாசத்தால் கட்டினானோ?
நீர் சொன்ன வார்த்தைகள் வேதம் அம்மா!
நான் அதை முடிப்பதற்கு அருள் செய்யும் அம்மா!
ஓம்சாந்தி ஓம்சாந்தி!!!

## கண்ணீர் அஞ்சலி

**அன்பின் மருமகள் பாமினி (கனடா)**

ஆயிரம் மைல்களுக்கு அப்பால் இருந்து அருமை மாமி என்று பறந்து வந்து பார்த்தபோது உம் திருமுகத்தின் சிரிப்பை அருமை மருமகள் என்று கண்டேன் என்று நீரும் என்னை அணைத்து உபசரித்த நாட்கள் இன்றும் என் நெஞ்சை விட்டு அகலவில்லை. உம்முடன் நான் வாழ்ந்ததோ சொற்ப நாட்கள் தான். இனி என் நெஞ்சில் நீர் வாழ்வதோ என் ஆயுட்காலம் வரை! மாமிக்கொடுமை என்று பலர் சொல்லிக் கேட்டறிந்தேன்

என் மாமியின் அன்பின் பெருமையை இங்கு எல்லோருக்கு சொல்லி மகிழ்ந்தேன் ஆனால் காலமெல்லாம் நீர் எங்கள் சுவாசத்துடன் வாழுகின்றீர்! எம் நெஞ்சில் பசுமரத்து ஆணிபோல். பதிந்த உம் திருமுகத்தை எப் பிறவியில் இனி நாம் காண்போம் என்று உம் பிரிவால் கதறி கதறி அழுகின்றேன் ஓம் சாந்தி



*இப்படிக்கு*
*அன்பின் மருமகள்*
*பாமினி கிருஷ்னதாஷன்*

## நம்பமுடியவில்லை ராசா

**ராசா மாமா**

பெரியக்கா என்று பெருமையுடன் அழைப்பேன் பலவருடங்கள் உங்களை பார்க்காமல் போனாலும் உங்கள் உயிர் பிரிவால் பழைய நினைவுகள்லெல்லாம் பாதாளத்திலிருந்து பறந்து வந்த என் மனதை பதை பதைக்க செய்தன இறைவனிடம் முத்தியடைந்த உங்கள் புனித ஆத்மா சாந்தி பெற பக்தியோடு வேண்டுகிறேன்.

*உங்கள் பிரிவால் துயருலும்*
*அன்புதம்பி*
ராஜா தம்பிப்பிள்ளை கனடா

## அன்பின் பேரப்பிள்ளைகள்

அன்புள்ள அப்பம்மா என்று நாங்கள் அழைத்திடவே அறியாப் பருவத்தில் எங்களை நீர்தூக்கி மகிழ்ந்து விட, நாம் உலகு அறிந்த வேளையிலே எங்கள் அப்பம்மா எங்களுடன் இல்லை நாம் அறிந்தது எல்லாம் எங்கள் அப்பம்மா தெய்வமாகி விட்டா என்பதே!

**அன்புள்ள பேரப்பிள்ளைகள்**
**பிரியங்கா, அபிராமி.**
**கனடா.**

## மருமக்கள் அஞ்சலி

எங்கள் அன்பான அத்தைக்கு... என்றும் எம்மைவிட்டு நீங்காத அத்தையே!

எங்கள் இருவரையும் சிறுவயது முதல் இன்றுவரை உங்கள் அரவணைப்பில் வைத்து அன்பான வார்த்தைகளால் அரவணைப்பீர்களே!

தேடித்தேடி அலைகின்றோம் அத்தையே ஓடிவரவில்லையே.

உங்கள் ஆசைகளை நாங்கள் நிறைவேற்றம் நாட்கள் நெருங்கி வரும்வேளை எங்களை விட்டுப் போய்விட்டீர்களே!

எங்களை விட்டு அத்தை நீங்கள் மறைந்தாலும் நாங்கள் உங்களுடனேயே என்றும் வாழ்ந்து கொண்டிருப்போம்.

என்றும் உங்கள் புகழ்மங்காத மருமக்கள்

சாந்தி! சாந்தி! சாந்தி!

**என்றும் உங்கள் மருமக்கள்**
**இ.விஜிதா,**
**இ.தாட்சாயினி**

## அனுதாபச் செய்தி
## அக்கா மகள் மணிமேகலை

**சிவானந்தவாரி காரையூர் பொன்கோபால்**

என் மருமகளார் மணியம்மா அவர்கள் "அழுக்காறு -அவா-வெகுளி இன்னாச்சொல் -அந்நான்கும் இழுக்காமியன்ற தறம்" என்கின்ற தெய்வப்புலவரின் கூற்றுக் கமைய காழ்ப்புணர்வு அற்றவராய்,



ஆசை என்கின்ற அவலக் கடலில் அகப்படாதவராய் கோபம் என்கின்ற கொடிய அசுரனிடத்திருந்து விடுபட்டவராய் துன்பவார்த்தைகளைத் தூரத்தில் தள்ளியவராய் "இன்னா செய்தாரை ஒறுத்தல் -அவர்நாண நன்மையஞ் செய்து விடல்" என்னுஞ் வள்ளுவர் வாய் மொழிக்கமைய வேண்டப்படாதவரை வினயமுடன் அணைத்தும் "மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார் நிலமிசை நீடுவாழ்வார்" என்கின்ற குறளடியைத் தன் சிந்தையிற் கொணடு தன் இதய தாமரையில் எழுந்தருளியிருக்கின்ற பெருமை பொருந்திய சிவசிவை ஆலயத்திலே பல்வகைப்பட்ட திருப்பணிகள், திருநாட்கள் இயற்றியும் இல்லார்க்கு உதவுதல் உள்ளார்கள்

கடனே என்னும் பழமொழி வாவசகத்தை ஏற்று தன்னிடமான செல்வத்தைக் கொண்டு அற்றவர்கக்கு நற்கருமம் செய்தும் சாஸ்திரம் அறிந்தும், தோத்திரம் ஓதியும், "சீலம் என்பதைச் சிந்தையிற் கொள்வோர் ஏலவே சிவனடி எய்துவராமே" எனுந் திருமொழிக்கமைய ஒழுக்கமுடையவராய் வாழ்ந்தும்,

13-12-2002 இன்று ஆதிவீரபத்திர சிதம்பரேஸ்வர சிவகாமி அம்மையார் அழைத்வாறே அவர்களிடம் அடைந்து விட்டார் அம்மா! என் மேகலை, அன்று 05-09-2002ல் யானும் எனது பேதை ஜெயலட்சுமியும் காரைநகருக்கு முதல் முறை வந்த போது நாவக்கிரச்சி அடைப்பு வீரபத்தரிரர் கோயில் சந்தியில் எம்மைக் கண்டதும் ஆனந்த மேலீட்டால் கட்டித்தழுவி மாமா! தொல்புரத்தான் பங்கில் ஒருவன் நீர்! வந்து விட்டீர்கள் வாழ்வோம், மகிழ்வோம்!! என்று கூறி அழுத கண்ணீர் என் இதயத்தில் தங்கி உன் நினைவை ஊட்டுதம்மா! மருமகளே! மணியார் உங்களிடம் மாமா நான் உண்ட உணவுகள் பேசிய வார்தைகள் எல்லாமும் என்மனதில் விட்டு அகலுமுன்னே எம் இடம் விட்டுச் சென்றுவிட்டீர் என் செய்வேன் ஏழையேன்? சாந்தி சாந்தி சாந்தி!!!

**சிவானந்தவாரி**
**காரையூர் பொன் கோபால்**

## சிவஞானம் தையல் நாயகி அவர்களின் அநுதாபச் செய்தி

அண்ணன் மகளே ! அம்மா! மணி! உமது மாமியெனயெனை அதழிழக்குங் குரலோசை மறைந்து விட்டது நான் உன் ஒத்தாசையின்றித் தவிக்கின்றேன். என் மூத்தபிள்ளை சிவபாலதன் லண்டனிலே உன்னினைவால் வாடுகிறர். இகத்தில் தேவையானவர்கள் தாம் பரத்திலும் தேவை போலும்! உமது வாழ்நாளில் மதிப்போடும் மரியாதையோடும் வாழ்தாய் நீசெய்த நற் செயற்படி என் நிறைவாழ்வு அறுபதிலில் அணைந்த தம்மா! உன் தர்மம் போது மென்றோ சிவ ஜனைசின அழைத்தனர்? தாந்தாம் செய்த வினை தாமே அனுபவிப்பார் என்றபடி ஆலயந் தொழுது வந்து அரைமணி நேரத்தில் சிவகாமியும் சிதம்பரேஸ்வரப் பெருமானும் உன்னை அழைத்துக் கொண்டார்கள். பாராளும் பரம பதி பாதமடைந்து விட்டீர்! உன்போன்ற நலஞ் சொல்லவார் எனக்கொருவரில்லையம்மா

சாந்தி! சாந்தி! சாந்தி!!!

## பெரியம்மா உங்களை இனிக்காணுவதெப்போது?

உத்தமியாய்! பத்தினியாய்! கற்புக்கரசியாய்! இருந்து கண்ணியமாய் வாழ்ந்த சீமாட்டியே எங்கு சென்றீர்? புண்ணியமே செய்திட்ட பெரியம்மாவே! புழுவாய்த் துடிக்கின்றோம் நாம் எல்லோரும்! வெண்ணிலவாய்த் தேனள்ளி தண்ணொளி பொழிந்தீரே!

வேதனையை எங்ஙனே மொழிவோம்? எண்ணிய கருமத்தை திண்ணமாய் முடித்திடும் புண்ணியவதியே! இனிக் காண்பதெப்போ! அன்னை சிவகாமி, வீரபத்திரர், வண்ணார்பண்ணைச் சிவன், கடையிற் சிவன், கரந்தொழுது காலமெல்லாம் நிறைவுடன் வாழ்ந்திட்ட காருண்ய சீமாட்டியே! மறைந்தீரோ! உங்களைச் சுற்றியிருந்த இனபந்துக்களின் வாழ்வினிலே ஒளிவீசச் செய்தீரே! சிந்தனையில் எந்நாளும் சிறப்பான எண்ணத்துடன் சீரோடு வாழ்ந்தீரே பெரியம்மா! வந்தனையே செய்து



வழிபட்டு நிற்கின்றோம்! வருவீரோ ஒருமுறை நாம் பார்க்க பண்பின் பிறப்பிடமாய் நாம் இனபந்து போற்ற் வாழ்ந்தீர்! பரிதவிக்க விட்டுப் போனீரே! இனி எப்பிறப்பில் காண்போம் உங்களைப் பெரியம்மா!

கண்ணின் மனியென இளமையில் காத்து வளர்த்து வந்தீர்களே! பெரியம்மா! நன்றியை மறப்போமா நாம் பெரியம்மா! பண்புள்ள மயைளாள் பெற்றமனைப் பொருள் சேர்க்க அனுப்பினாய்! மண்பெற்றாய்! பொன்பெற்றாய்! பிள்ளைகளைப் பெற்றாய்! ஏற்றமிகு வாழ்வு பெற்றாய்! அன்பும் பாசமும் மிக்க மக்களின் உங்களை கவர்ந்தாய்! விண்பற்றை நாடி நீயும் விரைந்த தென்ன? எங்கள் பெரியம்மா! வாழ்வும் இதுதானா? விண்ணில் சிறப்புடனே சீர்பெற்று பெரியம்மா வாழ்கவென வாழ்ந்தியே நிற்கின்றோம் நாம் வணங்கி.

**பெறாப்பிள்ளைகள்**

## மறக்குமா இந்த மரண ஓலம்!

இறந்த நீ அறிந்திருக்க ஞாயமில்லை
இங்கு
இருந்தவர்கள் இருவிழிகள் இறைத்த நீரை,
வாடிய பூ மண்ணில் மலர்ந்ததுண்டா?
இல்லவே இல்லை
அங்கு
கூடியவர் இதை அறியாமால் இல்லை
ஆனாலும் முடியவில்லை தாயே...!
வழி விட்டு வந்த இரு விளிவிட்ட
நீர்த்துளியை,
ஒழித்துவைக்க முடியவில்லையே தாயே..!
ஏனிந்த அவலம்..?
நீ கொண்ட பாசம்!
நீ செய்த தர்மம்!
ஆலையத்தில் தொண்டு! -அதில்
உனக்கு அரைப்பங்கு!
~~சிவகாமியே~~...!

சிவகாமியே!
நீ கொடுத்து வைக்கவில்லை,
மணிமேகலையை ஏன் மரணிக்க விட்டாய்?
இனிமேலைக்கு ஒருத்தி பிறப்பாளா இப்படி?
பாண்டவர்க்கு மூத்தவனின் மறுபிறப்பா?
இல்லை இவள்
பாரிவள்ளல் பெற்றெடுத்த புத்திரியா?
"உன்னை ஆண்டவனை (தலைவனை)
இங்கு இலையாவைத்து"
மாண்டுவிட உனக்கு மனசும் வந்ததா?
தோன்றும் உயிர் எதுவும்
மண்ணில் வேர்
ஊன்றி விடுவதில்லை
மாழும் உயிர்கள் இதை
என்றும் நினைத்ததில்லை

நல்லர்க்கு ஆயுள் நடு வாழ்விலா?
பொல்லாத காலனே....!
கொல்லாதே நல்லவரை-உன்
கல்லான மனத்தினாலே!!!

**கோபால் விசாகலிங்கம்**
**உரிமையாளர்**
**கனகா ஸ்ரூடியோ**
**காரைநகர்**

# மணி அக்கா

எதிலுமே தேடல்களாய் வேகமாய் விரிந்து செல்லும் இக்கலியுக வாழ்க்கையில் எங்கெல்லாமோ அலைந்து திரியும் நாம் காலத்தின் கண்ணாடியில், வாழ்க்கையின் ஓட்டத்தில் பலதரப்பட்ட மனிதர்களை சந்திக்கின்றோம், பேசுகின்றோம் ஆனால் இவர்களில் எல்லோரும் எம் மனதில் பதிவதில்லை சிரிக்க வேண்டும் என்பதற்காக கட்டாய ஒரு புன்சிரிப்பு ~~பேசவேண்டும் என்பதற்காக கட்டாய ஒரு புன்சிரிப்~~பு. பேச வேண்டும் என்பதற்காக ஓர் இரண்டு வார்த்தை. பொய்மைச் சிரிப்பும், வார்த்தை ஜாலங்களும் நிறைந்த இன்றைய உலகில் இதைத்தான் செய்ய வேண்டிய காலத்தின் கட்டளை.



ஆனால் உள்ளத்தின் ஆன்மாவில் ஓர் இரண்டு உருவங்களின் விம்பங்கள் ஆழமாகப் பதிந்து விடுகிறது. இந்த முகங்கள் ஒரு சராசரி மனிதனின் ஆயுட்காலம் முடியும் வரை அழிக்கப்படுவதில்லை. கலைக்கப் படுவதில்லை. காரணம் அவர்கள் எல்லாம். ஏதோ ஒரு வகையில் எம் உணர்வோடும் உள்ளத்தோடும். ஒன்றாகிப் போனவர்களாகவும், எம் அன்புக்கு கட்டுப்பட்டவர்களாகவும் இருப்பார்கள்.

இவர்கள் வரிசையிலே "என்தாய்க்கு அடுத்தபடியாக என் கண்களிலும் என் ஆன்மாவின் ஆழத்திலும் புதைந்திருப்பவர் எங்கள் மணி அக்கா."

மணி அக்கா என்று வாய்நிறையக் கூப்பிடலாம்!
மனிதம் என்ற சொல்லின் மொத்த உருவம்!
தாய்மை என்ற சொல்லின் இலக்கணம்!
கருணை என்ற சொல்லின் அகராதி!
மணி அக்கா என்று வாய்விட்டு கூப்பிட வேண்டும் போல் இருக்கிறது!
தம்பி என்று அன்போடு கூப்பிடுவது இன்னும் என் செவிப்பறையில்
மோதி வெடிக்கிறது.
மணி அக்கா என்று வாய் நிறையக் கூப்பிடலாம்.
கொடிய யுத்தத்தில் எத்தனை யோபேரை இழந்தோம்.
மரணம் என்பது ~~சாசுவதமாய்~~ எங்களுக்கு வாராததா?
விம்மலும் வீரிட்டு அழும் கண்ணீரும் எமக்கே சொந்தமாக...
இவைகள்யாவும் எம்மை பாதிக்கவில்லை ஆனால்
உங்கள் இழப்பு ஆன்மாவின் அடி உயிரையும் பிடுங்கி
எறிந்தது? கற்பூரதீபம் ஒன்று காற்றுடன் சாங்கமமானது!
மாமனிதர்கள் மறைந்தும் மனதில் வாழ்பவர்கள்!
புன்னகை தவழும் முகம் இன்னும் எம் மனக்கண்ணில்...!

**பாண்டியன் கனடா.**

# ஊரிந்கு உழைத்த உத்தமி!

**ஸ்ரீசிவகாமி அம்பிகா சமேத தேவஸ்தான ஆதீன கர்த்தா S.சிவபாலன் அவர்களின் அனுதாபச்செய்தி**

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகை பொன்னம்பலவன் ஞானகுரு வாணிபதம் நாடு.

*தனம் தரும் கல்விதரும் ஒருநாளும் தளர்வு வறியா*
*மனம் தரும் தெய்வ வடிவும் தரும் நெஞ்சில் வஞ்சமில்லா*
*இனம் தரும் நல்லன எல்லாம் தரும் அன்பர் என்பவர்க்கே*
*கனம் தரும் பூங்குழலாய் "அபிராமி கடைக்கண்களே".*

எனது மச்சாள் மணிமேகலை புண்ணியம் எங்கள் குலதெய்வம் சிவகாமியின் ஒரு அடியாள் என்பதை எமது சமூகம் நல்லாக அறியும். இவ ஒரு சிவகாமி வழி முற்றிலும் தெரிந்த ஒரு அடியாள் இவவினது இழப்பு எமது ஆலயத்திற்கு ஒரு பேரிழப்பாகும் என்பதை யாரும் மறுக்க முடியாது நான் மேல் குறிப்பிட்ட அபிராமி அந்தபதிப்பாடலில் அபிராமிப்பட்டர் சொன்னது போல் எமது மச்சாளிற்கு தனம், கல்வி, ஒரு நாளும் தளவரியா மனம் தெய்வ வடிவு, நெஞ்சில் வஞ்சமில்லாத மனம், போன்ற அத்தனை பண்புகளையும் நாம் என்றும் வணங்கும் எங்கள் குலதெய்வம் சிவகாமி கொடுத்து, இன்று எம்மிடம் இல்லாது பிரித்து தன்னிடம் சேர்ந்து விட்டாள்.

நான் இந்த வேளையின் ஒரு சிறிய நிகழ்வினை குறிப்பிட்ட விரும்புகிறேன். அவவினது தளர் அறியாத மனத்தினுள் எம்சிவகாமி புகுந்து எனக்கு ஒரு கடிதம் எழுதிகு சித்திரை மாதம் 1999ல் அவ அக்கடிதத்தில் குறிப்பிட்டதாவது.

"தம்பி நீங்கள் படித்து பட்டம் பெற்றவர்கள்" பலபரிசுகள் பெற்றவர்கள் எல்லோராலும் மதிக்கப்படுவர்களும். பாராட்டப்படுபவர்களும் கூட, எனவே நீங்கள் தான் இக்கோவிலை திரும்பவும் புனருத்தாரனம் செய்து கும்பாபிஷேகம் செய்வதற்குரிய வழிவகை செய்தல் வேண்டும்.



இதற்கு நீர் கட்டாயம் இலங்கை வந்து கோவில் நிலைப்பாடுகளை பார்த்து உடனடியாக அவற்றிற்கு உரிய ஒழுங்குகளை செய்தல் வேண்டும்.

இதன் பிரகாரம் மற்றும் பல கோவிலின் முன்னேற்றத்தில் அக்கறை உள்ள அன்பர்களின் வேண்டுதலில் ஆனி மாதம் 1999ல் எங்கள் கோவிலிற்கு நான் வந்தேன். நாம் வந்ததையிட்டு அவகளுக்கு இருந்த ஆனந்தம் என்னால் விபரிக்க முடியாது. அதேவேளை அவ சொன்னா "தம்பி நீர் கட்டாயம் சிவஞான மாமாவையும் மாமியையும் திரும்பவும் இங்கு வந்து இருப்பதற்கும், கோவிலினை பார்ப்பதற்கும் அனுப்பி வையும் நான் அவர்களை பார்த்துக் கொள்வேன்". அச்சொல் நிறைவேற்றப்பட்டதை எமது உறவினர் அறிவார்கள்.

இதுமட்டுமல்லாது கோவில் பாலஸ்தாபனம் செய்த பின் ஒரு சிவன் கோவிலில் எப்படிப்பட்ட பரிவாரமூர்த்திகள் இருத்தல் வேண்டும், எமது கோவிலின் மூர்த்திகள் வைத்தல் வேண்டும் என்று சிந்தித்து தட்சணாமூர்த்தி நால்வர் சோமஸ்கந்தர் கோவில்களை கட்டுவதற்கு தனது மகனையும் மைத்துனர்களையும் அக்கோவில்கள் கட்டும் பொறுப்பினை ஏற்கும்படி எங்களுக்கு செய்த தெய்வவடிவு எமது மச்சாள் மணிமேகலை புண்ணியத்தினை சாரும்.

தட்சணா மூர்த்தியினை ஏன் சிவன் மூலஸ்தானத்தின் அருகில் தெற்கு பக்கம் பார்க்க வைத்தல் வேண்டும் என்ற விளக்கமானது "தட்சணாமூர்த்தி நால்வருக்கும் குரு உபதேசம்" செய்தார். ஆதலினால் தான் தமிழில் திருமுறைகள் படைக்கப்பட்டன. அதே வேளை வியாழபகை உள்ளவர்கள் தட்சணாமூர்த்தியினை வழிபாட்டால் தான் வியாழபகை மாறும் என்ற சைவசித்தாந்தங்களை எமக்கு உணர்வித்து, எமது கோவில் ஒரு முழுமையான சிவன் ஆலயம் திகழ வேண்டும் என்று முழுமனத்துடன் உண்மையாக அயராது பணிபுரிந்த பெருமை மறைந்த எமது மச்சாள் மணிமேகலை புண்ணியத்திற்கே சாரும்.

ஆத்தாள் சிவகாம சுந்தரி எங்கள் மணிமேகலை புண்ணியத்தினை வருகின்ற வருஷம் ஆவணி மாதம் 2003ல் நடக்கும் கும்பாபிஷேகத்தினை எங்களுடன் இருந்து பார்க்கவிடாது தங்களுடனேயே தங்கள் அடியில் இருந்து பார்த்து ஆனந்தம் அடைய வைத்து விட்டார்! எங்களை வியப்படைய வைத்து விட்டாள்...!!

இதுவும் அன்னை சிவகாமியின் திருவிளையாடல் என்பது எனது கருத்து.

"ஆத்தாளை எங்கள் அபிராமவல்லியை அண்டமெமைக்
பூத்தாளை மாதுளம் பூ நிறத்தாளை புவி அடங்க
காத்தாளை அங்குச் பாசாங்குசமும் கரும்பும் அங்கயிற்
சேர்ந்தாளை முக்கண்ணியைத் தொழுவார்க்கு ஒரு தீங்கு இல்லையே."

ஓம் சாந்தி
சிவாகாமி துணை.

# ஆருயிரே என் அக்கா!

77/2 May Field Road,
Colombo-13

அக்கா நீ இறந்து விட்டாய் என்று செய்தி கேட்கவே என் மனம் ஏற்க மறுத்தது. இது கனவா இருக்கக் கூடாதா என்று அக் கணத்தில் நினைத்தேன். பிறப்பு என்ற ஒன்றிற்கு இறப்பு என்ற ஒன்றும் உள்ளது தானே? இதை மாற்றுவது யார்?

மனித வாழ்வின் நிலையற்ற தன்மையை ஞாபகப்படுத்தி நீ அடிக்கடி பாடுவாயே "இப்பவோ... பின்னையோ... சற்று நேரத்திலோ..." என்று அந்த சற்று நேரத்திலா உன் மரணம் சம்பவித்தது. அக்கா நீ வாழ்ந்த காலங்களைக் காட்டிலும் நீ எப்படி வாழ்ந்தாய் என்பதை எங்கள் சமூகம் நன்கறியும்.

"உண்டுண்டு உறங்குவதைக் கண்ட தேயல்லாது ஒரு பயனைடைந்திலேனே..." என்று அன்னை சிவகாமியைத் தொழுதழுது பாடுவாயே... அந்த வகையில் நீ வாழ்ந்த லட்சிய வாழ்க்கையின் பயனை அடைந்து விட்டாய் அக்கா... அடைந்து விட்டாய் அக்கா..

மணிமேகலை எனும் நாமம் அமைந்தது போல மணியான கலைகள் மூலம் தந்தையின் மணமேடைத் தொழிலுக்கு அடித்தளம் அமைத்தாயே. நம்சுற்றம் வாழ வேண்டும் என்று அவர்கள் வாழ



நல்வழி சமைத்தாயே. எங்கள் கோவிலும் அழகுற மிளிரச் செய்ய வேண்டும் என்று அல்லும் பகலும் அயராது உழைத்தாயே. உன் சகோதரங்களுக்கு இடர்கள் வந்துள்ள போதெல்லாம் மாதா, பிதா, குருவாக இருந்து நெறி நின்று வழி நடத்துவாயே. நீ ஒவ்வொரு செயலிலும். நீ சொல்லும் பாடல்கள், பழமொழிகள், நீதி நூல்களை இனி நாங்கள் யார் வாயால் கேட்பது. நீ ஒரு அறிவுச் சுரங்கம்! நீ ஒரு தீர்க்கதரிசி! நீ ஒரு தெய்வப்படிவம்! உன் இலக்குகள் எப்போதும் குறிதவறாதவை! இப்படி பல்துறையிலும் புலமை பெற்ற உன்னை மட்டுமல்ல உனக்குள் புதைந்த அத்தனையும் இழந்து விட்டோம் எனும் போது எம் நெஞ்சமெல்லாம் நினைந்து நினைந்து உருகின்றது. எங்கள் கண்கள் கண்ணீரால் குளமாகின்றன.

"திருவாசகத்தில் உருகிநின்ற உன்னை
மணிவாசகர் பெருநாளிலேயே ஏற்றுக்கொண்டார்களே"

பூமாலையுடன் கூடிய புகழ்மாலையுடன், மானுடத்தை வென்ற மரணத்துள் நீ மறைந்துவிட்டாய். உன் மானுடம் வென்றதம்மா...!

ஒருத்தனே உன்னை ஓலமிட்டவறி நான்
உலகெலாம் தேடியுங்கானேன்.

..........என்று மணிவாசகர் பாடியது போல நீ எங்கு சென்றுவிட்டாய்....? கண்ணின் மணியாக கணவரையும் பிள்ளைகளையும் பேரப்பிள்ளைகளையும் காப்பாற்றினாயே! அவர்களைப்பிரிந்து எங்கே சென்றாய்? தேடுகின்றோம் வாடுகின்றோம்.

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர் வான் உறையும் தெய்வத்துள் வைக்கப்படும்-" எனும் கூற்றுக்கிணங்க தெய்வமாக நின்று அன்னை சிவகாமி சமேத சிதம்பரேஸ்வரர் பாதரா விந்தந்தில் சரணடைந்து நம்மையெல்லாம் நெறிநின்று வழி நடத்தி வாழ வழி சமைப்பாய் என இறைஞ்சுகின்றோம்.

ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி

**தங்கை:- கலாநிதி**
**மைத்துனர்:-நடேசலிங்கம்**
**பெறாமக்கள்-தாரணி, வர்சினி, வாகிசன்**

# நல்லற நங்கை

திருமதி மணிமேகலை புண்ணியம் அவர்கள் திடீரென இறைபதம் அடைந்து விட்டார்கள் என்ற செய்தி கேட்டு அதிர்ச்சியும் கவலையும் அடைந்தேன். அந்தத்துன்பகரமான செய்தியை ஏற்க எனது மனம் மிகவும் கலங்கியது. இவர் எம்மை விட்டு பிரிந்து விட்டார் என்பதை என்னால் எண்ணிப்பார்க்க முடியவில்லை.

பதிபக்தி, இறைபக்தி, சமய ஆசாரா ஒழுக்கம், விருந்தினரை வரவேற்று உபசரிக்கும் பண்பு, தானமும் தருமமும் செய்யும் சிறந்த பண்பாடு சமதர்ம நோக்கு, பொறை அழுக்காறின்மை. திறந்த மனம். இத்தனைக்கும் இலக்கணமாய் வாழ்வாங்கு வாழ்ந்து பெண்குலத்துக்கே பெருமை தேடியவர் இவராகும்.

இவ்வாறான உயர் பண்புகள் நிறைந்தவர் ஆயிரத்தில் ஒருவரே! நகைச்சுவையோடு மலர்ந்த முகத்துடன் உரையாடி எல்லோரையும் மகிழ்விக்கும் தனிப் பண்புடையவர். அன்னாரின் ஜீவாத்மா நித்தியானந்த சாந்தி நிலை எய்தவேண்டுமென பரம்பொருளின் திருவருளை உளமார வேண்டிப் பிரார்த்திப்போமாக.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

உடுவில்
சுண்ணாகம்

சமூகயோதி
கா.கணேசதாசன் J.P
ஓய்வுப்பெற்ற அதிபர்

# தன்நலன் கருதாப் பெருந்தகை

**சிவஞானம் சிவசோதியின் அநுதாபச் செய்தி**

நீ நாளும் நன்னெஞ்சே
நினை கண்டாய் யாரறிவார்
சா நாளும் வாழ் நாளும்
சாய் காட் பெம் பெருமாற்கே
பூ நாளும் தலை சுமப்பப்



புகழ் நாமம் செவி கேட்ப
நா நாளும் நவின்றேத்தப்
பெறலாமே நல்வினையே -(திருஞான சம்பந்தர்)

வாழ்நாள் முழுவதும் தன்பணி தன் குடும்பத்துக்கு மட்டு என்றிருந்து விடாது, தன்னை எங்கள் குல தெய்வமாம் சிவகாமி சுந்தரிக்கும் சிதம்பரரேஸ்வரப் பெருமானுக்குமாய் பணிசெய்து விட்டு இறைவனடி சென்றுவிட்ட மணிமேகலை புண்ணியம் அவர்களை எங்கள் குடும்பம் எண்ணிப்பார்க்கின்றது ~~மணிமேகலை~~! மணிமேகலை புண்ணியம் எங்களது அன்புக்கும் பண்புக்கும் உரிய எங்கள் பெற்றோர்களுக்கு ஒரு மகளாய் எங்களுக்கெல்லாம் பாசமிகு மச்சாளாய் இருந்து எங்களின் குடும்ப சுகதுக்கங்கள் அனைத்திலும் தன்னையும் தன்குடும்பத்தையும் முழுதாய் ஈடுபடுத்தி தன்னுடைய பாசத்தையும் பண்பையும், அன்பையும் பகிர்ந்து கொண்டதை எண்ணி பார்க்கின்றோம். சூழ்நிலைகாரணமாக நாங்கள் புலம் பெயர்ந்த பின் எங்கள் பெற்றோர்க்கு உறுதுணையாய் அவர்களின் நலனில் அக்கறையுடன் இருந்ததை எண்ணிபார்க்கின்றோம். எங்களது தாயாருக்கு உறுதுணையாய் இருந்ததை எண்ணிப்பார்க்கின்றோம். எங்களுக்கு பெண் சகோதரம் இல்லாத போதும் எங்களது அம்மா பாசத்துடன் தான் பெற்ற மகள் போல் அழைத்ததை எண்ணிப்பார்க்கின்றோம்.

இதனால் தான் எங்களது தாயார் சொன்னார் "மணியாரின் இழப்பு கவலை இல்லை மகனே தாங்க முடியாத வேதனை" என்று ஒரு குடும்பப் பெண் எப்படி வாழ வேண்டும் என்பதிலும் ஒரு மனிதம் எப்படி இவ்வுலகில் வாழ வேண்டும் என்பதனையும் எங்கள் முன் வாழ்ந்து காட்டி சென்ற இவ்வளவு சிறப்புக்களும் மனிதப் பண்புகளும் கொண்ட எங்கள் அன்புக்கும் பாசத்துக்கும் உரித்தான மச்சாள் என்றென்றும் எம்குல தெய்வங்களாம் சிவகாமியினதும் சிதம்பரேஸ்வரத்தானிததும் திருவடிகளில் இருப்பாள் என்பதில் ஐயமில்லை.

எல்லாம் சிவமயம்

இப்படிக்கு
திருமதி.தையல்நாயகி சிவஞானம்,
சிவபாலன், சிவநேசன், சிவபாதம், சிவயோகர்,
சிவசோதி சிவநாதன் குடும்பங்கள்.
கந்தையா சிவஞானம் குடும்பம்.

## சிற்றம்பலம் நாடிச் சிவனை அடைந்தனையோ?

வீற்றிருந்தாள் அன்னை, வீதி தனிலிருந்தாள்
நேற்றிருந்தாள், இன்று வெந்து நீறானாள்~பாற்றெழிக்க
எல்லாரும் வாருங்கள் ஏதென்றிரங்காமல்
எல்லாம் *சிவமயமேயாம்* ~ (பட்டினத்தார் பாடல்கள்)

தாயாக என்னைத் தாபரித்த அக்காவே! எங்கட தங்கச்சி என்றன்பாய்யழைப்பாயே! இக்குரலை இனி எப்பிறப்பில் கேட்பேன் அக்கா. என் குடும்பத்தை முன்னேற்ற நீ செய்தவை ஒன்றா இரண்டா எடுத்துச் சொல்ல. என் கணவர் நோயுற்றிருந்த வேளையில் நீ சொன்னாய் "தங்கச்சி பாலசோதிடம்விருத்த வைத்தியம்" என்று அநுபவமுள்ள வைத்தியரிடம் தான் காட்டவேண்டும் எனக்காட்டி என் குடும்பபாரம் தீர்த்தாயே. எம் அம்மா இறந்தபோது வணங்கா முடியான எம் தந்தையை அடக்கி அத்தனை காரியங்களையும் ஆண் மகனைப் போவல் ஆற்றினாயே! இவையெல்லாம் செய்த நீ பூவுலக வாழ்க்கை போதுமென நினைத்தா.

வெற்றம்பலம் தேடி வீணேயலையாமல் நீ
சிற்றம்பலம் நாடி *சிவனையடைந்தாய்!*

என் மூத்த மகளை முறையாக வாழ வைத்தாய், சங்கீதத்தில் பெரு விருப்பு கொண்டதனால் என் இளைய மகளை சங்கீதம் பயில வைத்தாய் முறையாய் பயிற்று முடித்து வைக்கு முன்னே இடையில் ஏனோ எமைப்பிரிந்து சென்றுவிட்டாய். கொழு கொம்பாக நின்ற உன்னைப் பற்றிப் படர்ந்தோமே! என்ன தவம் செய்தோம் உனை மூத்தவளாய் நாமடைய! சுமைதாங்கியாய் எமைத் தாங்கினாய்! ஆலமரத்தின் கீழ் நின்ற நம்மை ஆலமரமே வேரொடு சாய்ந்தது போல் இந்த வேதனையைத் தந்தாய் ஏனோ! தாங்க முடியவில்லையே! நம்மால் நீ வளர்த்த பிள்ளையின் திருமணத்தைப் பார்ப்பதற்கு காலம் கனியவில்லை என்றாயே! காலம் கனிவதற்குள் கனப் பொழுதில் எல்லாவற்றையும் விட்டுவிட்டு பாயில் படுக்காமல் நோயில் வாடாமல்

தூக்கிய காலும் துடியிடையும் பாரேனோ!
தாக்கும் முயலகன் தாண்டவத்தைப் பாரோனோ!

என்று



ஆடிய பாதனின் ஆனந்த நாளில், அன்னை சிவகாமியின் அடியினைப் பற்றி பறந்து விட்டாய்! சுற்றி நின்று கதறும் சுற்றத்தை உன் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

தங்கை சரோஜினிதேவி
மைத்துனர் தர்மலிங்கம்
பெறாமக்கள் தனலட்சுமி, சத்தியவாணி,
பரஞ்சோதி, சத்தியாமூர்த்தி

## மறைந்தாயோ மணிமச்சாள் நம்பமுடியவில்லை...

இறப்பு இயற்கையானது இது நம்மில் யாருக்கும் வெரும் இயல்பு யாமெல்லாம் தெரிந்து இருந்தும் நாம் வாசல் வரும்போது பகுத்தறிவு பயனற்று போகிறது. நமக்கேது இது நடந்தது என்று பகுத்து வகுத்து எப்படித்தான் பார்த்தாலும் யாம் ஏது கண்டோம்? கண்டு கொண்டோம் அல்ல.

அத்தாச்சி என்று அன்போடு அழைத்திருப்பேன். நம்குறையெல்லாம் சொல்லி வழிகேட்டு நின்றுருப்பேன். நமது இளமைப் பருவத்தில் அவர் நமக்கெல்லாம் ஒரு ஆத்மீக வழிகாட்டி! சமயத்தத்துவங்களும் போதனைகளும் அவை தந்த பாடங்கள். அம்மாவும் அப்பாவும் மணியர் என்று மிக அன்பாக அழைத்திடுவர். எப்போது கடிதம் நீர் எழுதினாலும் அப்போதெல்லாம் சிவகாமியைப் பற்றி நீ சொல்லவே மறப்பதில்லை. அண்மையில் கூட தம்பி நீங்கள் என்று அன்பான ஒரு கட்டளை போட்டீர்கள். நாம் தட்டியதே இல்லை.

தமிழ் பெரும் காப்பியங்களில் உன் பெயர்! அதே போல் நாம் குடும்பக் காவியங்களிலெல்லாம் உன் பெயரை பதிட்டாய். ஞாயிறு முதல் சனி வரை நாமுக்கொரு விரதமிருப்பாய் அன்று நமக்கது என்ன என்று புரியவில்லை ஆனால் இன்று நீ எமக்கெல்லாம் சொல்லாமல் போன போது விளங்குகின்றது. அம்மையும் அப்பனும் உன் கூற்றை செவிசாய்க்க நீ வழி செய்தாய் போதும்.

"அன்பா எமது அருமை மைத்துனியே!
தூரத்துத்து தண்ணீர் தாகத்திற்கு உதவாது"

-என்பார்களே அதுவா எமக்கெல்லாம் சொல்லாமல் உனக்குரிய பாணியில் நீயே முடிவு கொண்டாய் பொறுக்குதில்லை மனம் பொறுக்குதில்லை என்று தான் ஆறுமோ.

உம் நெற்றியில் அழியாத வெண்ணீறும் குங்குமப் பொட்டும் எம் நினைவில் என்றுமே வாழுதம்மா. தம்பி என்று சொல்லுவாயே புன்சிரிப்புடன் யார் இனி கூப்பிடுவார் எம்மை. எமக்கென்று அக்கா இல்லாவிட்டாலும் மைத்துனியே நீர் எமக்கு பெரிய அக்கா அல்லவா.

உமது மறைவு எமக்கெல்லாம் பேரிழப்பு உனது எண்ணங்கள் என்றுமே எமது வழி விளக்கு! அன்பான மைத்துனியே! உன் ஆத்மசாந்திக்கு அம்மையும் அப்பனும் என்று அருள்புரிவார்கள்.

"ஊரெல்லாம் கூடி ஒலிக்க அழுதிட்டு
பேரினை நீக்கி பிணமென்டு பேரிட்டுச்
சூரையாங் காட்டை கொண்டு போய் கூட்டிட்டு
நீரினால் மூழ்கி நினைப்பொழிந்தார்களே"

-திருமந்திரம்

இங்ஙனம்
கிருஸ்ண மூர்த்தி நீலகண்டர்,
இராமசாமி நீலகண்டர்
கனடா.

## உன் வார்த்தை என் காதில் இனிக்குதக்கா

அன்புள்ள அத்தான், தாசன்-பாமினி, பவா-செல்வம், பேரப்பிள்ளைகள்

இந்த திடீர் மறைவு எல்லோரையும் மிகவும் மனவேதனையில் ஆழ்த்தியுள்ளது. மனைவியை, அம்மாவை, மாமியை, பேத்தியை இழந்து நிற்கும் உங்களுக்கு என்னால் என்ன கூற முடியும். என் ஆறுதல் வார்த்தைகள் தான் என் செய்யும். எங்கள் குடும்பத்திற்கு ஒரு தலைவியாக இருந்து எங்களை எல்லாம் வளர்த்தாயே! உன் இழப்பு எங்களால் தாங்கள்முடியவில்லை அக்கா. இடர்கள் வருங்கால்



உன் அறிவால் எல்லோரையும் வழிகாட்டினாயே, இப்போ நீ எங்கே? நீ சொல்லாமல் மறைந்ததுதான் ஏனோ?

அக்கா, நீ எனக்கு அம்மாவாக வழிகாட்டினாய் பல்கலைக்கழகம் முதல், என் மணவாழ்க்கைவரை நீ செய்த உதவிக்கு நான் செய்யும் கைமாறுதான் என்ன, உன் இறுதிக்கிரிகைகளிலும் பங்கேற்க முடியாமல் போனதுதானா? உன் வருத்தம் அறிந்து ஆறுதல் சொன்னாய் என்வருத்தம் தெரியாமல் நீ மடிந்தாய் உன்னுருவம் என்மனதில் ஒளியாகத் திகழ்கிறது.

அக்கா! நிலா முற்றத்தில் உன்னிடம் கேட்ட நீதிக் கதைகள், வெண்பாக்கள், நீதி நூல், நல்வழி இவையெல்லாம் என் நெஞ்சை உதைத்தன. "நண்டு சிப்பி வேய்கதலி நாசமுறும் காலத்தில் கொண்ட....." என்பாயே உன்மறைவுக்குப்பின் நீ விட்டுச்சென்றதுதான் என்ன. உன் இளைய பேத்தியா?

அக்கா! திருவாசகம் என்றதும் நீ உருகுவாயே! உன்னறிவால் பகுத்துணர்ந்த அவ்வறிவை எங்களுக்கும் பகிர்ந்தளிப்பாய். "நாடகத்தால் உன் அடியார்..." என்று ஓதுவாயே!, அக்கா! நீ மறைந்ததும் ஓர் நாடகம் தானே...!

"வெள்ளி முதல் சனிவரையும் என் வீட்டிலும் ஒலித்ததம்மா ஓர்வாசகம்", கேட்டதுவா உன்காதிற்கு, உன்பிரிவு தாங்காமல் புலம்புகின்றோம் நாங்கள் புலம்புகின்றோம் நாங்கள்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

39, Kingslalnd Road,
Berala NSW 2141,
Australia.

உன் பிரிவால் அல்லுறும்
தம்பி வனதேவா, மச்சாள் கனகேஸ்வரி
மருமக்கள் சஜீவன், நிதர்ஷா.

## உதித்த நாவற்கரைச்சியில் உதிர்ந்த தலைமகள் மணிமேகலை மலர்

"அரிது அரிது மாணிடராதல் அரிது" என்பது ஔவையின் பொன் மொழி. தாய் பிரசவித்த அதே மண்ணில் சிவப்பேறெய்தி விண்ணுலகம் சேரும் பாக்கியம் பெற்று, இந்த மண்ணில் வரலாற்று நாயகியாக நற்கதிபெறும் நிலை எல்லா மனிதருக்கும் கிட்டுவதில்லை.

மணற்காட்டு முத்துமாரி அம்மனுக்கு உச்சிக்காலப் பூசைக்கென நெற்காணி உவந்தளித்த பூதன் கந்தன் என்ற தலைமகனின் வழித்தோன்றல்களாக வந்துதித்த தலைமகள்கள் தெய்வி, அமராபதி, சின்னாச்சி, சின்னம்மா, பாக்கியம், மணிமேகலை, பங்கயற்செல்வி, கீர்த்தனா என்போராவர். இவர்கள் அனைவரும் நெருஞ்சியடைப்பு நாவற்கரைச்சியை வாழ்விடமாக்கி வாழ்ந்தவர்கள், வாழ்கின்றவர்கள். இந்த மண்ணின் படைப்பில் வளர்ந்த இலுப்பை விருட்சத்திலே ஓங்காரத்தின் உட் பொருளாய், சோதி சொரூபனான இறைவன் பேரொளி பர்பினான் எனும் வழிவழி வரலாறு உண்மையானது தான் வாழ்ந்தகாலத்தில் இவ்விருட்சம் தன் உயிர்த்தன்மையை இழக்குமன்றோ! அதனருகில் வரலாற்றை எடுத்தியம்ப நாவல்விருட்சம் உண்டாக்கி வைத்தா தெய்வீக நாயகியான மணிமேகலை.

மணி மண்ணில் உதித்த அன்று ஒலித்த குரல் இன்றும் எமது காதில் ஒலிக்கிறது. என் மணி எங்கே? எனக் கணவர் கதறவும், “தனி மரமாக்கி விட்டேனே” என மகளார் புலம்பவும், அத்மா பிரிந்த கூட்டுக்கு அபிஷேகம் செய்யும் காட்சி கண்டு கொள்ள நாவற்கரைச்சியை தனிமையில் எவ்வாறு அடைந்தேன் என்பது தெய்வீகமானது. விளக்குதற்கரியது அதுவே உறவு. “மனிதனின் ஆத்மா இறைவசனின் பொறி” அணுவைப் போன்றது இவ்வுலகிலே மூப்பினாலும் நோயினாலும் துன்புறுவோருக்கு கிடைக்காத பேறு. தான தருமங்கள் இயற்றி தன்னுள் உறை தெய்வகத்தினை வெளிப்படுத்தி தெய்வீகமானார் “மணிமேகலை” என்ற உண்மையை இப்புவிவாழ்வை அணைவரும் உணருவோமாக! மருமகள் மணிமேகலையின் ஆத்மா பூரணத்துவ சாந்திபெறப் பிரார்த்திப்போமாக

ஓம்! ஓம்! ஓம்!

*ஓம்*
*பூர் புவஸ் ஸுருவக*
*தத்சவிதுர் வரேண்யம்*
*பர்கோ தேவஸ்ய தீமஹி*
*த்யோயோநு: பிரசோதயாத்*

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

**நெருஞ்சியடைப்பு,** **மு.க.முருகையா**
**நாவற்கரைச்சி,** **ஓய்வு பெற்ற கூட்டுறவு அபிவிருத்தி**
**காரைநகர்,** **உதவி ஆணையாளர்.**



# எங்கள் வாழ்வின் ஒளி விளக்கு!


அக்கா வென்று அழைக்க மூத்தவளாய் வந்தவளே! பெரியக்கா! அக்கா எனுஞ் சொல்லிற்கு இலக்கணமாய் அமைந்தவளே! பெரியக்கா! அக்கா என அழைத்த வாய்களை அடக்கிவிட்டு மறைந்தனையே பெரியக்கா! எங்கள் வாழ்க்கைக்கு வழி சமைத்து வைத்தவளே! பெரியக்கா!

முன்னவளாய் எச்செயலும் ஆற்றி நின்று சரியாகக் கருமங்கள் முறை முறையாய் செய்வாயே! மூத்தவளே! பெரியக்கா! எங்கள் மணியக்கா! எம்மை(களை) விட்டுப் பிரிவதற்கு எம்மை(களை) வந்து கண்டு சென்றாய்? உன் நடைதான் (என்) எங்கள் கண்களில் எந் நேரமுந் தோன்றி மறையுதக்கா! நல்லன பேசியநீ! நல்லன செய்தநீ! நமையாளும் சிவகாமியின் பாதார விந்தங்களை அடைந்தனையே! நோய்க்கு மருந்து போல் மனித வாழ்க்கைக்கு மருந்தானவளே! மணியக்கா! (என்) எங்கள் மயக்கம் தெழிய மறுகால் இப்பூமியில் வாராயோ? உன்பிரிவால் வாடும் உன் கொழுந்தனார், பிள்ளைகட்கு ஒருவார்த்தை சொல்ல வருவதெப்போ?

உன் ஆத்மா சாந்தி பெறட்டும்!

**தங்கைகள்**
**சிவகாமி ஐயம்பிள்ளை-காரைநகர்**
**தங்கம்மா இராசேந்தரம்-காரைநகர்**
**சிவகளை (சிவம்) மகாதேவன்-வவுனியா**
**தம்பி சிவசுப்பிரமணியம்-லண்டன்**

# வம்சக் கொடி



சின்னத்துரை + பாக்கியம்
அரியகுட்டி + பெரியபிள்ளை
மணிமேகலை
சரோஜினிதேவி
வனதேவா
கலாநிதி
சின்னத்துரை + இலட்சுமி
செல்லம்மா + சுந்தரம் (காலமானவர்)
செல்வத்துரை + நல்லம்மா
ஐயாத்துரை + பராசக்தி (காலமானவர்கள்)
புண்ணியம்
செல்லமுத்து + சண்முகம்
கிருஸ்ணதாசன் + பாமினி
பிரியங்கா
அபிராமி
பங்கயற்செல்வி + ஆறுமுகதாசன்
கீர்த்தனா
மயூரகீர்த்தன்
பவப்பிரியா



# நன்றி நவில்கிறோம்.



எங்களது குடும்ப தீபம், அன்புத் தெய்வம் மணிமேகலை அவர்கள், காலன் கைப்பட்ட வேளை, பல ஊர்களில் வாழ்ந்த உற்றவர்களும், ஊரவர்களும், அன்பர்களும், எங்கள் தெய்வத்தின் செய்தி அறிந்து வந்து பல வகையாலும் உதவிபுரிந்து உதவியவர்களிற்கும், வீடிருந்து காடுவரை வந்து எங்கள் தெய்வத்தின் அஸ்தி எடுத்தல், மேலும் அந்தியேட்டிக் கிரியை, 31ம் நாள் இல்ல நிகழ்வுகள் யாவற்றிலுங் கலந்து சிறப்பித்தவர்களாகிய எல்லோர்க்கும், மேலும் இந்நூலை தனது ஆக்கங்களாலும். திருமுறைதொகுதிகளினாலும், நல்ல கருத்துச் செறிவுடையதாய் ஆக்கி உதவிய காரையூர் பொன் கோபால் ஐயா அவர்கட்கும், நூலை அழகுற அச்சிட்டு உதவிய சண்முகா அச்சகத்தாருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

கணவர் அ.புண்ணியம்,
மகள்-மகன்-மருமகன்
பேரப்பிள்ளைகள்

சண்முகா அச்சகம், கோவிற்புதுக்குளம் வவுனியா. தொ.பே: 024-20240